ஜூலை 01 - 07, 2007 July 01 - 07, 2007 பக்கங்கள் - 28 20.00

# ஆட்டம் காணும் அரசில் தனிமரமாகும் மஹிந்த!

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
சுடர் ஒளி
வார மலர்
සුඩර් ඔළි
THE SUDAR OLI

## வர்த்தமானியூடாகவும் வன்முறைகள்



# சர்வதேசத்தின் அணுகுமுறைகள் பேச்சையா, யுத்தத்தையா கொண்டுவரும்?

# சர்வதேசத்தின் புதிய அணுகுமுறைகள்

## பேச்சையா? யுத்தத்தையா? கொண்டுவரும்

# தமிழ்ச்செல்வனின் கருத்து

## அனைத்துலகின் காதில் விழுமா?

இலங்கை மோதல்களில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பு மௌனமாக, அமைதி பேணிவரும் நிலையில் -

மறுதரப்பு அந்தப் பிரதேசத்தைப் பிடித்துவிட்டோம், இந்தப் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டோம். இத்தனை விடுதலைப் புலிகளைக் கொன்றுவிட்டோம், எனப் பகிரங்கமாக தெற்கிலும் அரங்கேறிவரும் இச்சூழல் பயங்கரமான ஒரு நிலையைத் தோற்றுவிக்கும் என எச்சரிக்கப்படுகின்றது.

தெற்கில் மட்டுமல்ல வடக்குக் கிழக்கில் கடந்த ஆறு மாதங்களில் நூற்றுக்கு மேற்பட்ட இனந்தெரியாத சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய சூழலில் தெற்கில் இயங்கிவந்த 700இற்கு மேற்பட்ட தொழிற்சாலைகளில் அரைவாசி மூடப்பட்டுவிட்டன. வெளிநாட்டு நாணயத்தை ஈட்டும் ஏற்றுமதிகள், உல்லாசப் பயணம் என்பன அதள பாதாளத்துக்கு சென்றுவிட்டன. உணவுப் பொருள்கள், எரிபொருள்களின் விலைகள்

கடந்த திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் ஒஸ்லோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் கூடி இலங்கைப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராயும் போது, தமிழ்ச்செல்வன் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமக்கு எதிராக பெரியளவிலான யுத்தம்

அறிவிப்புகளை விடுத்துவரும் நிலையில்-

சர்வதேசத்தின் கரிசனை என்றுமில்லாத அளவு இலங்கை மீது வீழ்ந்து நிற்கின்றது.

சர்வதேசத்தின் பிரசன்னத்தில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி கைச்சாத்தான போர்நிறுத்தம் இன்னும் முறியவில்லை. தொடர்ந்து பெயரளவில் இருக்கின்றது.

அந்த உடன்படிக்கையை முழுமையாகக் கடைப்பிடிப்பதாக இரு தரப்புகளும் அறிவித்துக்



கொண்டிருக்கின்றன.

ஆனால், இந்த உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பதாகக் கூறும் ஒரு தரப்பு அந்த உடன்படிக்கையின் சரத்துகளுக்கு மாறாக இராணுவ நடவடிக்கைகளையும் கைதுகளையும் ஆள்கடத்தல்களையும் தீவிரமாக்கிக் கொண்டிருக்கின்றது.

சமாதான காலத்துக்கு முன்னர் இருந்த இருண்ட சூழல் மீண்டும் தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

இனப்பிணக்கில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பை முற்றுமுழுதாக அழித்தொழிக்கும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்தரப்பைச் சேர்ந்தவர்களை மட்டுமல்லாது, அவர்களின் ஆதரவாளர்கள் என்று கூறி அப்பாவிகளைக் கொன்று குவித்தும் கைதுசெய்து சித்திரவதைகளுக்கு உட்படுத்தியும் கடத்தல்களை மேற்கொண்டும் பாரிய இன அழிப்பு ஒன்று அரங்கேற்றப்படுகின்றது.

கடந்த காலங்களில் இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதால், இளம் தலைமுறை விரும்பியோ விரும்பாமலோ தம்மைப் பாதுகாக்க அந்தத் தரப்புக்குள் தங்களைச் சங்கமமாக்கிய வரலாறு மறக்கப்பட முடியாதது. அந்த வரலாறு மீளவும் புதுப்பிக்கப்பட்டுவிட்டதா என்ற கேள்வியை நோக்கர்கள் எழுப்புகின்றனர்.

இத்தகைய சூழல் மீண்டும் இந்த நாட்டில் அமைதிச் சூழல் ஏற்பட வாய்ப்பாக அமையாது என எதிர்வு கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி

அடையாளம் காணமுடியாத நிலையில் இச்சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மீட்கப்பட்ட இச்சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் காணப்பட்டன என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

இச்சடலங்கள் சுட்டு வீசப்படுவதன் பின்னணியில் ஆயுதக் குழு ஒன்றுதான் இருக்கவேண்டும் என்ற சந்தேகமும் எழுப்பப்படுகின்றது.

இவற்றில் பெரும்பாலானவை கடத்திக் காணாமற் போனவர்களின் சடலங்களாகவே இருக்கவேண்டும் என ஊகங்கள் வெளியானபோதும், தொடர் விசாரணைகள் மேற் கொள்ளப்படாததால் அடையாளம் காணப்படாத சடலங்கள் என்று கதை முடிக்கப்படுகின்றது.



இத்தகைய போக்கு இந்த அரசு பதவியேற்ற காலத்தின் பின்பே தீவிரமாகியுள்ளது எனப் பல தரப்புகளிலும் இருந்து குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டபோதும் அச்சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதுடன் முடிந்துபோகின்றது.

இத்தகைய கொலைகள், கடத்தல்கள், கப்பம் கோரல் போன்றவை தொடர்பாக சர்வதேச மட்டத்தில் அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பும் நிலை தோன்றியுள்ளது.

மிக மோசமான மனித உரிமை மீறல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் உடன் அவற்றைக் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் சர்வதேசத்தில் இருந்து குரல்கள் வந்தபோதும் அதை கவனத்தில் எடுப்பதாகத் தகவல் இல்லை.

ஆணைக்குழுக்கள், விசாரணைக் குழுக்கள் எனப் பல அமைக்கப்பட்டு செயற்பட்டபோதும், அவற்றின் மூலம் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கோ குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கோ எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இதன் காரணமாக இத்தகைய செயற்பாடுகள் அதிகரித்துக்கொண்டு போகின்றன. இந்தநிலை சின்னஞ்சிறிய நாட்டுக்கு ஏற்புடையது அல்ல. அது மட்டுமல்ல நாட்டின் பொருளாதாரத்தையே சீரழித்து வருகிறது.

தினம் தினம் உயர்ந்து மக்களின் வாழ்க்கை நிலையைச் சீரழிக்கத் தொடங்கிவிட்டது.

வாழ்க்கைச் செலவு உயர்வை ஈடுசெய்ய முடியாது திண்டாடும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர், எடுக்கும் சம்பளம் அரை மாதத்தில் தீர்ந்து போகும் நிலையே உருவாகியுள்ளது.

பங்குச் சந்தைகள் சரியத் தொடங்கிவிட்டன. சம்பளம் வழங்க முடியாத நிலையில் திணைக்களங்கள் திண்டாடுகின்றன,

பொருளாதாரத் துறையில் மிக மோசமான நிலைக்கு சென்றுகொண்டிருப்பதை தடுக்க வழி உண்டா என்பதை ஆராய்வோம்.

2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரமுன் நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சி கண்டிருந்தது. எந்தநேரம் என்ன நடக்குமோ என்ற அச்சம் வடக்கு - கிழக்கு மக்கள் மத்தியில் மட்டுமல்லாது, தெற்கு மக்கள் மத்தியிலும் அப்போது நிலவியது.

ஒரு மோசமான இருண்ட சூழலில் இருந்து நாடு விடுபட்டு, மீண்டும் பொருளாதாரத் துறையில் வளர்ச்சி காண, தெற்கு - வடக்கு மக்களுக்கு இடையில் பரஸ்பர உறவு வளர உதவியது யுத்த நிறுத்த ஒப்பந்தம்.

அந்த ஒப்பந்தத்தை மீள முறைப்படி நடைமுறைப்படுத்துவதன் மூலம்தான் மீண்டும் 2002 ஆம் ஆண்டு காலச் சூழலை உருவாக்க முடியும்.

இந்த யதார்த்த நிலையைத்தான் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சர்வதேசத்துக்குத் தனது பேட்டி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நூற்றுக்கு நூறு வீதம் நடைமுறைப்படுத்தி, அமைதிப் பேச்சுக்கு வழிவிடுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அவர் சர்வதேசத்தைக் கோரியுள்ளார்.

அத்துடன், சர்வதேசம் ஆற்றக்கூடிய பயன்தரவல்ல செயற்பாடு என்னவெனில், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் சர்வதேசத்திடம் அவர் கேட்டுள்ளார்.

ஒன்று திணிக்கப்பட்ட நிலையில் தமிழ்ச்செல்வன் இந்தக் கோரிக்கையை சர்வதேசத்தின் முன் வைத்துள்ளார்.

யுத்தத்தில் தங்களுக்கு நாட்டமில்லை. சமாதானப் பேச்சுகள் மூலம் தீர்வு காண்பதில் நாம் இன்னமும் கரிசனையுடன் இருப்பதாக அவர் அச்செய்திமூலம் சர்வதேசத்துக்கு விடுத்துள்ளார்.

கடந்தவருட மாவீரர் தின உரையில், விடுதலைப்புலிகளின் தலைவர்



வே.பிரபாகரன், சிங்களத் தலைமைகளால் ஏமாற்றப்பட்ட நிலையில் மக்களுடன் இணைந்து சுயநிர்ணயப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய முடிவுக்கு வந்துள்ளோம் என்று தெரிவித்திருந்தார்.

அந்த உரை மூலம் சர்வதேசத்துக்கு விடுக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை மீண்டும் ஒருதடவை நினைவுபடுத்தும் வகையில் தமிழ்ச்செல்வனின் கருத்து இப்போது வந்துள்ளது.

தற்போதுள்ள நிலையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் பேச்சுக்கான வாய்ப்பை உருவாக்கவேண்டிய பொறுப்பை சர்வதேசத்தின் கைகளில் விடுதலைப் புலிகள் ஒப்படைத்துள்ளனர்.

சர்வதேசம் இந்த விவகாரம் குறித்து இருதினங்கள் ஆராய்ந்து சில முடிவுகளை எடுத்துள்ளன என அறியப்படுகின்றது.

அந்த முடிவுகளை சர்வதேசம் தனது அழுத்தங்கள் மூலம் செயற்படுத்துவதன் மூலமே நாட்டில் அமைதிச் சூழல் மீண்டும் திரும்பும். இல்லையேல் பேரழிவைத் தரும் யுத்தத்துக்கு நாட்டை இட்டுச் செல்வதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

சர்வதேசம் கடைப்பிடிக்கப்போகும் புதிய அணுகுமுறைகள் என்ன? அவை சமாதானத்தை நோக்கியதாக இருக்கப் போகின்றவா? யுத்தத்துக்கான பாதையைத் திறக்கக் கூடியவையாக இருக்கப் போகின்றனவா? இதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**யாழவன்**

# ஆட்டம் கண்டுள்ள அரசில் தனிமரமாகும் மஹிந்த

பௌத்த தீவிரவாதிகளினதும் ..ளபேரினவாதிகளினதும் ஆதரவுடன் ..சியையும் அதிகாரப் பதவியையும் ..றுக்கொண்டவர்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன் சந்திரிகாவுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்த ஜே.வி.பியினருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு தனது தேர்தல் பிரசாரத்தின்போது பிரசார பீரங்கியாகவும் ஜே.வி.பியினரையே பயன்படுத்தினார்.

இது மஹிந்தவின் முதலாவது தேர்தல் கூட்டு. இதனைத் தொடர்ந்து ஜாதிக ஹெல உறுமய , வாசு தேவநாணயக்கார உட்பட ..9 சிறு கட்சிகளுடனும் ..தொழிற்சங்கங்களுடனும் புரிந்துணர்வு ..ப்பந்தங்களைச் செய்துகொண்டார். ..தோடு நின்றுவிடவில்லை. அரசாங்க ..ழியர் சங்கங்கள் பலவுடனும் ..ந்தங்களைச் செய்தார்.


..ஒப்பந்தங்களை மட்டும் ..துகொள்ளவில்லை. அவர் (மஹிந்த) ..த்த வாக்குறுதிகளுக்கும் ..ாதங்களுக்கும் அளவே இல்லை.

..அவர் செய்துகொண்ட ஒப்பந்தப் ..பிரதிகளை ஏற்றுவதற்கு சில ..ட்ரக்வண்டிகளும், அளித்த ..வாக்குறுதிகளை ஏற்றிச்செல்ல பல ட்ரக் ..வண்டிகளும் தேவை என பல தேசிய ..த்திரிகைகள் கார்ட்டூன்களைப்போட்டு ..நையாண்டி செய்தன. மகிந்தவின் ..க்குறுதிகளும் கூட்டு ஒப்பந்தங்களும் ..க்கட்சியினரை மூக்கின்மேல் ..விரலைவைத்து சிந்திக்கவைத்து விட்டன.

..என்னடாப்பா இந்த மனிதர் ஜே.ஆர்.பாணியில் அதாவது ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் ..மாற்றுவதைத் தவிர சகல விடயங்களையும் ..செய்து காட்டுவேன் என்று கூறுகின்றாரே!




மங்கள சமரவீ..



ஸ்ரீபதி சூரிய ஆராச்..

இது சாத்தியப்படுமா?

'சர்வதேச மட்டத்தில் அறிமுகமான செல்வாக்குள்ள ரணிலுடன் போட்டியிடுகின்றோம். இவரை வெற்றிகொள்வது இலேசான காரியமல்ல. எனவே, வாய்க்கு வந்ததை எல்லாம் கூறுவோம். உண்மையை விட பொய்க்குத்தானே கவர்ச்சி அதிகம்'. இந்த யுக்தியை மகிந்த ராஜபக்ஷ கடைப்பிடித்தார்.



மஹிந்த ராஜபக்ஷ

சுவீப் டிக்கட் விழுந்ததுபோல் எதிர்க்கட்சியினரின் கூற்றின்படி புலிகளுடன் செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கையின் மூலம் வடக்கு கிழக்கு மக்களின் வாக்குப் பதிவு நடைபெறாத தினால் அதிர்ஷ்டம் இவருக்கு அடித்தது.

ஜனாதிபதியாகிவிட்டார். ஆனால், தான் கொடுத்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றுவது என விழி பிதுங்கி நின்றார். உடன் இருந்தவர்களும் மக்களுக்கு எப்படி முகம்கொடுப்பது என்று கேட்க ஆரம்பித்து விட்டனர்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலுக்கு முன் வாரிவீசிய வாக்குறுதிகளைப் பற்றியோ அல்லது மக்களைப் பற்றியோ சிந்திக்கத் தவறிவிட்டார். அவருடைய முழுக்கவனமும் தனது ஆறுவருட அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதிலேயே இருந்தது.

உடன் இருக்கும் அமைச்சர்களும் கட்சிப் பிரதானிகளும் கேள்விகேட்க ஆரம்பித்துவிட்டனர். இவர்களை நம்பமுடியாது. எனவே தனக்கு நம்பிக்கையானவர்கள் தேவை. வேறு வழியின்றி வெளிநாட்டுப் பிரஜைகளான கோட்டபாயவையும் பசில் ராஜபக்ஷவையும் உடனடியாக இறக்குமதி செய்து தனக்கு அடுத்த அதியுயர் பதவிகளில் அமர்த்திக்கொண்டார்.

இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலையில் ஜனாதிபதி செய்த முதலாவது முட்டாள்தனமான முடிவு இது.

அதன் பலனை இப்பொழுது ஜனாதிபதி மஹிந்த அனுபவிக்கின்றார் என ஸ்ரீ.ல.சு.கட்சியின் மூத்த உறுப்பினர்கள் வெதும்புகின்றனர்.

சர்வாதிகாரத்தால் உலகப் புகழ்பெற்ற ஹிட்லர், இடிஅமீன் ஆட்சியைப் போல் இலங்கை ஆட்சியும் மாறி வருகின்றது என வேதனைப் படுகின்றனர்.

இதுவரை காலமும் ஜனாதிபதிக்கு இருந்து வந்த ஒரே ஒரு பிரதான எதிரியாகவும் அச்சுறுத்தலாகவும் இருந்துவந்தது ரணில் தலைமையிலான ஐக்கியதேசிக் கட்சி மட்டுமே.

ஆனால், இன்றைய நிலை அப்படியல்ல. எதிர்க்கூட்டணியின் பட்டியல் நீண்டுவிட்டது.

ஐக்கியதேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜே.வி.பி. என்பனவற்றுடன் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டு கரங்களாக நின்று செயல்பட்ட முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீரவும் ஸ்ரீபதி சூரிய ஆராய்ச்சியும் ஆரம்பித் துள்ள ஸ்ரீ.ல.சு.கட்சியின் மக்கள் அணியும் உருவாகிவிட்டது.

காலங்காலமாக எதிரியாக இருப்பவனை விட நண்பனாக இருந்து எதிரியாக மாறியவன் ஆபத்தானவன் என்பதை மஹிந்த ராஜபக்ஷ உணரவேண்டும்.

தொடர்ந்தும் கொண்டு நடத்தமுடியாது. போதிய பொருளாதாரம் இல்லை என்பதால் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவன பங்குகளை மலேசிய கம்பனிக்கு விற்க அரசாங்கம் போட்ட திட்டத்தை ஸ்ரீபதி சூரிய ஆராய்ச்சி தவிடுபொடியாக்கிவிட்டார்.

தனி ஒரு மனிதனாக நின்று உயர் நீதிமன்றில் வழக்குத் தொடுத்து இடைக்கால தடை உத்தரவையும் பெற்றுவிட்டார். இப்பொழுது அவர் தனிமனிதர் அல்ல. அவரின் பின் மக்கள் அணி ஒன்று உருவாகியுள்ளது.

இதே பிரச்சினைக்கு ஜே.வி.பியினர் வேறு வகையில் விமர்சிக்கின்றனர். டெலிகொம் நிறுவன பங்குகளை வாங்கும் மலேசியக் கம்பெனியின் உரிமையாளர் ஒரு தமிழர். அதுவும் அவர் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். அதோடு, அவர் புலிகளின் தீவிர அனுதாபி. டெலிகொம் நிறுவனம் புலிகளின் கட்டுப்பாட்டிற்கு சென்றுவிடும்'' என துவேசத்தைக் கிளப்பிவிட்டனர். நாடெங்கிலும் போஸ்டர்களை ஒட்டி அட்டகாசம் பண்ணிவிட்டனர்.

டெலிகொம் நிறுவனம் தொடர்பாக இரண்டு பக்கத்திலும் விழுந்த அடி ஜனாதிபதிக்கு ஒரு பேரிடி.

இவற்றை எல்லாம்விட ஜனாதிபதி முகம்கொடுக்கவேண்டிய பல விடயங்கள் பூதாகாரமாக பயமுறுத்திக்கொண்டு இருக்கின்றன.

24 அரச முதலீட்டு நிறுவனங்கள் தொடர்பாக ஆளும்கட்சி உறுப்பினரான விஜயதாஸ ராஜபக்ஷ முன்வைத்துள்ள ஊழல்மோசடி தொடர்பான 'கோப்' இடைக்கால அறிக்கை. இந்த இடைக்கால அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் மோசடிகள் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கை.

**இரா.புத்திரசிகாமணி**

இரண்டாவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கென நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்பது.

மூன்றாவதாக ஜனாதிபதித் தேர்தலின்போது 400 மில்லியனை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கியது என்ற குற்றச்சாட்டு.

தமிழ்மக்களை பலவந்தமாக தலைநகரில் இருந்து நாடு கடத்தியமை, தமிழ்முஸ்லிம் வர்த்தகர்களைக் கடத்தி கோடிகோடியாக கப்பம் பெற்றமை.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து தமிழர்கள் கடத்தப்பட்டமை, கடத்திகொலை செய்யப்பட்டமை.

ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை. ஊடகவியலாளர் களையும் ஊடக நிறுவன அதிபர்களையும் சிறையில் அடைத்து சித்திரவதை செய்தமை, ஊடக சுதந்திரத்திற்கு வாய்ப்பூட்டு போட்டதுடன் மரண அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியமை. சுதந்திரமாக நடமாடித்திரியும் வெள்ளை வான்கள். இப்படி அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் வளர்ந்துகொண்டே போகின்றன.

பெரும்பாலான குற்றச்சாட்டுகளுடன் ஜனாதிபதிபதியின் சகோதரர் கோட்டபாய ராஜ பக்ஷவுக்கு நேரடித் தொடர்பு இருப்ப தாகவும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் கூறும் ஐ.தே.க., கோட்ட பாயவிற்கு எதிராக தாமே நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் எச்சரிக்கை விட்டுள்ளது.

இவை மட்டுமா ? எட்டிப் பிடிக்கமுடியாத அளவு உயர்ந்துவிட்ட வாழ்க்கைச் செலவு. விலைவாசி உயர்வு என்பனவற்றால் வெறுப்படைந்துள்ள பொதுமக்கள்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இங்கு நடைபெறும் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக ஐ.நா உட்பட சர்வதேச நாடுகளின் கண்டனம்.

இவை எல்லாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை திக்குமுக்காடவைத்து நிலை குலையச் செய்துள்ளன. ஜனாதிபதியின் ஆட்சிக்காலங்கள் ஆறுவருடங்கள். இந்த ஆறுவருடகாலத்திற்குள் அவர்தான் ராஜாஇ. ஆனால், நாடாளுமன்றத்தின் நிலை அப்படியல்ல. தீர்க்க ஆயுசு நித்திய கண்டம் என்பதுபோல் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினால் அமைச்சர்களையும் அதிகாரிககளையும் நியமிக்கமுடியும். ஆனால், அந்த அமைச்சுகளுக்கும் அதிகாரிகளுக்கும் (ஜனாதிபதி உட்பட) நிதி வழங்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உண்டு.

இப்பொழுது இந்த நாடாளுமன்ற அதிகாரத்திலும் ஆட்டம் கண்டுள்ளது. அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள கட்சிகளின் கொள்கையில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அரசை கவிழ்க்கவேண்டும் என்பதில் நோக்கம் ஒன்றாகவே இருக்கின்றது.

இன்று அரசுடன் ஒட்டிக்கொண்டுள்ள உதிரிகளான முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி எப்பொழுதும் பல்டி அடித்துவிடலாம். இவர்களிடம் உறுதியான கொள்கை இல்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னந்தனியாக ஜாதிக ஹெல உறுமய வுடன் மட்டுமே தலையடிக்கவேண்டும். நாடாளுமன்றம் எந்தச் சமயத்திலும் அறுந்துவிழும். அப்போது இன்று அமைச்சர்களாக இருக்கும் பலர் மங்கள - ஸ்ரீபதி அணியினருடன் இணைந்து கொள்ள தயாராக இருக்கின்றனர்.

திடீரென ஒரு தேர்தல் நடைபெற்றால் வெளிநாட்டு பிரஜைகளான கோட்டபாய, பஸில் சகோதரர்கள் ஜனாதிபதிக்கே தெரியாமல் கப்பல் ஏறிவிடுவார்கள். அப்போது ஜனாதிபதியின் நிலைமை என்ன ஆவது என்பது தான் இன்று எழுந்தள்ள கேள்வி. ஜனாதிபதி இதற்கு முகம்கொடுக்கத் தயாரா?

# வர்த்தமானியூடாகவும் வன்முறைகள்



கடந்த 10-06-2007 அன்று வெளியாகிய ஸ்ரீலங்காவின் அரச வர்த்தமானியின் ஊடாக, மகிந்த ராஜபக்ஷவின் சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனை மீண்டும் ஒருமுறை வெளிப்பட்டிருக்கிறது. சம்பூரை உள்ளடக்கிய மூதூர் கிழக்குப் பிரதேசங்களை, அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி உள்ள இந்த அரச வர்த்தமானி, 'அங்கே மக்கள் மீளக்குடியேற முடியாது' என்றும் 'மீறி அப்பகுதிகளுக்குள் நுழைபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்றும் அறிவித்துள்ளது.

தமிழ்மக்களின் பாரம்பரிய மண்ணைப் பறிப்பதற்காக ஸ்ரீலங்கா அரசுகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற பேரினவாதச் செயற்பாடுகளின் நீட்சிதான், இந்த வர்த்தமானி அறிவித்தலாகும். தமிழ்மக்களின் தாயகப் பிரதேசங்களை அபகரிப்பதற்காக பல்வேறு வழிகளை ஸ்ரீலங்கா அரசுகள் பயன்படுத்தி வந்திருக்கின்றன. 'நீர்ப்பாசனத்திட்டம்' என்றும் 'காணி அபிவிருத்தித் திட்டம்' என்றும் 'புனித நகரத் திட்டம்' என்றும் 'சிறப்புப் பகுதி' என்றும், 'உயர் பாதுகாப்பு வலயம்' என்றும் 'இராணுவ நடவடிக்கை' என்றும் பலவிதமான அராஜகச் செயற்பாடுகளைச் ஸ்ரீலங்கா அரசுகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன. இவற்றின் மூலம் தமிழ்மக்களை அவர்களுடைய சொந்த நிலங்களிலிருந்து விரட்டி அடித்துவிட்டு, அப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைச் சிங்கள அரசுகள் ஏற்படுத்தி வருகின்றன.

ஸ்ரீலங்கா அரசுகளின் மிக நீண்டகாலத் திட்டங்களாகிய இவை குறித்து சில தகவல்களைத் தருவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கைத்தீவு, பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் அடைந்த பின்னரும் கூட, திருகோணமலையில் பிரித்தானிய அரசு, தனது படைத்தளங்களை வைத்திருந்தது. பிரித்தானியாவின் படைத்தளங்கள் இனிமேல் இலங்கையில் இருக்கக்கூடாதென்று 1956களில் ஸ்ரீலங்கா அரசு நச்சரிக்கத் தொடங்கியதையடுத்து திருகோணமலையில் இருந்த பிரித்தானியாவின் படைத்தளங்கள் அகற்றப்பட்டன. அதன்பின்னர் திருகோணமலையில் வசித்த மற்றும் வேலைசெய்து வந்த தமிழர்களை அரசு, தனது அழுத்தங்கள் மூலம் விரட்டியடித்தது. பின்னர் திருகோணமலையில் சிங்களவர்களை அரசு குடியேற்ற ஆரம்பித்தது.

திருகோணமலையில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழர்களைப் பதவியாவில் குடியமர்த்தி, அங்கே அவர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படும் என்று அரசு அன்று அறிவித்தது. பதவியாய் என்றழைக்கப்படுகின்ற பிரதேசம் உண்மையில் பதவில்குளம் என்ற பாரம்பரியப் பெயரைக்கொண்ட தமிழ்ப்பகுதியாகும். அப்போதையே பதவிக்குளத்தில் சிங்களக் குடியேற்றத்தை அரசு ஆரம்பித்துவிட்டது. தமிழ்ப்பகுதியான பதவில் குளத்தில் சிங்களக் குடியேற்றத்தை நடத்திக்கொண்டு திருகோணமலைத் தமிழர்களை அங்கே கொண்டுபோய்க் குடியமர்த்தும் செயற்பாட்டைச் அரசு முன்னெடுத்தது.

இங்கே ஒரு விடயத்தை நாம் சுட்டிக் காட்ட விழைகின்றோம். பிரித்தானிய அரசு, தனது படைத்தளத்தை திருகோணமலையில் இருந்து அகற்றியபோது ஸ்ரீலங்கா அரசு அங்கிருந்த தமிழர்களுக்கு, அங்கேயே -அதாவது திருகோணமலையிலேயே மறுவாழ்வு கொடுக்காமல் அவர்களை வேறு எங்கேயோ கொண்டுபோய் குடியமர்த்துகின்றது. அரசு தமிழர்களைக் குடியேற்றிய பதவில் குளம் என்கின்ற தமிழ்ப்பகுதியோ அப்போது படிப்படியாகச் சிங்களப் பகுதியாக மாற்றப்பட்டு வருகின்றது.

இந்த விசித்திரமான செயற்பாட்டினூடாக பின்னர் நடந்தேறிய விடயங்கள், அரசின் தமிழினத் துவேசத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

1979 ஆம் ஆண்டு அன்றைய காணி அமைச்சரான காமினி திசநாயக்க, மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைந்த 'ட' (எல்) வலயத்தைச் சிறப்புப் பகுதியாக அறிவிக்கின்றார். அந்தப் பகுதிதான் தமிழ்மக்களின் மணலாற்றுப் பகுதியாகும். கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், தென்னமரவாடி போன்ற பல கிராமங்களை உள்ளடக்கிய மணலாற்றுப் பகுதியில் உள்ள சுமார் 43 தமிழ்க் கிராமங்களிலிருந்து 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று 13,500 இற்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் இரவோடு இரவாக இராணுவத்தால் விரட்டியடிக்கப்படுகின்றார்கள்.

தமிழ்ப் பகுதியான பதவில்குளத்தைச் சிங்களப் பகுதியாக உருமாற்றிக்கொண்டு அதேவேளை, திருகோணமலையிலிருந்து விரட்டப்பட்ட தமிழ்மக்களை பதவில் குளத்தில் குடியேற்றிவிட்டு, பின்னர் ஒட்டுமொத்தமாக அங்கேயுள்ள தமிழ்ப்பிரதேசங்களில் இருந்த தமிழ்மக்களை இரவோடு இரவாகச் அரசு துரத்தியடிக்கின்றது.

**அவுஸ்திரேலியாவில் இருந்து**
**சபேசன்**

சிங்களவர்களைப் பொறுத்தவரையில் தமிழ்க்குப்பைகளை ஒன்றாகச் சேர்த்துக் குவித்துவைத்துவிட்டு பின்னர் கொளுத்தி எரிக்கின்ற செயற்பாடுதான் அது. மணலாற்றுப் பகுதிகளில் தண்ணீரே வராமல், தமிழ்மக்கள் வெளியேற்றப்பட்ட சரித்திரம்தான் இது. இதுவும் ஸ்ரீலங்கா அரசின் ஒரு வர்த்தமானி அறிவிப்பின் பின்னர்தான் நடைபெற்றது.

'சிறப்புப் பகுதி' என்ற திட்டத்தின் கீழ் தமிழ்மக்கள் விரட்டியடிக்கப்பட்ட கதை இது என்றால் 'புனித நகரப்பகுதி' என்ற பெயரில் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்ட கதை வித்தியாசமானதாகும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் அனுராதபுரத்தில் தமிழர்கள் மிகுந்த செல்வாக்கோடு வாழ்ந்து வந்தார்கள். இவர்களை அனுராதபுரத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்காக அன்றைய அரசு, வித்தியாசமான திட்டம் ஒன்றை 1956 ஆம் ஆண்டு தீட்டியது. அனுராதபுரத்தில் புதிய நகரம் ஒன்றைச் அரசு கட்டியெழுப்பியது. தமிழர்கள் மிகுந்த செல்வாக்கோடு வாழ்ந்துவந்த அனுராதபுரம் நகரம் பழைய நகரம் என்றும் புதிதாகக் கட்டியெழுப்பப்பட்ட நகரம் 'புதிய நகரம்' என்றும் அழைக்கப்படலாயிற்று.

தமிழர்கள் மிகுந்த செல்வாக்கோடு வாழ்ந்து வந்த பழைய அனுராதபுர நகரத்தைப் புனித நகரம் என்று அரசு பிரகடனப்படுத்தியது. பழைய அனுராதபுரம் புனித நகரமாக மாறிய காரணத்தினால் அங்கே வாழ்ந்து வந்த நீசர்களான தமிழர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

இது இப்படியென்றால் தமிழர்களின் புனிதப் பிரதேசமான கதிர்காமத்தில் நடைபெற்ற கதை வேறுவிதமானது. தமிழ்கடவுள் என்றும் சைவக்கடவுள் என்றும் அறியப்பட்ட முருகப்பெருமானின் தொன்மையான கோயிலைச் சுற்றி பிரமாண்டமான புத்தவிகாரைகள் கதிர்காமத்தில் கட்டியெழுப்பப்பட்டன. குன்றின் மீதே குடியிருக்கும் குமரக்கடவுளை குறுகிச் சிறுக்கப்பண்ணி பௌத்த பேரினவாதம் புது அவதாரம் எடுத்தது.

தமிழர்களை விரட்டியடிப்பதற்கான உத்திகளில் புத்தவிகாரை நிர்மாணங்களும் முக்கிய பங்கை வகிக்கின்றன. தமிழர்கள் வாழ்கின்ற இடங்களில் புத்தகோயில்களைக் கட்டி அதனூடாக நிலங்களை கையகப்படுத்தி, சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு தமிழர்களை விரட்டியடிப்பதைச் சிங்கள அரசுகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன. இந்தச் செயற்பாடுகளைச் சிங்கள அரசுகள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செய்து வருகின்றன. இன்று சிங்களப் பிரதேசங்களாக மாற்றப்பட்டுவிட்ட சேருவில, திரியாய தீகவாப்பிய, கொம்பனாக்கிஆகிய ஊர்களை உதாரணத்திற்குச் சுட்டிக்காட்டலாம்.

1949களில் மலையகத் தமிழ்மக்களின் வாக்குரிமையும் குடியுரிமையும் பறிக்கப்பட்டதும் தொடர்ந்து இனக்கலவரம் என்ற பெயரில் தமிழின அழிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற முழக்கத்தின் கீழ் தமிழினச் சுத்திகரிப்பு நடைபெற்று வருவதும் சிங்களப் பௌத்தப் பேரினவாதச் சிந்தனைகளின் செயற்பாடுகள்தான்.

ஹிட்லரின் நாசிப் பேரினவாதச் சிந்தனைக்கு இணையான சிந்தனையைக் கொண்டுள்ள ஸ்ரீலங்காவின் தற்போதைய அதிபரான மஹிந்த ராஜபக்ஷ தான் பதவிக்கு வந்த காலத்திலிருந்தே தன்னுடைய சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்துவருகின்றார். தமிழர்களை எல்லா இடங்களில் இருந்தும் எவ்வாறு கலைப்பது, நாடு கடத்துவது என்று அவர் திட்டமிட்ட வண்ணமே இருக்கின்றார். தன்னுடைய இந்தத் திட்டத்தின் கீழ்த்தான் அவர் இப்போது செயல்பட்டுக்கொண்டு வருகின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ அதிபர் பதவிக்கு வந்தவுடனேயே தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் பொருளாதாரத் தடைகள் பொதுவாகக் கொண்டுவரப்பட்டு விட்டன. மாவிலாறுப் பிரதேசமும் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத் தடைகளுக்கு உள்ளாகியது.

இதன் அடிப்படையில் நாம் மாவிலாறு அணைப்பிரச்சினை குறித்து சில விடயங்களைக் குறிப்பிட விழைகின்றோம். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கி, திருகோணமலை மாவட்டத்தில் ஒரு நீர்ப்பாசனத்திட்டத்தை முன்வைத்தது. இதன்மூலம் ஈச்சலம்பற்று, மூதூர், தோப்பூர், சீலன்வெளி போன்ற பிரதேசங்களுக்கு நீர் வழங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட விருந்தன. ஆனால், ஈச்சலம்பற்றுப் பிரதேசமானது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்த காரணத்தினால் அரசு இந்த நீர்ப்பாசனத்திட்டத்தை எதிர்த்தது. ஈச்சலம்பற்றுப் பிரதேசத்தைத் தவிர்த்து மற்றைய பகுதிகளுக்கு -அதாவது சிங்களக் குடியேற்றப்பகுதிகளுக்கு மட்டும் இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை அமுலாக்குவதற்கு அரசு முயன்றது. இதனைத் தமிழர்கள் கடுமையாக எதிர்த்தபோது, தமிழர்கள் பகுதியிலும் நீர்விநியோகத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி அன்று உறுதியளித்திருந்தது.

இந்தவேளையில் தான் கடந்த ஆண்டு திருகோணமலையில் வேறு ஒரு நீர்ப்பாசனத்திட்டத்தைச் அரசு ஆரம்பித்தது. இந்தப் புதிய திட்டத்தின் பிரகாரம் ஈச்சலம்பற்றிலிருந்து சுமார் ஆறு கிலோமீற்றர் தொலைவில் இருக்கின்ற மாவிலாற்றுப்பகுதி நீரைச் சிங்களக் கிராமங்களுக்கு மட்டும் விநியோகிப்பதற்காக அரசு திட்டம் தீட்டியது. இந்த மாவிலாறு நீரைக்கொண்டு செல்லக்கூடிய கால்வாயை கந்தளாயில் வைத்து இரண்டாகப் பிரித்து ஒருபுறம் சேருவிலப் பகுதிக்கும் மறுபுறம் சோமபுர, தெகிவத்தப் பகுதிகளுக்கும் நீரை விநியோகம் செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டது. இங்கே குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய விடயம் என்னவென்றால் கந்தளாய், கல்லாறில் இருக்கும் இராணுவ முகாம் தான் இந்த நீர் விநியோகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் என்பதாகும்.

ஏற்கனவே உணவுத்தடை, பொருளாதாரத் தடை என்று பல பிரச்சினைகளை எதிர் கொண்டிருந்த தமிழ்மக்கள் அவற்றோடு நீர்ப்பிரச்சினையும் சேர்ந்துகொண்டபோது தங்களுடைய எதிர்ப்புகளை அன்று காட்டத் தொடங்கினார்கள். அதுவரை அங்கேயிருந்த பெரிய பிரச்சினைகளை அரசோ வெளிநாடுகளோ பெரிதுபடுத்தவில்லை. ஆனால், தமிழ்மக்களின் எதிர்ப்பைத்தான் அரசு பெரிய பிரச்சினை என்று சொல்லி வன்முறையில் இறங்கியது. குறைந்த தொகையினரான சிங்கள மக்களுக்கு தண்ணீர்ப் பிரச்சினை வந்துவிட்டது என்று கதை சொல்லிக்கொண்டு இலட்சக்கணக்கான தமிழ்மக்களைக் கிழக்கு மாகாணத்திலிருந்து அரசு கலைக்க ஆரம்பித்தது.

அன்று தம்மால் அடித்துக் கலைக்கப் பட்ட தமிழ்மக்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்துவோம் என்று அரசு தொடர்ந்து கூறி வந்தது. ஆனால், இன்று அரச வர்த்தமானியூடாக சம்பூரை உள்ளடக்கிய மூதூர் கிழக்குப் பிரதேசங்களை அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ள அரசு அங்கே மக்கள் மீளக்குடியேறமுடியாது என்றும் அறிவித்துள்ளது.

தங்களுடைய இராணுவ நடவடிக்கைகளுக்கும் அப்பால் ஸ்ரீலங்கா அரசுகள் எப்படிஎப்படியெல்லாம் திட்டங்களைத் தீட்டி தமிழர்களுடைய தாயகப் பிரதேசங்களை அபகரித்து வருகின்றன என்ற விடயத்தை இயன்றவரை சுருக்கமாகச் சுட்டிக்காட்டி தர்க்கித்தோம். மஹிந்த

(26ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்



# சம்பூர் மக்களின் பலவந்த வெளியேற்றம் மீண்டும் ஒரு தலை குனிவை அரசு எதிர் நோக்குகின்றதா?

கனக கடாட்சம்
மூதூர்

திருகோணமலையின் பூர்வீக வரலாறு என்பது வரலாற்றுக் காலங்களுக்கு அப்பாற்பட்டது என்பது புதிய விடயம் அல்ல. அதிக அளவிலான தொன்மை ஈழத்தமிழருக்கு உண்டு என்பது மறுபுறத்து உண்மை. இந்த உண்மைகளின் ஆதார விருட்சங்கள் தான் திருக்கோணேஸ்வர ஆலயமும், அது சார்ந்த சூழ அமைந் திருக்கும் புராதன கிராமங்களும் ஆகும்.

தமிழ் மக்களின் தொன்மைகளை அழிப்பதற்கான முதல்படிதான் கிராமங்களை அழித்தல். இதனை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தவர்தான் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத் முதலி. அவரின் கொள்கைகள் இன்றுவரை பேரினவாதிகளால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்ற உண்மையை புரிந்து கொள்வது கஷ்டமான விடயம் அல்ல.

கொள்கைகளில் மாற்றங்கள் இன்றி வடிவங்கள் மட்டும் மாறி நிற்கும் மாயம்தான் சம்பூர் பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயமாக்க அரசு மேற்கொள்ளும் திட்டம் ஆகும். 'அடையாளங்களை அழித்தால் வரலாறுகளை அழித்தல் இலகுவானது' என ஏமாற்றும் அரசின் திட்டத்தை அனைத்துத் தமிழ் மக்களும் மற்றும் சிறுபான்மை மக்களும் உணர்தல் அவசியமாகிறது. இது காலம் காலமாக வெவ்வேறுவடிவங்களில் நடை பெறுகிறது.

சம்பூர் பகுதி மக்களை முற்றாக இடம் பெயரவைப்பதால் பேரினவாதிகளுக்கு ஏற்படப்போகும் நன்மைகளை விட தீமைகளே அதிகம். கொழும்பு லொட்ஜ் விவகாரத்தில் தமிழ் மக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தி அதில் இன்பம்காண நினைத்த அரசு தற்போது தலைகுனிந்து நிற்கிறது. 'உள்வீட்டுச்சண்டை' களையும் எதிர்நோக்கி உள்ளது. சம்பூர் விடயமும் தொடர்பாடத்ததை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

எதுஎப்படியானாலும் இலங்கையின் நீதித்துறை ஓரளவு விழித்திருக்கிறது என்பது தமிழ் மக்களுக்கு ஆறுதல் தருகின்ற விடயம் ஆகும். நீதித்துறையின் நடைமுறைகள் சம்பூர் விடயத்திலும் பிரயோகப்படுத்தபடும் என்பதில் அப்பகுதி சார்ந்த அனைத்து மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இதோடு தொடர்புடையதாக அரசினால் பல சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டமை நினைவில் கொள்ளப்படவேண்டும்.

சுயவிருப்பமின்றி மீளக்குடியமர்த்தல்.

தேசியநோக்கோடு பாரிய அளவிலான அபிவிருத்தித்திட்டத்தை அரசு மேற்கொள்ளும் போது காணி சுவீகரித்தல் என்பது தவிர்க்க முடியாதது ஆகும். அதிலும் அந்த அபிவிருத்தித்திட்டம் பொதுவான தேவை கருதப்படுமிடத்து, கொள்கை அளவில் மக்களுக்கு அனர்த்தத்தை ஏற்படுத்தாமல் நடைமுறைப்படுத்தப் படுதல் மிக அவசியமானது. இது சுற்று நிருபங்களுடாக இறுக்கமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட தேசிய சுற்றுசூழல் சட்டம் 56/1980 சுற்று நிருபம் இதனை வலியுறுத்தி நிற்கிறது. அதற்கு பிற்பகுதிகளில் வெளியான (LD /NIRP/ *01/2003*) 'சுயவிருப்பின்படி மீள்குடியேற்றுவதற்கான தேசிய கொள்கைகள்' சுற்றுநிருபத்தில் சம்பூர் மக்கனை வெளியேற்றுவதற்கான நீதியற்ற செயற்பாடுகளுக்குத் தடைபோடவாய்புண்டு.

இந்த சுற்று நிருபத்தின் படி கொள்கை அடிப்படைகள் என்பதன் கீழ்

04:1 கூறுகின்றது என்னவென்றால் இயலுமான அளவு மக்களை வெளியேற்றாது மாற்றுவழிகளை ஆராய்வதோடுஅத்திட்டத்தினுள் மாற்றுத் திட்டங்களைக் காணுதல் பொருத்தமாகும்.

04:04 பலவந்தமாக வெளியேற்றப்படும் மக்களுக்கான காணித்தெரிவு, வாழ்வாதார நட்டஈடு மற்றும் அபிவிருத்திக்கான அனுகூலங்கள் போன்றவற்றில் ஆரம்பத்திலே அம்மக்களை முழுமையாக ஈடுப்படுத்தி ஒப்புதல் பெறல்வேண்டும்.

04:05 நட்ட ஈடாக அம்மக்களுக்கு வழங்கப்பட விரும்பும் மாற்று காணி தேவையா அல்லது அதற்கான நட்டஈடு தேவையா என்பதை தெரிவு செய்யும் உரிமை அம்மக்களையே சார்ந்தது.

04:06 அரசின்காணி சுவீகரிப்பினால் ஏற்படும் முக்கிய இழப்பீடுகளான காணி கட்டடங்கள், சொத்துக்கள், வருமானங்கள், நிர்வாக செலவுகள் போன்றவையின் நட்டஈடுகளை தற்போதைய நிலைக்கு ஏற்ப தாமதமின்றி வழங்குவதோடு அம்மக்களின் ஒப்புதலும் பெறல் வேண்டும்.

04:07 குறித்த திட்டங்களும் கொள்கைகளும் வகுக்கப்படும்போது அவ்விடத்தின் மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றை பங்குகொள்ள வைப்பது அவசியமாகும்.

நோக்கங்கள் என்ற தலைப்பின்கீழ், அரசின் கட்டாயகாணி சுவீகரிப்பினால் ஏற்படும் பக்கவிளைவுகள். அம் மக்களை வறுமையாக்கப்படுதலிருந்து தவிர்க்கப்படுதலை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

02:05 இக்காணி சுவீகரிப்பினால் ஏற்படப்போகும் நன்மை, தீமை உட்பட எதிர்கால நடைமுறைகள் பற்றி சம்பந்தப்பட்ட மக்களுக்கு விழிப்பூட்டல் களை அரசு வழங்க வேண்டும்.

மேலும் இதுதொடர்பான(LF/NIRP/ 31.01.2003) பலவிடயங்கள் சுற்று நிருபத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பலவந்தமாக வெளியேற்றப் பட இருக்கும் மக்களின் நலன்கள் சட்ட வரைபுகளுக்கு உட்பட அனுகூலமாக இருப்பது மிகுந்த வாய்பாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

சம்பூர் பிரதேச மக்கள்மட்டுமல்ல, அனைத்து தமிழ்மக்களும் தமது தாயகமும் தொலைந்து விடுமோ என்ற அச்சத்தில் வாழ்கிறார்கள். பூர்வீகங்களைப் பாதுகாக்கும் இம்மக்கள் சொந்த மண்ணில் வாழ்வதற்கு முற்றுமுழுதாக சட்டத்தை நம்பியுள்ளார்கள் பாரம்பரிய சொந்த மண்பறிக்கப்படுவதை எந்த வகையிலும் பொறுத்துக்கொள்ள முடியாது. இதில் ஒவ்வொரு தமிழ் மக்களும் உன்னிப்பாக கவனம்செலுத்த வேண்டியது கட்டாய கடமையாகும். இந்த பலவந்த குடியேற்றால் அவதிப்படப்போவது

தமிழ் மக்கள் மட்டுமல்ல அரசும்தான் என்பதை அரசு உணர்தல் அவசியம். மீண்டும் ஒரு மன்னிப்புக் கோரலுக்கு இடமளியாது முற்கூட்டியே இத்திட்டத்தைக் கைவிட்டால் பலவழிகளிலும் அரசுக்கு நன்மைகள் உண்டு என்பது வெளிப்படை உண்மை.

---

# தொழிற்சங்கங்கள் ஆள் பிடிக்கின்றன

மலையகத் தோட்டங்களில் ஆள் திரட்டும் வேலையில் இம்மாதம் முழுவதும் தொழிற்சங்கங்கள் ஈடுபட்டன. தேர்தல்களின்போது அரசியல்கட்சிகள் வாக்குறுதிகளை அள்ளிவீசுவது போல் தொழிற்சங்கங்கள் அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்காக இம்முறையும் வழமைபோல் வாக்குறுதிகளை தோட்டத்தொழிலாளர் களுக்கு வழங்கியுள்ளன.

தோட்டங்களில் தொழிலாளர்களை தொழிற்சங்கங்களுக்கு அங்கத்தவராக சேர்த்துக்கொள்ளும் காலம் ஜூன் மாதமாகும். இடைநடுவில் அங்கத்தவர்களை சேர்க்கமுடியாது. இந்த ஜூன் மாதம் பல தொழிற்சங்கங்கள் தோட்டங்களுக்கு படையெடுத்துள்ளன. பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளன. சில தொழிற்சங்கங்கள் ஒருபடி மேலே போய் தொழிலாளர்களை தம்பக்கம் ஈர்த்துக்கொள்ள சாராயப் போத்தல்களையும் வழங்கியதாக ஊவா மற்றும் மத்திய மாகாணச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், சங்கத் தலைவர்கள், மலையக அரசியல்வாதிகள், மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் கடந்த 30 தினங்களாக தோட்டங்களில் பவனிவந்ததை தோட்டத் தொழிலாளர்கள் கண்டுகளித்தனர். இதற்கும் ஒருபடி மேலாக ஊவா மாகாணத்தில் அமைச்சரொருவர் தமது மெய்ப்பாதுகாவலர்களுடன் தோட்டங்களில் பவனிவந்ததையும் காணக்கூடியதாக இருந்ததாகவும் தோட்டத்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தில் பல்வேறு தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன. அகில இலங்கை ரீதியாகச் செயற்படுபவை, மாவட்ட, மாகாண ரீதியாக செயற்படுபவை என தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களுக்கு மாதாந்தம் 40 ரூபா முதல் 65 ரூபா வரை சந்தாப்பணமாக



செலுத்துகின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 65ரூபாவை சந்தாவாக அறவிடுகின்றது. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் 60ரூபா




மாதாந்தம் அறிவிடுகின்றது. ஆனால், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தனது அங்கத்தவர்கள் இறந்தால் ஒரு தொகைப் பணத்தை வழங்குகின்றது.

தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில் பிரச்சினைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தொழிற்சங்கங்கள் உதவுகின்றன. உதாரணமாக ஒரு தொழிலாளி பொலிஸ் பிரச்சினையொன்றில் சிக்கிக்கொண்டால் அவரை பொலிஸ் நிலையம் சென்று மீட்டெடுப்பதும் இந்த தொழிற்சங்கங்களின் வேலையாகும். சில தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தோட்டத் தொழிலாளர் சார்பாக பொலிஸ்நிலையம் சென்றுவர தொழிலாளர்களை கசக்கிப் பிழிந்து பணம் பறிப்பது மலையகத்தில் வழமையாக நடைபெறும் சம்பவங்களாகும்.

தோட்டத் தொழிலாளரது வாழ்க்கையை முன்னேற்றுவது குறித்து தொழிற்சங்கங்கள் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. பல தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களது சந்தாப் பணம் பெற்று சுகபோகமும் சொகுசு வாழ்க்கையும் நடத்துவதையும் காணமுடிகின்றது. இன்று தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாகத் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பமுடியாமல் பல பெற்றோர் இன்னல்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. தோட்டத்தொழிலாளர் கோதுமைமாவை அதிகமாகப் பயன்படுத்துவது சகலருக்கும் தெரிந்த விடயமாகும். இன்று ஒரு கிலோ கோதுமைமாவின் விலை 50 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஒரு தேங்காயின் விலை 20முதல் 25ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது. தோட்டத் தொழிலாளர் நாளாந்தம் கோதுமை மாவிலான ரொட்டியைத் தயாரிப்பதற்கும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. தேர்தலின்போது மலையக தொழிற்சங்க வாதிகளான அரசியல்வாதிகள் தோட்டத் தொழிலாளருக்கு கோதுமை மாவை மானிய விலையில் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்ப தாக உறுதியளித்தனர். தேர்தல் முடிவடைந்து வருடக்கணக்காகின்றது. ஆனால், கோதுமை மாவை மானிய விலைக்குப் பெற்றுத்தருவ தாக கூறிய தொழிற்சங்க வாதிகளைக் காண வில்லை. இதேபோல் தோட்டத் தொழிலாளர் களின் பிள்ளைகளை வீட்டுவேலைக்கு அனுப்புவதைத் தடுக்க எந்த தொழிற்சங்கங் களும் இதுவரை நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. தொழிற்சங்கங்கள் சந்தாவை பெறுவதில் மட்டுமே கவனம் செலுத்துவதை விட்டு தமது அங்கத்தவர் களான தோட்டத் தொழிலாளரின் முன்னேற் றம் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும்.

தோட்டத் தொழிலாளரது பிள்ளைகள் கல்வி கற்று தோட்டங்களை விட்டு வெளி யேறிவிட்டால், தமக்கு சந்தா செலுத்த ஒரு சந்ததி உருவாகாமல் போகுமே என தொழிற்சங்கங்கள் எண்ணிச் செயல்படுவதாகவே தெரிகின்றது.

சுடர் ஒளி

ஜூலை 01 - 07. 2007

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பாக்ஸ் : 011 4734404
E-mail: editorial@sudaroli.com

# போர்க்குற்றங்களை எதிர்நோக்கும் நிலை

கிழக்கில் தொப்பிகல பகுதியைக் கைப்பற்றும் இறுதிக்கட்ட படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக அரசு அறிவித்துள்ள தற்போதைய நிலையில், நாடு ஒரு நெருக்கடியான கட்டத்துக்குள் சென்றுகொண்டிருக்கிறது.

மனித உரிமை மீறல்களையும், யுத்த நடவடிக்கைகளையும் நிறுத்திவிட்டு புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கும்படி சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு கொடுத்த அழுத்தங்கள் விழலுக் கிறைத்த நீராகிவிட்டன.

ஆள்கடத்தல்கள், படுகொலைகள், ஆள்கள் காணாமற்போதல் என்ற வரிசையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களுக்கு முடிவுகட்டப்படாத நிலையில் அரசு புலிகளிடம் இருந்து கிழக்கை முழுவதுமாகக் கைப்பற்றுவதில் முனைப்பாக இருந்து வருவது சர்வதேச சமூகத்துக்குவிடுக்கப்பட்டஒரு சவால் ஆகும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டமை முதல் செஞ்சிலுவைச் சங்க பணியாளர்கள் கொழும்பில் கொல்லப்பட்ட சம்பவம் வரையான சுமார் 25 வரையான தொண்டு நிறுவன உறுப்பினர்களின் கொலைகள், ஆள்கள் பணத்துக்காகக் கடத்தப்படுதல், கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்படல் ஆகியவற்றால் இலங்கையின் யுத்தநிலைமையை விட மனித உரிமை மீறல் விவகாரம் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு பெருமளவு நெருக்குதலைக் கொடுத்து வருகிறது.

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் தனது நடவடிக்கையை 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற பெயருக்குள் மூடிமறைத்து நடத்திவரும் இலங்கை அரசாங்கம், மனித உரிமைமீறல்களுக்கு பதில்சொல்ல முடியாது தவிக்கிறது.

சேர்பியத் தலைவர்கள் எதிர்நோக்கியது போன்று ஸ்ரீலங்கா அரசுத் தலைவர்களுக்கு பெரும் நெருக்குதல்களை இது ஏற்படுத்தும் அளவுக்கு இந்த விவகாரம் தற்பொழுது சர்வதேசப் பிரச்சினையாகிவிட்டது.

உள்நாட்டு மனித உரிமை அமைப்புகள், சர்வதேச மனித உரிமைஅமைப்புகள் ஆகியவற்றையும் தாண்டி இலங்கையின் மனித உரிமை விவகாரம் ஐ.நா.வரை சென்றிருப்பது இலங்கைக்கு ஓர் ஆபத்தான சமிக்ஞையே.

தற்பொழுது இலங்கை அரசினால் நடத்தப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து சர்வதேச மனித உரிமை அமைப்புகளான சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை காப்பகம், ஆசிய மனித உரிமைகள் மையம் ஆகியவை அதிருப்தி தெரிவித்திருப்பதும் -

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இலங்கை மனித உரிமை மீறல் விவகாரம் பிரஸ்தாபிக்கப்பட்டதும் -

மனித உரிமைகள் விவகாரங்களுக்குப் பொறுப்பான ஐ.நா.வின் கீழ் நிலைச் செயலாளர் நாயகம், நெருக்கடிகள் நிறைந்த மோசமான நாடுகளில் சூடான், லெபனான், மத்திய ஆபிரிக்க குடியரசு ஆகிய நாடுகளுடன் வரிசைப்படுத்தி இலங்கையை தனியாகக் குறிப்பிட்டிருப்பதும் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்திவருகிறது.

தற்போதைய நிலைமை தொடருமானால் சர்வதேச வலைக்குள் ஸ்ரீலங்கா அரசுத் தலைவர்கள் சிக்கி போர்க்குற்றங்களை எதிர்நோக்கும் நிலைமை உருவாகலாம்.

'கிழக்கின் வன்னி' என வர்ணிக்கப்படும் குடுமிமலை காட்டுப் பிரதேசத்தை அரசுப்படைகள் நெருங்கிவிட்டன என்று இராணுவம் கடந்தவாரம் அறிவித்தது.

பற்றைக்காடுகளும், குன்றுகளும் புதர்களும் நிறைந்த சிக்கலான காட்டுப்



# தொப்பிகல் வெற்றியை கொண்டாடத் தயாராகிறது அரசு!

பிரதேசம் குடுமிமலை. அந்தக் காட்டுப்புறத்தை சுற்றிவளைத்து முன்னேறிவரும் அரசுப்படைகள் புலிகளின் கடைசி தளம் என்று கூறப்படும் பிரதேசத்தினுள் சில தினங்களில் நுழைந்துவிடும் என்ற பாதுகாப்புத் தரப்பினர் கூறிவருகின்றனர்.

'குடுமி மலை'யில் உள்ள புலிகளின் மறைவிடம் அழிக்கப்பட்டால் அது கிழக்கில் புலிகளைத் துடைத்து அப்புறப்படுத்தி விட்டதாக அர்த்தப்படும் என்பது படைத்தளபதிகளின் கருத்து. இதனை படைத் தளபதிகளின் கருத்து என்பதைவிட ஆளும் மஹிந்த அரசுப் பிரமுகர்களது கணிப்பு என்பதே பொருத்தம்.

'கிழக்கு வெளிக்கிறது. விரைவில் அங்கு தேர்தல்'.

மஹிந்த அரசும் அதன் ஆலோசகர்களும் இப்படிச் சொல்லிக்கொள்கிறார்கள்.

அடுத்த சில வாரங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வெற்றி எதிர்பார்க்கப் படுகிறது என்பதை இப்போது அரசுப் பக்கம் உள்ள அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் வாஷிங்டனில் கூறியிருக்கிறார்.

## இணைத் தலைமைத் தீர்மானம் குறுக்கே நிற்கிறது...

இது 14 ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் 'அதிசயம்' என்று இன்னொரு அமைச்சர் கருத்துக் கூறியிருந்தார்.

இந்தியப்படைகள் கூட நெருங்கிப்பார்க்க முடியாமற்போன தொப்பிக்கலவை நமது படைகள் கைப்பற்றும் நிலையில் உள்ளன என்று மற்றொரு அரசுப் பிரமுகர் பெருமைப்பட்டுக்கொள்கிறார்.

தொப்பிக்கலவில் உள்ள பிரதான புலிகள் தளம் வீழ்ந்ததும் கிழக்கு முழுவதும் அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்ட செய்தியை பெரும் ஆரவாரமாக நாட்டும்க்களுக்கு அறிவிக்கவும் அந்தநாளை பெருவெற்றி நாளாக கொண்டாடுவதற்கும் கூட அரசு உயர்மட்டத்தில் சிந்திக்கப்பட்டு வருவதாகத் தகவல் கசிந்துள்ளது.

இராணுவ வெற்றியைப் பிரசாரப்படுத்தும் இந்த ஆரவாரங்களுக்காக கொழும்பு அரசு காத்திருக்கும் அதேநேரம், இலங்கை இனநெருக்கடிக்கு இராணுவ ரீதியான தீர்வு சாத்தியமல்ல - என்று மீண்டும் ஒரு தடவை அமெரிக்கா கருத்து வெளியிட்டிருக்கிறது. ஒஸ்லோவில் நடைபெற்று முடிந்த இணைத்தலைமைகளின் கூட்டம் அங்கு விவாதிக்கப்பட்ட எந்த ஒரு விடயத்தைப் பற்றியும் அங்கு எடுக்கப்பட்ட எந்த ஒரு முடிவைப் பற்றியும் சிறுதகவலைக்கூட கசியவிடாமல் இருப்பதன் மூலம் மோதலில் ஈடுபட்டிருக்கும் இருதரப்புகளின் முன்பாக சர்வதேச சமூகம் சிம்மசொப்பனமான காட்சியை ஏற்படுத்தியுள்ளது.

களத்தில் எட்டப்படும் இராணுவ வெற்றிகள் தற்காலிகமானவை. அவை நிரந்தரமான அமைதித் தீர்வுக்கு வழிசமைக்கப்போவதில்லை என்று இணைத்தலைமைக் கூட்டத்துக்குப் பிறகு அதில் கலந்துகொண்ட அமெரிக்கப் பிரதிநிதி ரிச்சர்ட் பௌச்சர் கருத்து வெளியிட்டிருக்கிறார். தொப்பிகல வெற்றியை கொண்டாடத் தயாராகும் சூழலில் அமெரிக்காவின் இந்தக் கருத்து இலங்கை அரசுக்கு இடிக்கவே செய்யும்.

குடுமிமலை காட்டுப் பிரதேசத்தில் பல பட்டாலியன் கணக்கில் துருப்புகளைக் குவித்து அரசு போரிடுகிறது. மனித சஞ்சாரமற்ற அந்தக் காட்டுப் பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதைவிட கெரில்லா போர்முறையில் அங்கு ஒளிந்து இருந்து செயற்படுவதற்கே புவியியல் நிலைமை வாய்ப்பானது.

குடுமிமலை எனப்படும் சிறுமலைக் குன்றை உள்ளடக்கிய அந்தக் காட்டுப் பகுதியை ஒருவேளை அரசுப்படைகள் முழுமையாக கைப்பற்ற நேர்ந்தால் அதன் வெற்றி தோல்வி என்பது அந்தப் பிரதேசத்தை தொடர்ந்து தக்கவைப்பதற்காக செலுத்தப்படவேண்டிய விலையைப் பொறுத்தே தங்கியுள்ளது. சுமார் 25 பேரடங்கிய கெரில்லா அணி ஒன்று சுமார் ஐயாயிரம் துருப்புகளை அடர்ந்த காட்டில் சிக்குண்டு கிடக்கச் செய்யமுடியும். அங்குள்ள புவியியல் நிலைமை கெரில்லா போர்முறைக்கே அன்றி மரபுவழிச் சமருக்கு வாய்ப்புடையதல்ல.

கிழக்கை முழுமையாக மீட்டபின்னர் அங்கிருந்து பெருமளவு துருப்புகளை வாபஸ்வாங்கி வடக்குக்கு நகர்த்தி வடபோர் அரங்கைத் திறப்பதுதான் பாதுகாப்பு ஆலோசகர்களின் எதிர்பார்ப்பு.

ஆனால், கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் தளம் ஒதனையும் பேணாமல் நிலைகொண்டிருந்து கெரில்லா தாக்குதல்கள் மூலம் தினமும் படையினருக்கு தொல்லைகொடுக்கும் புலிகளின் உத்தி பாதுகாப்பு ஆலோசகர்களின் கணிப்புகளை தோற்கடித்துவிடலாம்.

அரசின் முழுக்கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ். குடாநாட்டில் சுமார் 35ஆயிரம் அரசுப்படைகள் நிலைகொண்டுள்ளன. நூற்றுக்கும் குறைவான புலிகளின் போராளிகள் அங்கு ஒளிந்திருந்து அவ்வப்போது மேற்கொள்கின்ற வீதியோரக் கண்ணிவெடித் தாக்குதல்களைத் தடுப்பதற்கான பாதுகாப்புப் பணியில் அங்குள்ள படையினரில் அரைவாசிப்பேர் நாளாந்தம் ஈடுபடவேண்டியுள்ளது.

கிழக்கின் பல பகுதிகளும் இப்போது இந்த ஆபத்தையே எதிர்கொண்டுள்ளன. மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் என்ன நடக்கப்போகிறது என்பது இனிமேல்தான் தெரியவரும்.

அப்பகுதிகளில் அரசுப்படைகள் மீது புலிகள் கெரில்லா தாக்குதல்களை தீவிரப்படுத்தலாம்.

'தாம் விரித்த பொறிக்குள் தாமே சிக்கும் நிலை' என்று இதைத்தான் புலிகள் கூறுகின்றனரோ தெரியாது.

இன்னொரு பக்கத்தில் பார்த்தால் உள்நாட்டில் அரசு ஈட்டும் இராணுவ வெற்றிகள் சர்வதேச சமூகத்தால் வரவேற்கப்படாத நிலை காணப்படுகிறது.

தென்னிலங்கையில் அரசியல் குழப்பம் ஏற்பட்டு ஆட்சிமாற்றம் உருவாக வாய்ப்புண்டு என்று பலரும் எதிர்பார்க்கின்றனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்த சர்வதேச சமூகம் நிர்ப்பந்தங்களைத் திணித்தால் தற்போதைய இராணுவ வெற்றிகள் நீண்டகாலம் நிலைத்து நிற்க வாய்ப்பில்லை.

போர்நிறுத்த உடன்படிக்கை வரையறை செய்யும் களநிலைமை தலைகீழாக மாற்றம் கண்டுள்ளது. இந்நிலையில் சமாதான முயற்சிக்கு மீண்டும் புத்துயிரளிக்கும் நடவடிக்கைகளில் இறங்குவதற்கு நோர்வே தரப்புக்கு அரசும், புலிகளும் வழிகளைத் திறந்துவிடவேண்டும் என்று இணைத்தலைமை நாடுகள் கடும்தொனியில் கோரவுள்ளன என்று அறியவருகிறது.

அப்படி நடந்தால் இராணுவ முனைப்புகளை அடக்கிவைக்கும் கட்டாயம் அரசுக்கு ஏற்படலாம்.

**கேக்கே**

# மாயாவதியிடம் பாடம் கற்க வேண்டிய ஜெயலலிதா!

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சியை இழந்தும் அகம்பாவத்தை மட்டும் இழக்காது இருந்து வருகிறார். சமீபத்தில் இந்திய ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளரை தெரிவதில் ஜெயலலிதா செய்த தில்லுமுல்லுகள் அப்பட்டமான அரசியல் முதிர்ச்சியீனத்தை வெளிக்காட்டின.

ஆளும் கூட்டணி ஒரு பெண் வேட்பாளரை நிறுத்தி ஆதாயம் தேடிக் கொண்டதால் அதற்கு என்ன பதிலடி எனச் சிந்தித்த ஜெயலலிதா உள்ளிட்ட மூன்றாவது அணி அப்துல்கலாமை கண்டுபிடித்தது. தமது அரசியல் சதுரங்கத்தில் பகடைக் காயாக கலாமை பயன்படுத்த ஜெயலலிதாவே ஆலோசனை கொடுத்தார். அதாவது காங்கிரஸின் பெண் வேட்பாளரை தோற்கடிப்பதற்கு ஒரு சிறந்த வேட்பாளரை நிறுத்தவேண்டிய நிலை எதிர்க்கட்சிகளுக்கு பி.ஜே.பி சார்பில் உப ஜனாதிபதி ஷெகாவத் போட்டியிடுவது

நல்லவர், கற்றவர் என்று எடுத்த பெயருக்கும்இழுக்கு. எனவே கலாம் நேரடியாக இதனை மறுத்திருக்கலாம்.

கலாம் மீண்டும் ஜனாதிபதியாவதை நாட்டிலுள்ள கற்றோர் பலரும் விரும்புகின்றனர். இந்தப் பின்னணியில் கலாம் விடுத்த ஓர் அறிக்கை பெரும் சர்ச்சையைக் கிளறிவிட்டது. அதாவது ''நிச்சயமாக வெற்றிபெறுவேன் என்று தெரிந்தால் போட்டியிடத்தயார்'' என்பதே கலாமின் அக்கூற்று.

''நிச்சயமாக வெற்றி பெறுதல்'' என்பதற்கு பல அர்த்தங்கள் உண்டு என்பதே சர்ச்சை. அதாவது அவர் நிச்சயமாக வெற்றிபெற வேண்டுமானால் காங்கிரஸ் ஆதரவு அவசியம். அப்படியானால் தமது புகழை காரணமாக காட்டி தம்மை ஆதரிக்கும்படிஓர் அழுத்தத்தை கலாம்

ஆக இவ்வாறு கள்ளவாக்கு மூலம் தனது வெற்றியை நிச்சயப்படுத்தினால் போட்டியிடத்தயார் என்று கலாம் சொல்கிறாரா?தனது புகழையும் பெயரையும் விற்பனை செய்து பதவியைப் பெறத் தயார் என்கிறாரா கலாம்? இந்தக் கேள்விகளை காங்கிரஸ் தலைவர்கள் பலர் வெளிப்படையாகக் கேட்டு கலாமை கண்டித்தனர். ஜெயலலிதா தரப்பினர் விரித்த வலையில் சிக்குண்டு விட்டதை கலாம் உணர்ந்தார். தமது அறிக்கை தவறானது என்பதும் அவருக்குப் புரிந்தது. உடனடியாகவே 'நான் போட்டியிடவே மாட்டேன்' என்று அறிவித்து விட்டார்.

ஜெயலலிதா, பி.ஜே.பி. காங்கிரஸ் இடையான அரசியல் குடுமி பிடிச்சண்டையில் கலாம் பரிதாபகரமாக சிக்குண்டது கவலைக்குரியது. ஓர் அணு

சோனியாவை 'ஒரு கை பார்க்கிறேன் பார்' என்று புறப்பட்டார். ஜனாதிபதி தேர்தலில் முதல் அடியைக் கொடுக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. மூன்றாவது அணி அமைந்து விட்டது. அதன் தலைமையை பெண் என்பதால் தனக்கு தந்தால் கவர்ச்சிகரமாக இருக்குமென ஜெயலலிதா மூன்றாவது அணியின் மற்றத் தலைவர்களிடம் சொல்லிப்பார்த்தார். எவரும் மசியவில்லை. இதனால் கோபத்தால் முதற்முறை கலாமை சந்தித்த மூன்றாவது அணித்தலைவர்களுடன் ஜெயலலிதா செல்ல மறுத்தார். பின்னர் வேறுவழியின்றி இரண்டாம் முறை அவர்களுடன் சென்று கலாமை இணங்க வைக்க தலைகீழாக முயன்றார். எல்லாம் புஸ்வாணமாகிவிட்டது. மூன்றாவது அணியிடம் கணிசமான உறுப்பினர்கள் இருந்தும் ஒரு வேட்பாளரை நியமிக்கும் முயற்சி வெற்றி பெறாத நிலையில் காங்கிரஸ் வேட்பாளர் ஜாம் ஜாம் என்று வெற்றி நடைபோடுகிறார். வயிற்றெரிச்சலில் ஜெயலலிதா காங்கிரஸை கண்டபடி திட்டிவி டு மதுரை மேற்கு இடைத் தேர்தல் பிரசாரத்துக்குப் போய்விட்டார்.

எதிலும் தானே முன்னிலை என்ற அகப்பாவம் தான் ஜெயலலிதா தலைகுப்புறக் கவிழ காரணம் ஆகும். இவர் போலவே பெண் தலைவராக உள்ள மாயாவதியிடம் இவர் கற்க வேண்டியது நிறைய உண்டு. மாநில முதல்வரான பிறகு மத்திய அரசுடன் மல்லுக்கட்டுவதுதான் ஜெயலலிதாவின் கொள்கை. மாயாவதியோ உடனடியாக மத்திய அரசுடன் நல்லுறவை அறிவித்து காங்கிரஸின் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்கிறார். அதன்பலனாக மத்திய அரசு அவரது மாநில அரசுக்கு சலுகைகளை அள்ளி வழங்கியுள்ளது.

முன்பு வாஜ்பாய் பிரதமராக இருந்தசமயத்திலும் மாயாவதி உத்திரபிரதேச முதல்வராக இருந்தார். அப்போதும் மத்திய அரசுடன் நெருங்கி உறவாடி வந்தார்.

மறுபுறம் ஜெயலலிதாவோ, வாஜ்பாய் பிரதமராக இருந்தாலும் காங்கிரஸ் பிரதமராக இருந்தாலும் மத்திய அரசுடன் முட்டிமோதுவதை கொள்கையாகக் கொண்டவர். ஜெயலலிதாவுடன் கூட்டணி உறவு முடிந்த பின்பு தான் நிம்மதியாக தூங்கமுடிந்தது என்று







உறுதியாகியிருந்தது. ஆனால் ஆளும் கூட்டணிக்கே நாடாளுமன்றிலும் சட்டசபைகளிலும் பெரும்பான்மை உறுப்பினர்கள் இருப்பதால் ஷெகாவத் வெற்றி பெறுவது கடினம். எனவே, காங்கிரஸ் கட்சியினர் சிலரை அணுகி தனக்கு ஆதரவாக 'கள்ளமாக' வாக்குப் போடும்படி கோருவதே அவரது திட்டம்.

இப்படி இருக்க பெண் வேட்பாளர்

காங்கிரஸ் கட்சி மீது பிரயோகிப்பதாக ஓர் அர்த்தம் கொள்ளமுடியும். இதுகாலும் பதவியில் இருந்த எந்த ஜனாதிபதியும் தன்னை இரண்டாவது தடவையாக பிரேரிக்கும்படி ஆளும் கட்சியை நிர்ப்பந்தித்த வரலாறு கிடையாது. எனவே, அசாதாரணமான ஒரு நிலை கலாமின் அறிக்கையில் உண்டானது.

மறுபுறம் 'நிச்சயமாக வெற்றிபெற

விஞ்ஞானியாக அவர் செய்த சாதனைகள் கூட இந்தத் தவறின் மூலம் மழுங்கிப்போயின. சாதாரண ஒரு பதவிக்கு அடிமையான சாமான்ய அரசியல்வாதியின் மட்டத்துக்கு கலாம் தாழ்ந்து போனது அவரது அரசியல் விவேகமின்மையையே காட்டியது.

கலாமின் நிலை இவ்வாறிருக்க ஜெயலலிதா தலைமையிலான

**எஸ்.சுரேந்திரஜித்**

## சர்ச்சையில் மாட்டிய கலாம்

களமிறங்கியதால் ஷெகாவத்தின் வாய்ப்பு மேலும் குறைந்துவிட்டது. எனவே தான் அப்துல்கலாமை தூசு தட்டி எடுத்தார் ஜெயலலிதா. ஷெகாவத்தை விட்டுவிட்டு கலாமை ஆதரிக்கும்படி பி.ஜே.பி.யையும் கோரினார். எப்படியாவது காங்கிரஸ் வேட்பாளரை வீழ்த்த விரும்பிய பி.ஜே.பியும் இணங்கியது.

ஆனால், சிக்கல் கலாமின் வடிவத்தில் முளைத்தது. காரணம் காங்கிரஸின் வேட்பாளரைத் தோற்கடிக்க கலாமுக்கு ஆதரவு போதாது. ஷெகாவத் போல கள்ளவாக்குகளை நம்பி களமிறங்கி ஒருவேளை தோற்றால் கலாமுக்கு அதுபெரும் அவமானமாகும். இதுகாலும்

முடியுமாயின்' என்ற கூற்றுக்கு இரண்டாவது ஓர் அர்த்தமும் கற்பிக்கப்படமுடியும். அதாவது காங்கிரஸ் கட்சி கலாமை ஆதரிக்காவிட்டாலும் பி.ஜே.பி. போன்ற கட்சிகள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை தூண்டி கலாமுக்கு ஆதரவாக கள்ள வாக்குப் போடும்படி செய்தால் கலாம் வெற்றிபெறலாம். குறிப்பாக கலாம் அரசியலுக்கு அப்பாற்பட்டு பலரது அன்பையும் ஆதரவையும் வென்ற ஒருவர் என்பதால் இவ்வாறு பல காங்கிரஸ் எம்.பிக்கள் அவரை கள்ளமாக ஆதரிக்கலாம். இதன்மூலம் கலாம் வெற்றி பெறுவதை நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

மூன்றாவது அணியின் நிலை இதைவிட பரிதாபகரமானது. நடந்து முடிந்த உத்தர பிரதேச தேர்தலுக்கு முன்புதான் மூன்றாவது அணிக்கு பிள்ளையார் சுழியிடப்பட்டது. காங்கிரஸ் மற்றும் பி.ஜே.பியால் தோற்கடிக்கப்பட்டு தமது மாநில ஆட்சிக் கனவை இழந்த நாயுடு, முலாயம், சௌதாலா, ஜெயலலிதா ஆகிய தலைவர்களின் புதிய கண்டுபிடிப்பே இது. பி.ஜே.பியும் காங்கிரஸும் வேண்டாம் என்பதே இதன் பொருள்.

காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியா காந்தியின் கோபத்தைத் தணிக்க எத்தனையோ சமிக்ஞைகளை காட்டியும் வெற்றி பெற முடியாத ஜெயலலிதா

பிரதமர் வாஜ்பாய் கூறியது நினைவு கூரத்தக்கது.

இவ் விஷயத்தில் கருணாநிதியின் அரசியல் போற்றத்தக்கதாகும். முன்பு வாஜ்பாயுடனும் சரி இப்போது சோனியாவுடனும் சரி நேசமான காலத்தில் அற்புதமான நட்பையும் மரியாதையையும் கொண்டிருந்தார். உறவு முறிந்தாலும் வாஜ்பாயையோ சோனியாவையோ அநாகரிகமாக வசைபாடுவதும் கிடையாது.

ஆக இவ்விஷயத்தில் ஜெயலலிதா படிக்க வேண்டிய பாடம் நிறையவே உள்ளது. மாயாவதி தாழ்ந்த சாதியினராக இருந்து படிப்படியாக உயர்ந்து சட்டத்தரணியாக கல்வி பெற்று வந்ததால் அகப்பாவத்துடன் இராமல் சுமுகமான அரசியலை நடத்துவதாக எடுத்துக் கொள்ளலாம். மறுபுறம் நடிகர், தயாரிப்பாளர் என பல ஆண்களால் மிதிக்கப்பட்ட ஆத்திரத்தில் ஜெயலலிதா இன்னமும் அடிபட்ட புலியாகவே நடந்து கொள்கிறார் எனலாம். மாயாவதி, கலைஞர் என பலரிடம் அவர் பாடம் கற்க வேண்டியது நிறையவே உள்ளது.

# ஐயோ காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!



ரிச்மெண்ட்.

ஒரு விவசாயக் கிராமம். கேப்டவுனிலிருந்து 700 -மைல் தொலைவில் இருக்கிறது. ஓர் ஆயிரம் குடிமக்களே கிராமத்தில் வாழ்கின்றனர்.

கோடை காலம். கடும் வெம்மை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. பொதன் தம்பதிகள் வாசலில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

பெட்றோஸ் அவர்களை கடந்து போனான். அவன் கையில் ஒரு சின்னப்பை இருக்கிறது. வீட்டுக்குத் தேவையான சில்லறைப் பொருள்கள் அதில் இருக்கின்றன.

ஓர் அரை மணித்தியாலத்துக்குள் அவன் அவர்களைக் கடந்து மூன்று முறை போயும் வந்தும் விட்டான். முதல் முறையே திருமதி பொதன் கேட்டாள்

''என்ன பெட்றோஸ் எங்கே போகிறாய்?''

''அம்மாவுக்கு பெற்றோல் வேணுமாம்''

''எதுக்கு?''

''சிம்னி துப்புரவாக்க''

''என்னது! சிம்னி துப்புரவாக்கவா, இதென்ன புதிய பழக்கம்?''

''அடடா புதிய சிஷ்டம் இல்லை. அம்மாவின் வழக்கமே அதுதான். இது தெரியாதா உங்களுக்கு.

''அப்பிடியா?''

''உம். புகை ஒழுங்காக வெளிக்கிளம்புது இல்லைன்னு சொல்லி அதை துடைக்க ரெடியாகிறாள். வேணாம்! வேணாம்னு சொன்னாலும் கேட்கிறாளில்லை''

கூறிவிட்டு பெட்றோஸ் நகர்ந்து விட்டான் . அவன் திரும்பி வந்தபோது பெற்றோல் போத்தலோடு திரும்பினான். அப்புறம் மறுபடியும் போய் இப்பொழுது வீட்டுச் சாமான்களோடு திரும்புகிறான்.

அவன் இவர்களை கடந்து போய் விட்டான். அப்போது திருமதி பொதன் சொன்னாள்,

''பாருங்கள்! அவனிடம் எவ்வளவு பெரிய மாற்றம் ஏற்பட்டு விட்டது. பெரிய குடிகாரனாய் இருந்தான். இரண்டு வார சிறைவாசம் அவனை எப்படி மாற்றிவிட்டது. அம்மாவுக்கு உதவும் நல்ல பிள்ளையாகிவிட்டானே! அடியாத மாடு படியாது என்பது சரிதான்''

''நல்லவனாவதற்கும் , கெட்டவனாக மாறுவதற்கும் ஆண்டவன் சந்தர்ப்பம் வழங்குகிறான்''

திருவாளர் பொதன் தத்துவம் பேசினார்.

''பெட்றோஸ் குடிகாரன் என்று கோபித்துக்கொண்டு போய்விட்ட அவனது மனைவி மறுபடியும் திரும்பி வந்தாலும் வரலாம்''

''வரவேண்டும். பெட்றோஸ் இராணுவ வீரனாக இருந்தவன். உலகப்போரில் கலந்து கொண்டவன். குடிப்பழக்கம் இருக்கத்தான் செய்யும். இதோ அவன் திருந்தி விடவில்லையா?''

''ஆமாம் ஆமாம்''

''அவனுக்கு ஒரு நாற்பது வயது இருக்குமா? ரொம்பவும் ஸ்மாட்டாக இருக்கிறான். குடிதான் அவனை கெடுத்து விட்டது. இல்லையென்றால் அவன் பெண்டாட்டி அவனை விட்டு விட்டு டவுனுக்குப் போய் விடுவாளா?''

''அவன் அடி உதை தாங்க முடியாமல்தான் போனாள்''

''பாவம் நல்லவள்''

''ஏன் மார்கிறேட் மட்டும் என்னவாம். இவன் இராணுவத்திலிருந்து வந்தபோது பாசத்தோடு வரவேற்று அன்போடு கவனித்துக் கொண்டாள் தானே''

''குடித்துப்போட்டு இவன் போட்ட ஆட்டத்தைக் கண்டு அடப்பாவி! மார்கிறேட்டுக்கு பிறந்தவனா நீ என்று நான் நெஞ்சில் அடித்தும் கொண்டவள் தானே!''.

''இப்போது அவளுக்கு 67 வயதாகிறது. புருஷனை இழந்து பல வருஷங்கள் ஆகிவிட்டாலும் அவள் இன்னொருவனை தேடிக்கொள்ளாமல், நோயாளிக்கு பணிவிடை செய்வது புண்ணியம் என்று நினைத்து தாதி தொழிலிலே காலத்தை ஓட்டிவிட்டாள். ரொம்பவும் ஒழுக்கமானவள். பெட்றோஸ் மட்டும்தான் அவளுக்கு பிள்ளை''

''நல்லவள்தான். இல்லையென்று சொல்லவில்லை. , என்றாலும் தன் மகனை குடிகாரன், ஒரே சண்டை பிடிக்கிறான் என்று பொலிஸில் பிடித்து கொடுத்திருக்கக்கூடாது''.

''அட, நீங்க ஒன்னு அவன் என்ன செய்தான், தெரியுமா, ஏய் கிழவி உன்னை கல்லால் அடித்தே கொன்று போடுவேன் என்று ஒருநாள் கத்தியிருக்கிறான்''

''நீயொன்று குடிகாரன்னா அப்படித்தான். குடிகாரன் பேச்சு விடிஞ்சால் போச்சு''

''நல்லா போச்சுதான். கத்துனது மட்டுமா. அந்த ராத்திரியிலே கல்லு கல்லா பொறுக்கி மட மட ன்னு வீட்டுக்கு அடிச்சிருக்கான். மார்கிறேட் கதவை சாத்திக்கிட்டு உயிர் தப்பி இருக்கா''

''பக்கத்து வீட்டு ஜோன் இதை கண்ணாலே கண்டிருக்கிறார். இவர் இதைப் போய் மதுபானக் கடை முதலாளிக்கு சொல்லி அவனுடைய நடத்தை சரியில்லை நம்ம ஊர் சட்டப்படி அவனுக்கு மது கொடுக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கிறார். அவரும் குடுக்கல்ல. அந்த கோபத்திலே மறுநாள் குடிக்காமலே கல்லெறிஞ்சிருக்கான்''

''அப்பிடியோ சமச்சாரம்''

''பின்னே! அதுதான் பொலிஸ் கொண்டு போய் சிறையிலே அடைச்சி ரெண்டு பூசையும் கொடுத்திருக்காங்க போல - பொடியன் அதோடு அடங்கிவிட்டான்''

''எப்படியோ பையன் திருந்திவிட்டான். மார்கிறேட்டும் நிம்மதியாய் இருக்கா''

''பொதன் தம்பதிகள் இவ்வாறு பெட்றோஸ் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

பொதன் தம்பதிகளின் வீட்டைக் கடந்து நாலைந்து வீடுகளுக்கு அப்பால் மார்கிறேட்டின் வீடு இருக்கிறது.

பெட்றோஸ் கடந்து சென்ற வீடுகளின் வாசலிலோ, அடுத்த வீட்டு வாசலிலோ எவரும் இல்லை. அநேகமாக அந்த வீடுகளிலுள்ளவர்கள் ஒரு பகல் தூக்கம் போட்டும் கொண்டிருக்கலாம்.

இந்த வீடுகளையெல்லாம் கடந்து சென்று விட்ட பெட்றோஸ், பொதன் தம்பதிகளின் கண்களிலிருந்து மறைந்து விட்டான்.

அவன் வீட்டுக்குள் சென்றுவிட்டான். சில வினாடிகளின் பின்னர் பதறிக்கொண்டு வெறியில் ஓடிவந்தான்.


''ஐயோ! உதவுங்கள்! உதவுங்கள்! காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்'' என்று கதறினான்.

பொதன் தம்பதிகள் திகிலடைந்து விட்டார்கள். மிரண்டு போய் எழுந்து நின்று அலறல் வந்த திசையை நோக்கினார்கள். ''என்ன மார்கிறேட் மகனை அடித்து நொறுக்குகிறானோ தெரியவில்லையே என்று கைகளை பிசைந்து கொண்டார்கள்.

கொஞ்சம் தொலைவில் -பெட்றோஸ் வீட்டு வாசலில் நின்று கதறுவதும், அலறுவதும் கேட்டது. அவன் அங்கு மிங்கும் பாய்ந்து பாய்ந்து ஓடுவதையும் காணமுடிந்தது.

பொதன் தம்பதிகள் தள்ளாடித் தள்ளாடி ஓடியதுடன் பக்கத்து வீட்டுக்காரர்களையும் சத்தமிட்டு கூப்பிட்டுக் கொண்டு வேகமாக நடந்தார்கள்.

'ஏதோ அனர்த்தம் நடக்கிறது' என்று எ... ணிக்கொண்டு ஒரு கூட்டம் அவர்கள் பின்னால் ஓடியது. கூட்டம் அருகில் வந்ததும் பெட்றோஸ் பதறிக் கொண்டு உள்ளே ஓடினான்.




எல்லோரும் வேகமாக பின் தொடர்ந்தார்கள்,

உள்ளே, சமையலறையில் - மார்கிறேட் அரை நிர்வாண நிலையில் எரிந்து கொண்டிருந்தாள். அவள் உடம்பு துடிக்கவோ நெளியவோ இல்லை. விறகுக்கட்டை ஒன்றைப்போல திகுதிகு வென உடல் எரிந்து கொண்டிருக்கின்றது.

குய்யோ முய்யோ! வென்ற அலறல் எழுந்தது. கூட்டம் ஒரே நேரத்தில் அலறியது. ஆண்பிள்ளைகள் சிலர் அங்கு மிங்கும் ஓடி தண்ணீரைக் கொண்டு வந்து சளார் சளார் ரென எரிகின்ற சடலத்தின் மீது வீசினார்கள். வாளி வாளியாக தண்ணீர் கொண்டு வந்து வீசிய பின்னரே சடலம் எரிவது தணிந்து அணைந்தது. எனினும் நெருப்பு தண்ணீருடன் நழுவி நழுவி எரிகிறது. பெட்ரோல் வாடை கமழ்கிறது. ரொம்பவும் கஷ்டப்பட்டு நெருப்பை அணைத்து விட்டார்கள்.

மார்கிறேட் கரிக்கட்டையாகி விட்டிருந்தாள். உடலின் பெரும்பாகம் கருகி விட்டிருந்தது.

பெட்றோஸ் கேவிக்கேவி அழுதான். ஒரு சிறு பிள்ளைபோல அவன் அழுவதைக் காண எல்லோருடைய கண்களும் கலங்கின. சில பெண்கள் கதறியழுதார்கள்.

சடலம் மிகவும் பரிதாபகரமாகவிருந்தது. அங்கங்கள் எரிந்து கருகிக் கிடந்த விதம் பார்க்கமுடியாத விதமாகக் கிடந்தது.

எல்லோரும் தன்னைச் சூழ்ந்து கவனித்துக் கொண்டிருப்பதினால் சட்டென எழுந்த பெட்றோஸ் கண்களை துடைத்துக்கொண்டு சடலத்தை நெருங்கினான்.

சடலம் மல்லாக்காகக் கிடந்தது. ஒரு போத்தல் உடைந்து சிதறிக் கிடந்தது. கண்ணாடித் துண்டுகள் எங்கும் காணப்பட்டன.

பெட்றோஸ் சட்டென அம்மாவின் சடலத்தை தூக்கிக் கொண்டு சென்று கட்டிலில் கிடத்தினான். பொலிஸ் வந்தபோது சடலம் கட்டிலில் கிடந்தது. பொலிஸ் இன்ஸ்பெக்டர் கத்தினார், ''யார் இந்த முட்டாள் வேலையை செய்தது. ஏன் சடலத்தை கட்டிலில் கொண்டு போட்டீர்கள்'' என்று அவர் கத்திய கத்திலில் அனைவரும் மிரண்டு போனார்கள்.

டாக்டர் ஜேம்ஸ் வந்திருந்தார். இவரிடமே மார்கிறேட் தாதியாகத் தொழில் புரிந்து வந்தார்.

''என்ன நடந்தது?''

அவர் பெட்றோஸ்ஸைக் கேட்டார். ''சிம்னியை துடைக்க பெட்ரோல் போத்தலோடு சமையலடுப்பின் மீது ஏறி இருக்கிறார். போத்தல் தவறுதலாக விழுந்து உடைந்து பெட்ரோல் சிதறி அவர் மீது நெருப்பு தாவி இருக்கிறது''

பெட்ரோஸ் துக்கமுடன் சொன்னான்.

டாக்டர் ஜேம்ஸின் கண்கள் அவனை வெறித்தன. 'மகனே என்ன கதை விடுகிறாய்?' என்பது போல அவை முறைத்தன.

''இன்ஸ்பெக்டர்! மார்கிறேட் மிகவும் கவனமானவள் . இவர் சொல்வது போன்ற அஜாக்கிரதையான முட்டாள்தனமான வேலைகளை அவள் செய்யமாட்டாள். இது நூற்றுக்கு நூறு உண்மை'' என்று டாக்டர் சினத்தோடு சொன்னார்.

''அப்படியானால் நான் பொய் சொல்கிறேனா?''

பெட்றோஸ் எதிர்த்துக் கத்தினான்.

''இல்லை காணாததொன்றை கற்பனையாக,,கதையாக சொல்கிறாய். ஆமாம் நீஏன் சடலத்தை தூக்கி கட்டிலில் போட்டாய். பொலிஸ் எப்படி நடந்த சம்பவத்தை கண்டறியும்'' டாக்டர் மறுபடியும் கோபத்துடன் கேட்டார்.

டாக்டரின் கேள்வியில் நியாயம் இருப்பதாகக் சூழ்ந்து நின்றவர்கள் உணர்ந்தாலும் பாவம் பெட்றோஸ் இப்பொழுது அவன் திருந்திய நல்லபிள்ளை அவனுக்கு இப்படி ஒரு சோதனை வரக்கூடாது என்று நினைத்தார்கள். பெட்றோஸை ஒரு குற்றவாளியாக நினைத்து டாக்டர் ஜேம்ஸ் பேசியது ஒருவருக்கும் பிடிக்கவில்லை. சவப் பரிசோதனை நடத்திய டாக்டர் ஒரு திடுக்கிடும் தகவலை வெளியிட்டார்.

''மார்கிறேட் உயிருடன் எரியவில்லை. சடலமாகவே எரிந்துள்ளாள்'' என்ற அவருடைய அறிக்கை அனைவரையும் திகிலடையச் செய்தது.

சவம் எரிவதற்கு முன்னரே மண்டை வெடித்துள்ளது. கழுத்து நெரிக்கப்பட்டுள்ளது. தொண்டைக் குழி நரம்புகள் நொருங்கியுள்ளன.

டாக்டரின் இந்த அறிக்கை ரிச்மெண்ட் பிரதேச மக்களை கலக்கியடித்தது.

உண்மையில் நடந்தது என்ன?

பெட்றோஸ் சிறையில் இருந்தபோது தாய் தனக்கு கொடுமை செய்துவிட்டதாக நினைத்தான். ஒவ்வொரு கணமும் அந்த வன்மம் அவன் மனத்தில் வளர்ந்தது. தான் சிறையிலிருந்து சென்றவுடன் அவள் தன்னை வீட்டுக்குள் காலடி வைக்க அனுமதிக்க மாட்டாள் என்று அவன் நினைத்தான். அதனால் நல்லவனைப் போல நாடகம் போட்டான். ஊர் மக்களை நம்பச் செய்தான். அம்மாவை கொல்வதும், அவளுடைய சொத்துக்களை அடைவதும் அவனுடைய திட்டமாகின.

அன்று பகல்பொழுதில் அவனுக்கும் அம்மாவுக்கும் இடையில் வாய்த் தர்க்கம் மூண்டது. ஒரு போத்தலை கையில் எடுத்த அவன் அம்மாவின் பிடரியில் படீரெனத் தாக்கினான். அவர்களுக்கிடையில் போராட்டம் நடந்தது. அம்மாவின் தொண்டைக்குழியை ஒரு துணியினால் இறுக்கி நரம்புகளை நொருங்கச் செய்தான்.


சடலத்தை சமையலறைக்கு இழுத்துச் சென்ற அவன் பெட்ரோலை சடலத்தின் மீது கொட்டிவிட்டு போத்தலை சடலத்தின் கையில் கொடுத்து சடலத்தின் கையை தூக்கி நிலத்தில் அடித்து போத்தலை உடைத்துவிட்டு பிடியை மட்டும் கையில் இறுக்கி விட்டான்.

பளீச்சென தீக்குச்சு எரிந்தது. சடலத்தின் மீது விழுந்தது. திகுதிகு வென பற்றிக்கொண்ட நெருப்பு சடலத்தை கருக்கத் தொடங்கியவுடன் ஐயா! உதவி! உதவி! என்று கத்திக்கொண்டு வெளியில் ஓடினான். அம்மா நெருப்புக்கு இரையானதாக நாடகம் போட்டான் என்றபோதும் -

மூன்று நாட்களின் பின்னர் பெட்றோஸ் கைது செய்யப்பட்டான். குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. மரண தண்டனை அவனை சவக்குழிக்குள் ஆழ்த்தியது.





## கழுகு உற்பத்தி நிலையங்கள்




மனிதனுக்கு வீக்கம் ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்காகக் கொடுக்கப்படும் மருந்து டிலோ பீனாக். கழுகில் இருந்து எடுக்கப்படும் இந்த மருந்தின் பரவலால் நேரடியாக பாதிக்கப்பட்டது கழுகு இனம். இன்று இந்தியாவில் வேக மாக அழிந்து வரும் கழுகு இனத்தைக் காப்பாற்ற மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை, இளம் கழுகுகளை பிடித்து, அவற்றை இனப்பெருக்கம் செய்யச் செய்வது தான் ஒரே வழி என்று கண்டு பிடித்துள்ளது. இதற்காக ரூ.164 கோடி செலவில், ஜூனேகார்க், போபால், ஹைதராபாத், புவனேஷ்வர் ஆகிய இடங்களில் கழுகு உற்பத்தி நிலையங்களை நிறுவ முடிவு செய்துள்ளது. தாமதமான முடிவானாலும் சரியான முடிவு என்று சூழல் இயல் நிபுணர்கள் இதை வரவேற்றுள்ளனர்.

## அட்லாண்டிக் விண்கலம் தரையிறக்கம்



உலகம் முழுவதும் மிக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட அட்லாண்டிஸ் விண்கலம் சனிக்கிழமை அதிகாலை 1.20 மணிக்கு கலிபோர்னியாவில் உள்ள எட்வர்ட்ஸ் விமானப்படை தளத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது. அதில் இருந்த இந்திய வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் உட்பட ஏழு வீரர்களும் பத்திரமாக தரையிறங்கினர். விண்ணில் சுற்றி வரும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துடனான இணைப்பை துண்டித்துக்கொண்டு கடந்த 19ஆம் திகதி அட்லாண்டிக் விண்கலம் பூமிக்கு புறப்பட்டது. திட்டமிட்டபடி 21ஆம் திகதி பூமியில் அது தரையிறங்கி இருக்கவேண்டும். அமெரிக்காவில் புளோரிடா மாகாணம், கேப்கெனவெரல் என்ற இடத்தில் உள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத்தில் விண்கலம் தரையிறங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஆனால், கென்னடி ஆய்வு மையப் பகுதியில் வானிலை மிக மோசமாக இருந்ததால், விண்கலம் தரை இறங்குவது இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டது. விண்கலம் தரை இறங்கும்போது, ஆய்வு மையத்தை ஒட்டி 55 கி.மீ., சுற்றளவுக்கு மழை இருக்கக்கூடாது. மழை மேகங்கள் சூழ்ந்து இருந்தாலும், அந்த மேகங்கள் எட்டாயிரம் அடி உயரத்தில் இருக்க வேண்டும். காற்றின் வேகம் அதிகமாக இருக்கக்கூடாது என்று நாசா சில விதிமுறைகளை வகுத்துள்ளது. கடும் மழை பெய்யும் போது விண்கலம் தரை இறங்கினால், அதன் மேற்புறத்தில் ஒட்டப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான வெப்ப தடுப்பு தகடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடும். அந்த விண்கலத்தை மீண்டும் பயன்படுத்துவதில் சிக்கல் உருவாகிவிடும். எனவே தான், இது போன்ற கடுமையான விதிமுறைகளை நாசா கூறியது. இதன் காரணமாகவே, கடந்த 21ஆம் திகதி நாசா விண்கலம் தரை இறங்கவில்லை. இதை தொடர்ந்து, கென்னடி ஆய்வு மையத்திலேயே இந்திய நேரப்படி 10.44 மணிக்கு தரையிறக்க நாசா விஞ்ஞானிகள் திட்டமிட்டனர். அங்கு மோசமான வானிலை நிலவியதால் கலிபோர்னியா எட்வர்ட்ஸ் விமானப்படை தளத்தில் தரையிறக்க உத்தரவிடப்பட்டது. இதை தொடர்ந்து சரியாக 1.20 க்கு விண்கலம் கலிபோர்னியா, எட்வர்ட்ஸ் விமான தளத்தில் விண்கலம் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது. அதில் இருந்த வீரர்களும் பத்திரமாக தரையிறங்கினர்.

## ராக்கெட் எவ்வாறு மேலே செல்கிறது?




ராக்கில் வாணமும் விண்வெளி ராக்கெட்டும் அதே தத்துவத்தில் தான் மேலே எழுகின்றன. போத்தல் போரி இருக்கும் ராக்கெட்டின் உள்ளே எரிபொருள் எரிந்து நாலாபக்கமும் பரவ முயலுகிறது. போத்தலின் எல்லா பக்கத்திலும் அது அழுத்தினாலும், வாய் வழியாக மட்டும் அதனால் வர வேண்டியிருக்கிறது. எத்தனை விசையாக அது சிறிய வாயில் வழியாக வெளிப்படுகிறதோ ஒரே விசையில் எதிர் திசையிலும் தள்ளுவதில் கிளம்புகிறது.

## விபத்து ஏற்படுத்தும் கறுப்பு கார்



விபத்துக்களுக்கான காரணங்களைக் கண்டறிவது மற்றும் விபத்துக்களின் பாதிப்புகளை பெருமளவில் குறைப்பது குறித்து உலகெங்கும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. புதிய பரிந்துரையாக வாகனங்களின் வண்ணத்திற்கும் விபத்துக்கள் நடக்கும் விதத்திற்கும் இடையேயான தொடர்பு வெளியிடப்பட்டுள்ளது. வெள்ளை நிற வாகனங்களே மிகவும் சிறந்தவை என ஆஸ்திரேலியா பல்கலைக்கழக ஆய்வு கூறுகின்றது. கறுப்பு நிற கார்கள் அதிகளவில் விபத்தை சந்திக்கின்றன. எதிரணிக்கு வாகன வேகத்தில் தெரியாத நிறமாக கருப்புநிறம் இருக்கின்றதாம். வெள்ளை கார்களோடு ஒப்பிடுகையில் கறுப்பு கார்கள் விபத்தைச் சந்திக்கும் விதம் 12 சதவிகிதம் அதிகம் உள்ளனவாம்.

## எதுவுமே தொலையாது!



திருடனை ஒழிப்பதற்கு, திருடனாய் பார்த்துத் திருந்த வேண்டியதில்லை. திருடவே முடியாத சூழல் ஒன்றை உருவாக்கி விட்டால், எப்படித் திருடுவது? ஆர்.எப்.ஐ.டி.. ரேடியோ பிரிக்வன்சி ஐடண்டிபிகேஷன் எனப்படும் சிஸ்டம். மிக நுண்ணிய அளவில் ஒவ்வொரு பொருளின் உள்ளும் பதியன் செய்து விட முடியும் என்ற நம்பிக்கையே எந்தப் பொருளையும் திருடவும் விடாமல், தொலைந்தால், அதன் இருப்பிடத்தை உடனடியாக கண்டு பிடித்து விடவும் வழி வகை செய்கிறது. மொபைல்போனில் இருந்து, எழுதும் பேனா, கரன்சி நோட்டுகளில் கூட இந்த நுண்ணிய சிப்பைப் பொருத்திட இயலும் என்கின்றனர். ஆர்.எப்.ஐ.டி., பொருத்தப்பட்ட எந்த ஒரு பொருளையும், அது வெளியிடும் நுண்ணலைகள் மூலம், அதனை எங்கிருந்தாலும் கண்டுபிடித்து விட முடியும் என்பதே இதன் பலம்.

## இணைய புரோட்காஸ்டிங்



வெப்சைட்களில் எழுதி போரடித்துப் போனவர்கள்... இப்போது தங்கள் குரலை ஒலிபரப்பவும், பதிவு செய்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவும் விருப்பப்படுகின்றனர். ஒரு ரேடியோ ஸ்டேஷன் செய்ய வேண்டிய வேலையை இப்போது இன்டர்நெட் எளிதில் செய்துவிடுகிறது. ஒவ்வொருவரும் தங்களது நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப (போட்காஸ்டிங்), அல்லது ஒளிபரப்ப (வீடியோ பளாக்) இன்டர்நெட் உதவியை நாடுகிறார்கள் இலவசமாக எளிதில் ஒவ்வொருவரும் ஒரு வெப்ரேடியோ - உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு சென்னையில் ஜூன் 9-10ஆம் திகதிகளில் டைடல் பார்க்கில் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் போட்காஸ்டிங் தொடர்பான சந்தேகங்களை தெளிவாக்கிக் கொள்ளவும், விவாதித்துக் கொள்ளவும் முடியும். நோலெட்ஜ் பவுண்டேஷன் சார்பில் இந்நிகழ்ச்சி நடக்கிறது. மேலும் விபரங்களுக்கு: http://podworks.in

# கர்ப்பகாலத்தில் கொப்புளிப்பான் வந்தால் கருவிற்கு ஆபத்தா?



கே: பெண். வயது 26. 10 வார கர்ப்பமாக இருக்கின்றேன். எனது சகோதரனுக்கு கொப்புளிப்பான் நோய் ஏற்பட்டுள்ளது. அவரை நான் ஆறு நாட்களுக்கு முன்னர் சந்தித்து அளவளாவ நேரிட்டது. எனக்கு முன்னர் கொப்புளிப்பான் நோய் ஏற்பட்டதில்லை. கொப்புளிப்பான் நோய்க்கு எதிராக எதுவித எதிர்ப்பு ஊசியும் உபயோகிக்கவுமில்லை. கர்ப்ப காலத்தில் வந்தால், கருவுக்கு ஆபத்து என்கிறார்கள். எனவே, எனக்கு கொப்புளிப்பான் தொற்றி இருக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளதா? அப்படி எனக்கு கொப்புளிப்பான் வந்தால் கருவை அழித்து விடுவது நல்லதா? பதில் தரவும்.

ப: கொப்புளிப்பான் **Chicken Pox** விரைவாக தொற்றக் கூடிய வைரஸ் நோய். ஒரு சில நிமிடங்களிலேயே காற்றுமூலம் பரவுகின்ற தன்மை இதற்கு உள்ளது. எனவே உங்களுடைய உடலில் எதிர்ப்பு சக்தி குறைவாக இருந்தால் கொப்புளிப்பான் நோய் உங்களுக்கு ஏற்படும் சாத்தியம் அதிகம் என்றே சொல்ல வேண்டும். அப்படி ஏற்பட்டால் எந்த கர்ப்பகால வேளையில் கொப்புளிப்பான் ஏற்பட்டதோ அந்த வேளைக்கு தக்கவாறு கருவில் இருக்கும் சிசுவுக்கும் பாதிப்பு உண்டு. முதல் ஆறு மாத கர்ப்பகாலப் பகுதியில் தாய்க்கு ஏற்படும் கொப்புளிப்பான் சிசுவை பாதிக்கக் கூடியது. ஆனாலும் முதல் 13 வாரங்களில் கொப்புளிப்பானால் கருவுக்கு ஏற்படும் பாதிப்பு மிகக் குறைவு என்றே சொல்லலாம். கர்ப்பகாலம் 13-20 வாரப் பகுதியில் கொப்புளிப்பான் தாய்க்கு ஏற்பட்டால் கருவுக்கு மோசமான விளைவுகள் ஏற்படலாம். பார்வை பிரச்சினைகள், மூளைப் பிரச்சினைகள், சருமவியாதிப் பிரச்சினைகள் என்பவை இந்த விளைவுகளில் முக்கியமானவை. கருவில் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை தற்போதுள்ள எதுவித பரிசோதனைகளாலும் பிரசவத்துக்கு முன்னர் கண்டறிய வாய்ப்புகளில்லை. இதனால் சில மருத்துவர்கள் கருக்கலைப்பு செய்வதற்கு ஆலோசனை தருவர். நமது நாட்டில் கருக்கலைப்பு சட்டப்படி குற்றமாகும். ஆனாலும் முதல் ஆறு மாத காலத்தில் தாய்க்கு கொப்புளிப்பான் ஏற்பட்டால் அவரது மகப்பேற்று மருத்துவர், மற்றுமொரு மருத்துவர் என இரு மருத்துவர்களும் இந்த தொற்றினால் கருவிற்கு பாதிப்பு ஏற்படும் என்று எழுத்தில் தமது அபிப்பிராயத்தை தந்தால் சட்டப்படி கருக்கலைப்பு செய்ய இடமுண்டு.

கர்ப்பகால இறுதிப் பகுதியில் ஏற்படும் கொப்புளிப்பான் பாரதூரமான விளைவுகளை குழந்தைக்கு ஏற்படுத்தாது. சரும சம்பந்தமான விளைவுகளையே ஏற்படுத்தும். ஆனால் பிரசவத்தின்போது தாய்க்கு கொப்புளிப்பான் ஏற்பட்டிருந்தால் குழந்தைக்கும் கொப்புளிப்பான் நோய் ஏற்பட வாய்ப்புண்டு. அப்படி ஏற்பட்டால் அது பாரதூரமான விளைவுகளை மரணபயத்தை ஏற்படுத்தும்.

கர்ப்பகாலத்தில் சாதாரணமாக கொப்புளிப்பான் எதிர்ப்பு ஊசி மருந்து ஏற்றப்படுவதில்லை. இந்த மருந்து கருவுக்கு ஆபத்தானது என்று இதுவரை கண்டறியப்படாவிடினும் கர்ப்பகாலத்தில் எதிர்ப்பு ஊசி ஏற்றுவது தவிர்க்கப்படுகின்றது. கொப்புளிப்பான் நோயாளியோடு கர்ப்பிணித்தாய் சந்திக்கநேரும் பட்சத்தில் 96 மணி நேர காலப்பகுதிக்குள் நோய்த்தடுப்பு ஊசி ஏற்றலாம். ஆனால் இது நோய் ஏற்படுவதினின்றும் நூறுவீத பாதுகாப்பை தரும் என்று எதிர்பார்க்க முடியாது. இதனால் தான் புதிதாகத் திருமணமான பெண்ணுக்கு கொப்புளிப்பான் தடுப்பூசி ஏற்றி மூன்று மாத காலம் வரை கருவுறாமல் பார்த்துக் கொள்ள அறிவுரை வழங்கப்படுகிறது. இப்படி தடுப்பூசி ஏற்றப்பட்டால் 20 வருட காலத்துக்கு கொப்புளிப்பான் நோய் வராமல் இருக்கும்.

உங்கள் விடயத்தில் உங்களுக்கு முன்னர் கொப்புளிப்பான் நோய் இம்முறை ஏற்படாததும் இதுவரை தடுப்பூசி போடாததும் கொப்புளிப்பான் ஏற்படும் வாய்ப்பு அதிகம் என்றாலும் எனது அனுபவத்திலிருந்தும் என்போன்ற மூத்த வைத்தியர்களின் அனுபவத்திலிருந்தும் ஒரு முக்கிய கருத்தை முன்வைக்க விரும்புகிறேன். கொப்புளிப்பான் நோய்க்கு எதிர்ப்பு ஊசி மருந்து இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு பதினைந்து வருடங்கள் தான் ஆகின்றன. இதற்கு முன்னர் கர்ப்பகாலத்தின் பல காலப் பகுதியில் கொப்புளிப்பான் நோய் கண்ட தாய்மார்களின் பிரசவங்களை நாம் கண்டிருக்கிறோம். அவர்களின் குழந்தைகளை அவர்களின் வளர்ச்சியை இன்றும் கவனித்துக் கொண்டு வருகிறோம். எமது அனுபவத்தில் கொப்புளிப்பான் நோய் கண்ட கர்ப்பகாலத் தாய்மாருக்கு எதுவித பிரச்சினைகளோடும் பிறந்த குழந்தைகளை நாம் காணவில்லை. எனவே மனதை தளரவிடாமல் இறைவன்மேல் பாரத்தை போட்டு குழந்தையை பெறுங்கள்.

**கே: வயது 26. திருமணமாகியுள்ளேன். கடந்த வருடம் எனக்கு ஒரு குழ்ந்தை பிறந்தது. பிறந்த போது அதனது முதுகுத்தண்டில் இடுப்பின் மட்டத்தில் பிளவு இருந்தது. அதனால் குழந்தை ஒரு சில நாட்களில் இறந்து போனது. இப்பொழுது எனக்கு ஒரு குழந்தை வேண்டும். ஆனால் முதலில் பிறந்த குழந்தை போல் இதற்கும் முதுகுத்தண்டு பிளவு (Spina Bifida) ஏற்படுமோ என்று பயமாக இருக்கிறது. இப்படி ஏற்படாமல் இருக்க என்ன பாதுகாப்பு முறைகளை நான் பின்பற்ற வேண்டும்?**

ப: Spina Bifida அல்லது முன்தண்டு-முன்நாண் பிளவு- நரம்பு மண்டலத்தின் உருவாக்கத்தின் போது ஏற்படும் கோளாறு.(Developmental Malformation of Vertebra & Spinal Cord) இது பரம்பரை அலகுகளில் (Gene) ஏற்படும் கோளாறுகளால் அல்லது கர்ப்பகாலத்தில் உபயோகிக்கப்படும் சில மருந்துகளால், கர்ப்ப காலத்தில் மது அருந்துவதால், ஜேர்மன் தட்டம்மை தொற்றுவதால், எக்ஸ் கதிர் தாக்கத்தால் ஏற்படலாம் என்று கருதப்பட்டாலும் சரியான காரணங்கள் கண்டறியப்படவில்லை. சிசுவின் வளர்ச்சியின்போது முதுகுத் தண்டும் முன்நாண் வளர்ச்சிகள் தடைபடுவதால் இப்படி நேரிடுகிறது. எனவே மேற்கூறிய காரணங்களை தவிர்த்துக் கொண்டு கருத்தரிக்க 3 அல்லது 6 மாதத்துக்கு முன்பிருந்தே Folic Acid மாத்திரைகளை உபயோகிப்பதால் நரம்புமண்டல வளர்ச்சி கோளாறுகளை தடுக்கலாம் என்று கண்டறிந்துள்ளார்கள். நீங்களும் Folic Acid மாத்திரைகளை உபயோகிக்க தொடங்கவும்.






மேல்நாடுகளில் பதற்றமற்ற கருத்தரித்து 16 வாரத்தில் ஸ்கேன் செய்வது மூலமும் Serum AFP test என்ற இரத்த பரிசோதனை மூலமும் Spina Bifida நோயை கண்டறிந்து கருக்கலைப்பு செய்கின்றார்கள். எமது நாட்டில் சில வைத்தியசாலைகளில் இந்தப் பரிசோதனைகளைப் செய்ய முடியும். எனவே நீங்கள் பயமில்லாமல் அடுத்த குழந்தைக்கு தயாராகலாம். தாயும் ஆகலாம்.

**கே: எனது நண்பர் 34 வயது. இதுவரை திருமணமாகவில்லை. தற்பொழுது 26 வயது பெண் ஒருவரை காதலிக்கின்றார். ஆனால் திருமணம் செய்து கொள்ள பயப்படுகின்றார். காரணம் ஆண்களுக்கு 40 வயதின் பின்னர் ஆண்மை குறைந்து விடும் என்று எங்கேயோ படித்தாராம். ஆண்களைப் பொறுத்த மட்டும் 45 வயதிலிருந்து மெல்ல மெல்ல ஆண்மை குறைந்து 60 வயதில் முற்றாக ஆண்மை போய்விடும் என்கின்றார்களே அது உண்மையா? எனது நண்பருக்கு பரம்பரை பேண குழந்தை பாக்கியம் ஏற்பட வாய்ப்புண்டா? பதில் தரவும்.**

ப: ஆண்மைக்கு வயது வரம்பு எதுவுமில்லை. குடு குடு கிழவனும் உலக செல்வந்தரான ஒனாசிஸ் காலஞ் சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் அழகு மனைவி ஜாக்குலின் திருமணம் செய்து இன்பமாக சந்தோஷமாக வாழ்ந்ததாக நினைவிருக்கிறதா? ஆனால் ஆண்மைக் குறைவு வேறு, மலட்டுத் தன்மை வேறு.


> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> **இலவச மருத்துவ ஆலோசனை**
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு - 14

ஆண்மையுள்ளவர்களே குழந்தையில்லாமல் மலடர்களாய் வாழ்ந்திருக்கின்றார்கள். வயது ஏற ஏற எமது உடல் இயக்கங்கள் பல கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழந்து போவது என்னவோ உண்மைதான். ஆனால் பாலுணர்வை பொறுத்த மட்டில் உடல் வலு, மனோநிலை என்பன முக்கியம். பாலுணர்வு எந்த வயதிலும் கிளர்ந்து எழலாம். ஆனால் அந்த உணர்வுக்கு ஈடுகொடுத்து உடலும் இயங்க வேண்டும். எத்தனையோ ஆண்கள் 60 வயதிலும் குழந்தை பெற்றிருக்கிறார்கள். எனவே உங்கள் நண்பரை கண்டதை,கேட்டதை, படித்ததை எல்லாம் மறந்து விட்டு திருமணத்துக்கு தயாராக சொல்லுங்கள்.

**கே: வயது 40. எனக்கு நீரிழிவு நோய் வந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது. உலகில் 33 வீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றதாக புள்ளி விவரங்கள் கூறுவதாக அறிந்தேன். எனவே நீரிழிவு நோய் எனக்கு வராமலிருக்க என்ன நடைமுறைகளை நான் கைக்கொள்ள வேண்டும்?**

ப: நீரிழிவு நோய்க்கு பரம்பரை அலகுகள் ஒரு காரணமாக இருந்தாலும் இன்று நீரிழிவு நோய் அநேகமாக காணப்படுவதற்கு முக்கிய காரணம் எமது வாழ்க்கை முறைகளே. பெற்றோரிடையே நீரிழிவு நோய் இருந்தால் அவர் தம் குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் பிற்காலத்தில் ஏற்படுவது உண்மை என்று அறியப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் பாரம்பரிய அலகுகளில் இந்த நோய் ஜீன்களில் இருந்து பரம்பரை பரம்பரைக்கு பரவி வருவது என்று ஒரு சில மருத்துவர்கள் நம்புகிறார்கள். ஒரு விதத்தில் இது உண்மையாக இருந்தாலும் இந்த நீரிழிவு நோய் பெற்றோர், குழந்தைகள், அவர்கள் வம்சாவழிகள் என்பன ஒரே வாழ்க்கை சூழ்நிலையில் (Life Style) பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருவதே முக்கிய காரணம் என்று இன்று மருத்துவ உலகம் நம்புகின்றது. இதனால் நீரிழிவு நோயை Metabolic Disorder என்ற அனுசேப தொழில் சீர்கேட்டின் கீழ் வரையறுத்துள்ளார்கள் மருத்துவர்கள். எனவே சரியான ஒரு வாழ்க்கை முறையை நாம் பின்பற்றினால் நீரிழிவு நோய் ஏற்படுவதினின்றும் நாம் தப்பிக்கலாம். பொதுவாக நாம் இதற்கு கடைப்பிடிக்க வேண்டியவற்றை கீழே தருகிறேன். 35 வயதுக்கு பின்னர் வருடா வருடம் நமது இரத்தத்தின் சர்க்கரை அளவை நாம் அளந்து பார்த்துக்கொள்ள வேண்டும். ஆரோக்கியமான பதற்றமற்ற வாழ்க்கை சூழலை அமைத்துக் கொள்ள வேண்டும். தினமும் 30- 40 நிமிடம் கட்டாயம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். விரைவான நடைப்பயிற்சி மிகவும் நல்லது. உணவு விஷயங்கள் மிதமான கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். அளவுக்கு உணவை சாப்பிட வேண்டும். இனிப்புப் பண்டங்களை அதிகளவில் ஒதுக்கி வைக்க வேண்டும். மூன்று முக்கியமான உணவுகளான காலை, மதியம், இரவு உணவுகளோடு இரு சிறிய உணவுகள் அளவோடு உண்ணவேண்டும். அடிக்கடி உண்ணுவதை, கொறிப்பதைத் தவிர்க்க வேண்டும். குறித்த நேரத்துக்கு உணவு உண்பதை நடைமுறைப்படுத்த வேண்டும். Fast Food என்ற சிற்றுண்டிகளை முற்றாக தவிர்க்க வேண்டும். இவைகளில் கொழுப்புச்சத்து அதிகம். நிறைய பழவகைகளை, பச்சை காய்கறிகளை உங்கள் உணவில் முக்கிய அம்சங்களாக இருப்பது நல்லது. மன உளைவுகள், இறுக்கங்கள் தவிர்க்க வேண்டும். உங்கள் எடையை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட வளர்ந்த ஒரு மனிதருக்கு இருக்க வேண்டிய எடை அவரது உயரத்தின் செ.மீற்றர் அளவிட்டில் 100ஐ கழிக்க வரும் தொகையை கிலோகிராமில் அளந்தால் கிடைக்கும்.

இந்த வழிமுறைகளை கடைப்பிடித்து வந்தால் நீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியக் கூறுகள் குறையும். அல்லது தவிர்க்க முடியாத பரம்பரை அலகினால் வரும் நீரிழிவு நோயின் தொல்லையை பின்போடலாம். நீரிழிவு நோய் மட்டுமல்ல இருதயநோய், அதிஉயர் இரத்த அழுத்தம், என்புற்றுநோய்கள் கூட மேற்கூறிய நடைமுறைகளால் தவிர்க்க முடியும். மதுபானம், போதைப்பொருட்கள் உபயோகித்தல் போன்ற தீய பழக்கங்களைத் தவிர்ப்பதும் சுகமாக வாழ அவசியமானது.



# கலக்கல்

## பகீன்

## ஏ...குருவி... சிட்டுக்குருவி!

ஒரு திருமணத்தில் புதுமணத் தம்பதியருக்கு பணமும், பரிசுப்பொருள்களும் நிறைய குவிந்திருந்தன. ஆனால், இது வரையிலும் எங்கும் பார்த்திராதபடி நண்பர் ஒருவர் திருமணத் தம்பதியருக்கு ஒரு ஜோடி சிட்டுக் குருவிகளைப் பரிசாக கொடுத்தார். அந்த நேரம் "ஏ... குருவி... சிட்டுக் குருவி..." சினிமாப் பாடலும் ஸ்பீக்கரில் ஒலித்துக் கொண்டிருந்தது. மாப்பிள்ளை எல்லோரையும் பார்த்துக் கூறினார்.

"இந்தக் குருவிகளைக் கூண்டுக்குள் அடைத்து வைப்பதில் எனக்கு இஷ்டமில்லை. நான் தான் திருமண வாழ்க்கை எனும் சிறைக்குள் மாட்டிக் கொண்டேன். பாவம், இக்குருவிகளாவது பறந்து மகிழட்டுமே" என்று கூறி, கூட்டைத் திறந்து விட்டார். புதுமணப்பெண் உட்பட அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்ப, குருவிகள் சிறகடித்துப் பறந்தன!







## தத்துவம்

| | |
|---|---|
| வேஷம்: | மேடையில் போட்டால் கரகோஷம். வாழ்வில் போட்டால் வெளிவேஷம். |
| பன்னீர்: | இந்தக்குடம் உடைந்தால் சுகந்தம் வீசும். உள்ளே உடைந்தால் உயிர் போகும். |
| முட்டை: | கடையில் வாங்கினால் ஆரோக்கியம். பரீட்சையில் வாங்கினால் அவமானம். |
| நாடு: | தமிழன் இல்லாத நாடு இல்லை; ஆனால் தமிழனுக்கு என்றொரு நாடு இல்லை. |
| போன்: | பொலிஸ் ஸ்ரேஷனுக்கு போன் போட்டால் பொலிஸ் வரும்; ரயில்வே ஸ்டேஷனுக்கு போன் போட்டால் ரயில் வருமா? |



ஹொங்கொங்கை சீனாவிடம் இணைத்து பத்து வருடமானதை நினைவு படுத்தும் விதமாக விழா நடைபெறுவது வழமை. அந்த விழாவின்போது நடிகர்கள் பண்டா காடி வேடம் அணிந்து வர்த்தக நிறுவனத்தில் போட்டோவுக்கு போஸ் கொடுத்த காட்சி.








## சூறாவளி! சூறாவளி! நான்தானே!!



அமெரிக்காவின் விஸ்கான்சின் பகுதியில் வீசிய சூறாவளிப் புயற்காற்றில் கென்டெய்னர் ஒன்று தூக்கி எறியப்பட்டு அருகில் இருந்த இரண்டு கார்களை அப்பளமாக நொறுக்கி இருக்கும் காட்சிதான் இது.

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்




திருமணமாகாத ஒருவர், 'தனக்கு எப்படிப்பட்ட மனைவி வேண்டும்' என்பதை கம்ப்யூட்டர் மூலம் தெரிந்துகொள்ள விரும்பினார்.

அவர் கம்ப்யூட்டருக்குக் கொடுத்த தகவல்கள் இவை. ''பெண் அழகாக இருக்கவேண்டும், உருவம் சிறியதாக இருக்கவேண்டும்! எதையும் தேடிச் சேகரிக்கும் மனோபாவம் இருக்கவேண்டும், அங்குமிங்கும் பறந்துகொண்டே இருக்கவேண்டும்''.

தகவல்களைப் பெற்றுக்கொண்ட கம்ப்யூட்டர் பளிச்சென்று பதில் சொல்லிற்று. ''நீங்கள் மணக்க வேண்டியது பெண்ணை அல்ல; ஒரு சிட்டுக்குருவியை!''.

## வைகோவை மலைக்க வைத்த பில்கிளிண்டன்



''வியக்கவைக்கும் பேச்சாளரான உங்களை மிகவும் மலைக்க வைத்த பேச்சாளர் யார்?'' என்று வைகோவிடம் செய்தியாளர்கள் கேட்டனர்.

வைகோ சொன்ன பதில், பில் கிளிண்டன். ''சேக்ஸ்பியர் நாடகத்தில் மார்க் அன்ரனியின் பேச்சும், இரண்டாம் உலகப்போரின்போது வின்ஸ்டன் சேர்ச்சில் ஆற்றிய உரைகளும், லிங்கன் நினைவகம் முன்பு 1963 இல் மார்ட்டின் லூதர் கிங் ஆற்றிய உரையும் என்னை மிகவும் கவர்ந்தவை.

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக பில் கிளிண்டன், இரண்டாவது முறையாக வெற்றிபெற்றவுடன் அமெரிக்க மக்களுக்கு நன்றிதெரிவித்துப் பேசினார். அது எழுதிவைத்துப் படிக்கப்பட்ட உரை அல்ல.

'நான் நன்றி கூறுகிறேன்...நான் நன்றி கூறுகிறேன்' என்று அவர் அடுக்கிய விதமும், அருவி எனப் பாய்ந்த சொற்களும், பொருள் பொதிந்த கருத்துகளும் என்னை மலைக்க வைத்தன. கட்டணம் செலுத்திப் பேச்சைக் கேட்பதற்கு கிளிண்டன் உரைக்குத்தான் அமெரிக்காவில் அதிகம் பேர் கூடுகிறார்கள்'' என்றார் வைகோ.

## பள்ளிக்கூடம்

கணினிச் சிறைக்குள் கட்டாயக் கைதிகளாய் மழலைகள்...



## முந்தானை

மூன்று முடிச்சு
போட்டவரை
முடிந்துகொள்ளவா
முந்தானை?
இல்லை...
இல்லவே இல்லை...!
அபலைப் பெண்கள்
கண்ணீர் துடைக்க
உதவும்
நீளக்
கைக்குட்டைதானே...
முந்தானை.





''ஒரு சீதக்காதி''

'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பது பழமொழி. சீதக்காதி என்ற மன்னர்தன் இறப்பால் நன்மையை வழங்கிவிட்டுச் சென்றார் என்பது வரலாறும்கூட.

இப்போது, புதிய சீதக்காதியாக -டெல்லியில் ஒரு பிச்சைக்காரர் தன் இறப்பிற்கு முன் ரூ.ஒரு லட்சத்தை நன்கொடையாக விட்டுச் சென்றுள்ளார்.

டெல்லி முசாபர் நகரில் ஒரு குடிசையில் வசித்துவந்த இஸ்மாயில்கான் (வயது 65) என்பவர் திடீரென இறந்துவிட்டார். அவரை அடக்கம் செய்யச் சென்றபோது பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

அவரது குடிசைக்குள் இருந்த இரண்டு பெட்டிகளைத் திறந்து பார்த்ததில் ஒன்றில் கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுகள் சுமார் ஒரு லட்சம் வரை இருந்தன. இன்னொரு பெட்டியில் புதுத் துணிகளும் ஓர் உயிலும் கிடைத்தன.

தன்னுடைய இறப்புக்குப் பிறகு ஈமச்சடங்குகளுக்குப் போக மீதிப் பணத்தை, தான் எந்தத் தொழுகைக் கூடத்துக்கு அருகில் இருந்து பிச்சை எடுத்தாரோ, அதே தொழுகைக்கூடத்துக்கு அளித்துவிடும்படியும் புதுத்துணிகளை ஏழைகளுக்கு வழங்கிவிடுமாறும் அதில் அவர் எழுதியிருந்தார்.

## புலிகளைத் தேடும் பி.டி.உஷா



ஓட்டப்பந்தய புயல் பி.டி.உஷா, இப்போது புலிகளை தேடிக்கொண்டு இருக்கிறார். அவர், கேரளாவில் தடகளப் பயிற்சி மையம் நடத்திவருகிறார். 50இற்கும் மேற்பட்டவர்கள் அதில் பயிற்சிபெற்ற வருகிறார்கள்.

தடகள இளம் மங்கைகளின் புயல்வேக ஓட்டங்களைக் கண்குளிர ரசிக்கும் பி.டி.உஷாவின் முகத்தில்ஏராளமான எதிர்பார்ப்பு மின்னல்கள்!

''வருகிற 2011 ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்காக தங்கப்பதக்கம் பெற்றே தீருவது என்ற குறிக்கோளுடன் இவர்களுக்குப் பயிற்சியளித்து வருகிறேன். அனைவரிடமும் 'தங்க கனவு' கனன்றபடி இருக்கிறது.


பெண் என்பவள் அழகில் புள்ளிமானாகவும், திறமையில் சூரப்புலியாகவும் இருக்கவேண்டும். தடகளத்தில் அப்படிப்பட்ட புலிகளைத் தான் நான் தேடிக்கொண்டு இருக்கிறேன்'' என்கிறார் பி.டி.உஷா.



''எதுக்கு உங்க கணவரை டைவர்ஸ் பண்றீங்க?''

புதுப்படத்துக்கு கல்யாணம் ஆகாத புதுமுகம் தேவைன்னு சொன்னாங்க!''

## செவ்வாய் கோளில் மனிதன்வாழமுடியாது



செவ்வாய்க் கோளில் தண்ணீர் இருக்கிறது. உயிர்க்காற்று இருக்கிறது. ஆனால், மனிதன் அங்கே குடியேறிவிடமுடியாது.

செவ்வாயில் புழுதி அதிகம். அடிக்கடி புழுதிப் புயல் வீசுகிறது. மனிதன் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது. பயிர்கள் விளையவும் வாய்ப்பு இல்லை. எனவே, செவ்வாய்க்கோளில் மனிதன் குடியேற முடியாது என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.




''தெரியும், அப்பத்தானே அவளுக்கு என் சமையலோட அருமை தெரிய வரும்!''

## சமஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கு

வால்மீகி முனிவர் இராமாயணம் என்ற நூலை சமஸ்கிருதத்தில் பாடினார்.

அந்தக் காவியத்தை கவிச்சக்கரவர்த்தியான கம்பர் பெருமான் 'இராமகாதை' என்ற பெயரில் தமிழ்மொழியில் பாடிப் பெருமை தேடித்தந்தார்.

அதுபோலவே, சமஸ்கிருதத்தில் செய்யப்பட்ட மகாபாரதத்தை, வில்லிப்புத்தூர் ஆழ்வார் தமிழில் பாடினார். சமஸ்கிருதத்தில் இருந்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை 'செவ்வைச் சூடுவார்' என்பவர் தமிழில் பாடினார்.

# புகழ்பெற்ற மரங்களும் மகான்களும்



உலகில் எத்தனையோ மரங்கள் உண்டு என்றாலும் சிலவகை மரங்கள் மனிதர்களிடையே நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றன. அவற்றில் மிக முக்கியமானது, போதி விருட்சம் அல்லது போதிமரம் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் போதிமரம் பீகார் மாநிலம் புத்தகாயா அருகே இருக்கிறது.

இந்த மரத்தின் அடியில் அமர்ந்துதான், கபிலவஸ்துவின் இளவரசரான சித்தார்த்தன் ஞானோதயம் பெற்று புத்தராக மாறினார்.

புத்தர் ஞானோதயம் பெற்ற புனித மரத்தின் கிளை ஒன்றை இலங்கையின் புத்ததுறவியான மகிந்தன் இலங்கைக்கு எடுத்துச்சென்றார். அதை அனுராதபுரம் நகரில் நட்டுவைத்தார். அங்கு அந்தச் சிறுகிளை மரமாக தழைத்த வளர்ந்தது. அந்த மரம் மகாபோதி என்றழைக்கப்படுகிறது.

சீன யாத்திரிகரான யுவான் சுவாங் என்பவர் புத்தகாயாவில் இருந்த போதிமரத்தைக் கொண்டாடியதாகவும் பின்னர் இந்தப் போதிமரத்தை வங்காளத்தை ஆட்சிசெய்த சசாங்கா என்ற மன்னன் அழித்துவிட்டதாகவும் கூறுவார்கள். இதனால், அனுராதபுரத்திலிருக்கும் மகாபோதி மரத்திலிருந்து ஒரு சிறிய கிளை பறிக்கப்பட்டு, அது புத்தகாயாவில் நடப்பட்டதாம்.


இந்தியாவில் புகழ் பெற்ற மற்றொரு நகரான பத்ரிநாத் நகரில் மிகப்பழமைவாய்ந்த மல்பெர்ரி மரம் ஒன்று உள்ளது. இந்த மரத்தின் அடியில் இருந்து மகா சங்கராச்சாரியார் (கி.பி.788-820) தியானம் செய்தார் என நம்பப்படுகிறது. மேலும் இந்த மரத்தின் அடியில் இருந்தபோதுதான் இவர் பிரம்மசூத்திரத்தை எழுதினார் என்பார்கள்.

அக்பரின் அவையில் பிரபல அறிஞராகத் திகழ்ந்தவர், தான்சேன். இவரது அடக்கஸ்தலம் குவாலியர் நகரில் உள்ளது. இங்குள்ள ஒரு புளிய மரத்தின் அடியில்தான் தான்சேனின் அடக்கஸ்தலம் இருக்கிறது. பிரபல இசைக்கலைஞரான தான்சேன் இந்த புளிய மரத்தின் பக்கம் வரும்போதெல்லாம் தன் குரல் வளத்திற்காக புளியம் இலைகளைப் பறித்துச் சாப்பிடுவது வழக்கம்.

தெற்கு குஜராத்தில் ஒரு மிகப்பழமையான ஆலமரம் இருக்கிறது. இந்த மரத்தை கபீர்வட் என்று அழைக்கிறார்கள். 15 ஆம் நூற்றாண்டில் பனாரஸ் நகரைச் சேர்ந்த துறவியும் கவிஞருமான கபீர் குஜராத்திற்கு பயணமானபோது இந்த மரத்தின் அடியில் தியானம் செய்து அதேநிலையில் சமாதி ஆனார் என்று கூறப்படுகிறது.

பெங்களூரிலிருந்து 70.கி.மீட்டர் தொலைவில் கர்நாடகா - ஆந்திர மாநில எல்லையில் அஸ்வதா என்னும் ஒருமரம் இருக்கிறது. இதை சிமெண்ட் தூண்கள் கொண்டு முட்டுக்கொடுத்திருக்கிறார்கள். இந்த மரம் மகாபாரதத்தில் வரும் விதுரரால் நடப்பட்டது என்ற நம்பிக்கை இப்பகுதி மக்களிடம் உள்ளது.

# அவள் கொடுத்த விலை



நான் சமையலறைக்குள் நுழைய முற்பட்ட நேரத்தில் வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தேன் . எதிரில் மதன் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்ததும் எனக்கு குப்பென்று வியர்த்தது.

''இந்த நேரத்தில நீங்க எதுக்கு இங்கே...?

''நடுக்கத்துடன் கேட்டேன்.

''என்னங்க இது, நீங்கதானே இன்னிக்கு வரச்சொன்னீங்க?'' என்று பணிவோடு சொல்லி வரவேற்பறை சோபாவில் உட்கார்ந்தான் மதன்.

''ஓ...மறந்தே போயிட்டன். ஆனால் அந்த வேலையை இன்னும் என்னால் முடிக்க முடியவில்லை'' .

''நேரம் ரொம்ப ஓடிக்கொண்டு இருக்கு. நம்பகிட்ட. நாளைக்கோ நாளன்னிக்கோ பெரிய அய்யா வந்திடுவார். அதுக்கு முன்னாடி அந்த பைல் நம்ம கைக்கு வந்தாகணும். நீங்க கைநீட்டி அட்வான்ஸ் வாங்கியிருக்கீங்க, மறந்துடாதீங்க...'' என்றான் மதன் அழுத்தமாக.

''கண்டிப்பாக முயற்சி பண்றேன். இப்போ நீங்க கிளம்புங்க. ராஜன் வந்துட்டார்னா பிரச்சினையாகிவிடும்''.

மதன் கிளம்பிச் சென்றதும்தான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். குழந்தைகள் பள்ளியிலிருந்து திரும்ப இன்னும் 15 நிமிடங்களே இருந்தன. சமையலறை வேலையில் இருந்தபோதும் எனது மனம் அந்த பைலை எடுப்பது குறித்த சிந்தனையிலேயே இருந்தது.

பள்ளியிலிருந்து திரும்பிய பிள்ளைகளுக்கு டிபன் பரிமாறிவிட்டு ஓய்வெடுப்பதற்காக படுக்கையறைக்குள் நுழைந்தேன்.

பணத்தையும் மரியாதையையும் ஒவ்வொருவரும் விரும்பவே செய்கின்றனர். எனக்கு இந்த விஷயத்தில் பேராசை கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. உலகத்தில் உள்ள அனைத்து சுகங்களையும் அனுபவித்திட துடித்தேன். பணக்காரக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட விரும்பினேன். ஆனால் நடுத்தட்டு குடும்பத்து ராஜனைத்தான் திருமணம் செய்துகொள்ள நேர்ந்தது. ராஜனுக்கு தனியார் நிறுவனத்தில் கிளார்க் வேலை. ராஜனின் அண்ணன் பன்னாட்டு நிறுவனத்தில் நிர்வாக மேலாளர். கவர்ச்சியான ஐந்திலக்க சம்பளம். எனக்கு அவர்கள் மீது பொறாமை. ஏனெனில், எனது சொற்ப விலை ஆடைகள் மற்றும் பழைய மாடல் நகைகளை இளக்காரமாக பேசுவார்கள் அவர்கள். நமக்கு அதிர்ஷ்டம் அவ்வளவுதான் என்று சில ஆண்டுகள் வரை எளிமையான வாழ்க்கையை அரவணைத்திருந்தேன். ஆனால் சொகுசாக வாழவேண்டும் என்ற ஆசை மீண்டுமொரு தடவை எனது மனதில் அழுத்தமாக உட்கார்ந்துவிட்டது. வெகு விரைவில் எனது பொறுமை, சகிப்புத் தன்மை எல்லாம் மாயமாகி இருந்தன. எதற்கெடுத்தாலும் கோபப்படத் தொடங்கினேன். வார்த்தைகளில் அனல் பறந்தது. நான் இப்படி மாறிப்போனது குடும்பத்தினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் மாமியாரால் எனது மாற்றத்துக்கான காரணத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது . இளைய மகன் ராஜனின் அந்தஸ்தை உயர்த்தும் நோக்கத்தில் வீடு ஒன்றை வாங்கி அவன் பெயருக்கு பதிவு செய்து தந்தாள். தனிக் குடித்தனம் போக ராஜன் விரும்பவில்லை. ஆனால் எனது பிடிவாதம் தனிக்குடித்தனம் போக வைத்தது.

புது வீட்டில் குடிவந்ததும் மகிழ்ச்சிக்கடலில் மிதந்தேன். ஆனால் மகிழ்ச்சி ரொம்ப நாள் நீடிக்கவில்லை. கூட்டுக்குடும்பத்தில் இருந்தபோது எனக்கு கிடைத்த வசதிகளை. தனிக்குடித்தனம் போன பின்பு ராஜனின் சொற்ப சம்பளத்தில் அனுபவிக்க முடியவில்லை. வீட்டுச்செலவுக்கே வருமானம் போதாத நிலையில் நான் ஆசைப்பட்ட புது நகைகள், பட்டுப்புடைவைகளை வாங்கவும், பெரிய ஹோட்டல் விருந்துகளுக்கு செல்லவும், ராஜன் எங்கே போவான்? எனது கனவுக்கோட்டை மீண்டுமொரு தடவை தகர்ந்து தரை மட்டமானது.

ஒரு நாள் .....

''அங்கே இருக்கும்போது எவ்வளவு நிம்மதியா இருந்தோம். எல்லாத்தையும் கெடுத்துப்போட்டுவிட்டு என்னையே குறை சொல்றியா நீ ?'' என்று கையை ஓங்கினான் ராஜன். எமது உறவில் நாளுக்கு நாள் விரிசல் அதிகமாகிக்கொண்டே வந்தது. பணப்பற்றாக்குறைதான் அதற்கு முக்கிய காரணமாக இருந்தது. இந்த நேரத்தில்தான் எனக்கு பழக்கமானான் மதன். ராஜன் பணியாற்றும் அதே அலுவலகத்தில்தான் மதனும் வேலை செய்து வந்தான். ராஜனின் வீட்டுக்கு வரும்போதெல்லாம் எனக்கு விலை உயர்ந்த பரிசுகளைக் கொண்டு வருவான் மதன். அன்று ஞாயிற்றுக்கிழமை ஒரு முக்கிய வேலையாக செங்கல்பட்டுக்கு போயிருந்தான் ராஜன். மாலை நேரத்தில் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தான் மதன் . இந்தத் தடவை பரிசுக்கு பதிலாக கனமான கவர் இருந்தது. அந்தக் கவரில் என்ன இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ளத் துடித்தேன். அதைப் புரிந்துகொண்டவனாய் கவருக்குள் இருந்த 500ரூபாய் கட்டுக்கள் 2ஐ எடுத்து டீப்போய் மீது வைத்தான் மதன். எனக்கு புருவங்கள் ஆச்சரியத்தால் உயர்ந்தன. ''இந்த ஒரு லட்சம் ரூபாய், அட்வான்ஸ் தான்.. நான் சொன்ன வேலையை செஞ்சிட்டீங்கனா இன்னும் 5லட்சம் உங்களுக்குக் கிடைக்கும். .''என்றான் மதன்.

நான் அதிர்ச்சியில் திக்குமுக்காடி போயிருக்க மதனே தொடர்ந்து பேசினான். ''ஆபீசில் ஒரு டீலிங்கில் வேறொருத்தர் பேரில் நான் 10 லட்சம் ரூபாய் கமிஷன் வாங்கிட்டேன். இதை யாரோ எங்க எம்.டிக்கு மொட்டைக்கடிதம் எழுதிப்போட்டுட்டாங்க. உடனே அவர் ராஜனிடம் உண்மையைக் கண்டுப்பிடிக்கச் சொல்லி உத்தரவு போட்டார். ராஜன் புத்திசாலி எல்லா ஆதாரங்களையும் சேகரிச்சு ஒரு பைலை தயார் பண்ணிடான். அது எங்க எம். டி. கைக்குப் போனா எனக்கு வேலையும் போகும், ஜெயிலுக்கு போகவேண்டி இருக்கும். அதனால அந்த பைல் ஒரு வாரத்துக்குள் என் கைக்கு வந்தாகணும். அதுக்குத்தான் இந்த இந்த 5 லட்சம் ரூபா''.

கணவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வதா? என நான் முதலில் தயங்கினாலும் பணத்தாசை கண்ணை மறைக்கவே, அட்வான்சை பெற்றுக்கொண்டேன்.

மதன் கொடுத்திருந்த ஒருவார அவகாசத்தில் 6 நாட்கள் முடிந்துவிட்டிருந்தன. இன்று கடைசி நாள். ஒருசில அலுவலக தஸ்தாவேஜு களை அலுமாரி லொக்கரில் பூட்டி வைக்கும் பழக்கம் உள்ளவன் ராஜன். அதன் மாற்றுச்சாவி என்னிடம் இருந்தது. குழந்தைகள் தூங்கி விட்டிருந்தனர். ராஜன் எதையோ மும்முரமாக எழுதிக்கொண்டிருந்தான். ராஜன் தூங்கிய பிறகே அலுமாரி லொக்கரைத் திறக்க முடியும் என்பதால் அந்தச் சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தேன்.

இரவு 11மணியாகியும் ராஜன் வேலையைத் தொடர்ந்து கொண்டிருந்தான். களைப்பு காரணமாகஎன்னை அறியாமலே தூங்கிப்போனேன். சட்டென்று கண்விழித்த போது கடிகாரம் இரவு மணி

## உண்மைக்கதை

2 காட்டியது. ஓசைப்படாமல் எழுந்து அலுமாரி லொக்கரைத் திறந்தேன் . ஒரே மாதிரியாக 7,8 பைல்கள் இருந்தன. படபடப்புடன் ஒவ்வொன்றாக புரட்டத்தொடங்கினேன் . ஒரு மணிநேர முயற்சிக்குப் பிறகு மதன் சம்பந்தப்பட்ட பைலைக் கண்டுபிடித்துவிட்டேன்.

மறுநாள் காலை எனது கண்களில் ஒரு மின்னல் குடி கொண்டிருந்தது. வழக்கத்திற்கு மாறாக அன்று ராஜனிடம் இனிக்க இனிக்கப் பேசினேன். வீட்டு வேலைகளையும் ஒழுங்காக செய்தேன். மதனிடமிருந்து பாக்கி 4 லட்சம் கைக்கு வந்ததும் ஆகாயத்தில் மிதப்பதாக உணர்ந்தேன். அப்போது வாசல் கதவு தட்டப்பட்டது.

கதவை திறந்ததும் எனது சப்த நாடியும் ஒடுங்கிப்போனது. எதிரில் மதன் புன்னகைக்க அவனுக்கு பின்னால் பொலீஸார் நின்று கொண்டிருந்தனர். ''என்ன விஷயம் மதன் பொலீஸோடு வந்திருக்கீங்க?'' என்றேன் நடுக்கத்துடன். ''நாங்க சொல்றோம்...'' என்றபடி வலுக்கட்டாயமாக உள்ளே நுழைந்தார்கள் பொலீஸார். ''உங்க கணவர் ராஜன் இவருக்கெதிராக பொய்யான ஆதாரங்களை உருவாக்கி பிளாக்மெயில் செய்து இவரிடமிருந்து ரூபா5 லட்சம் வாங்கிட்டதாக புகார் கொடுத்திருக்கார். உங்க வீட்டை சோதனை போட வந்திருக்கின்றோம்'' என்றனர்.

சோதனையில் பணம் கைப்பற்றப்பட்டதையடுத்து ராஜனை கைது செய்தனர். ராஜனின் பார்வை மனைவி மீது திரும்பியது. ஒரே நொடியில் அங்கிருந்த சூழ்நிலை முற்றிலும் மாறிப்போனது. நான் செய்த தவறு ராஜனை சிக்க வைத்து விட்டது. நான் அவமானத்தால் தலை குனிந்ததை பார்த்ததும் ராஜனுக்கு விஷயத்தின் பின்னணி புரிந்து விட்டது. அவன் கண்களில் கோப அனல் வீசியது. ராஜனை விடுவிக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் என்ன? மதனின் பணபலம் மற்றும் செல்வாக்கு எனது முயற்சிகளை முறியடித்துவிட்டன.

நீதிமன்றத்தில் ராஜனுக்கு 3ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எனது பேராசையால்தானே கணவனுக்கு இந்த நிலை என்று அழுது புலம்பினேன். பேராசை பெருநஷ்டம் என்பதை நான் புரிந்துகொள்ள கொடுத்த விலை அதிகம்தான்.

# பிரிவோம் சந்திப்போம் படத்தில்

# ஸ்னேகா உள்ளே கமலினி வெளியே

கரு.பழனியப்பனின் பிரிவோம் சந்திப்போம் படத்திலிருந்து நாயகி கமலினி முகர்ஜி நீக்கப்பட்டு விட்டார். அவருக்குப் பதில் சேரனின் விருப்பத்திற்கு அமைய ஸ்னேகா சேர்க்கப்பட்டுள்ளார்.

தங்க தேவதை கமலினி முகர்ஜி கரு.பழனியப்பன் இயக்க, சேரன் ஹீரோவாக நடிக்க 'பிரிவோம் சந்திப்போம்' படத்தில் நாயகியாக ஒப்பந்தமானார். 'வேட்டையாடு விளையாடு' படத்தின் ஹிட்டைத் தொடர்ந்து கமலினியை இந்தப் படத்திற்கு தெரிவுசெய்தார் பழனியப்பன். இந்த நிலையில் படத்திலிருந்து தூக்கப்பட்டுள்ளார் கமலினி. அவருக்குப் பதில் ஸ்னேகாவை நாயகியாக்கியுள்ளனர். சேரன் விருப்பப்படி ஸ்னேகா நாயகியாகியுள்ளாராம். 'வேட்டையாடு விளையாடு' படம் சூப்பர் ஹிட் ஆகியும் கூட, கமலினிக்கு புதிய படங்கள் எதுவும் வரவில்லை. இதனால் அவர் தெலுங்கு மற்றும் மலையாளத்தின் பக்கம் தனது கவனத்தைத் திருப்பினார். தெலுங்கில் 3 படங்களை முடித்துவிட்டார் கமலினி லாரன்ஸ், ராகவேந்திரா இயக்கத்தில் உருவாகும் 'ஸ்டைல்' படத்திலும் தங்கச்சியாக நடித்துள்ளார்.

இந்த நிலையில்தான் கரு.பழனியப்பன் படத்தில் தெரிவானார் கமலினி. ஆனால் கமலினியை தெரிவு செய்ததில் சேரனுக்கு ஆரம்பத்திலிருந்தே விருப்பம் இல்லையாம். இருந்தாலும் சேரனை சமாதானப்படுத்தி கமலினியை ஒப்பந்தம் செய்தாராம் பழனியப்பன். பல விஷயங்களில் ஹீரோவுடன் கமலினி ஒத்துப் போகவில்லையாம். மேலும் சம்பளத்தையும் அதிகமாக கேட்டாராம். இயக்குநருக்காக இதைப் பொறுத்துக் கொண்டாராம் சேரன். கடைசியில் பழனியப்பனுக்கும் பிடிக்கவில்லையாம். இதைப் புரிந்து சேரன் ஸ்னேகாவிடம் பேசியுள்ளார். இதையடுத்து கமலினியை தூக்கிவிட்டு ஸ்னேகாவைப் போட்டு விட்டார்கள்.








# புடைவையில் அனுஷ்கா

''தெலுங்கு சினிமா முழுக்க முழுக்க கிளாமரில் தான் ஓடுகின்றது. கிளாமர் இல்லாமல் எதையும் சாதிக்க முடியாது என்ற நிலையில் இருக்கிறது. கிளாமர்தான் முதலாவது; இரண்டாவதுதான் நடிப்பு'' என்கிறார் 'இரண்டு' நாயகி அனுஷ்கா. ''இருந்தாலும் நடித்துக் கொண்டிருந்த எனக்கு இப்போதுதான் கலக் கலாக நடிக்க வாய்ப்பு வந்திருக்கிறது. 'அருந்ததி' என்ற படத்தில் பம் முழுக்க புடைவை கட்டி நடிக்கிறேன். எனது நடிப்புக்கு எனக்கு வெற்றி கிடைக்கும் என்று சொல்கிறார்கள். மும்பையில் யோகா ஆசிரியரா[illegible] இருந்தபோது எனக்கு நிறைய தோழிகள். இப்போது கூட அவர்களுடன் தொடர்பில் இருக்கிறேன். ஊடகங்களுக்குப் பயந்து வெளிவராதவர்கள் பட்டியலில் நான் இல்லை. என் காரில் நான் தனியே வெளியே போவேன். என்னோட தோழிகளை சந்திப்பேன். சந்தைக்குப் போய் காய்கறி வாங்குவதும் எனக்கு மிகவும் பிடித்த விஷயம்'' - என்கிறார் அனுஷ்கா.

# சந்தியாவின் ராகம்

நல்ல நடிகையாக அறியப்பட்ட சந்தியாவுக்குள் ஒளிந்திரு
பாடகியை வெளியே கொண்டு வந்து, மஞ்சள் வெயில் ப
ஓர் அழகான பாடலைப் பாட வைத்துள்ளார் இசையமைப
பரத்வாஜ். 'காதல்' மூலம் நடிகையாக அறிமுகமானவர் ப
பூச்சி மாணவியாக இருந்த சந்தியா. முதல் படத்திலேயே
பில் முத்திரை பதித்த சந்தியா ஒரு படத்துடனே ஸ்டார் ந
யானார். தற்போது நிறையப் படங்களில் நடித்து வருகிறா
சந்தியா. அதில் ஒன்றுதான் மஞ்சள் வெயில். இதில் பிர
வுடன் இணைந்து நடித்து வருகிறார் சந்தியா. திறமையா
நடிகையாக அறியப்பட்ட சந்தியாவுக்குள் பாடகி ஒரு
ஒளிந்திருப்பதை அறிந்தார் இசையமைப்பாளர் பரத்வா
இதையடுத்து மஞ்சள் வெயில் படத்தில் ஒரு பாடலை சந்
யாவை விட்டு பாட வைத்துள்ளார். பா.விஜய்யின் அந்தப்
பாடல், சந்தியா பாட, சமீபத்தில் ஒலிபரப்பு செய்யப்பட்ட
தாம். சந்தியாவின் குரலைக் கேட்டு அசந்துபோய் விட்டா
பரத்வாஜ். பாடல் வரிகள் இப்படிப் போகின்றன...
''ஆண்- கோல்ட் கோட்ட பூ நீயே கலக்கலா ஐஸ் போட் தீ
கலக்கலா
சந்தியா - ரெயின் கோட்டட் மழை நீயா கலக்கலா ரிக்க....






# மெலிகிறார் இலியானா

''எனக்கு தமிழ்ப் பக்கம் வரவே விருப்பம் இல்லை என்று சொல்லிவிட்டேன். தெலுங்குதான் எனக்கு விருப்பமான இடம். இங்கே ஒல்லியான தேகத்துக்குத்தான் மவுசு. அதனால்தான் திடீர் என்று உயர்ந்த என[illegible]ய உடனடியாக குறைக்கிறேன்'' என்றார் இலியானா. கவர்ச்சி மழையில் தெலுங்கு தேசம் நனைந்து கிடக்கின்றது. இதனால் இலியானாவின் சம்பளம் ஒவ்வொரு படமாக உயர்ந்து கொண்டேயிருக்கிறது. தெலுங்கு இளம் ஹீரோக்கள் பலரும் இவரது கால்ஷீட்டுக்குத்தான் தவம் கிடக்கிறார்கள். இடையில் இந்தி படத்தில்கூட நடிக்க இலியானாவுக்கு வாய்ப்பு வந்தது. 'தெலுங்கு அளவுக்கு சம்பளம் தரமாட்டோம். இதில் ஹீரோயினுக்கு காட்சிகள் குறைவுதான்' எனக்கூறியதால் கொலிவூட் வாய்ப்பையே உதறிவிட்டார். இதேபோல் தமிழ்த் தயாரிப்பாளர்களும் இவருக்கு கால்ஷீட் கொடுத்தார்கள். ஆனால் இவரின் சம்பளத்தைக் கேட்டதும் பின் வாங்கி ஓடிவிட்டார். தெலுங்கில் மட்டுமே தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறார் இலியானா.

# மீண்டும் வருகிறார் ஜோ...?


ஜோதிகா மீண்டும் நடிக்க விரும்பினால் நான் ஆட்சேபிக்கமாட்டேன் என்று சூரியா கூறியுள்ளார். ஜோதிகாவைக் காதலித்து, சம்மதம் வரும் வரை காத்திருந்து, கல்யாணத்தை வெற்றிகரமாக முடித்து நினைத்ததைச் சாதித்த பூரிப்பில் சந்தோஷமாக குடும்பம் நடத்தி வருபவர் சூர்யா. தற்போது 'வேல்' படப்பிடிப்பில் படு பிசியாக உள்ளார் சூரியா. பிசியாக இருந்தபோதிலும் ஷூட்டிங் இடைவெளியில் செய்தியாளர்களைச் சந்தித்து ஜாலியாக பேசினார். ''உலகிலேயே அதிஷ்டசாலியான நபர்களில் நானும் ஒருவன். நான் விரும்பிய பெண்ணே எனக்கு வாழ்க்கைத் துறையாகவும் வந்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளேன். எங்களது திருமணத்திற்கு பிறகு எனது நண்பர்கள் பலரும், ஏன் ஜோதிகாவை தொடர்ந்து நடிக்க அனுமதிக்கவில்லை என்று கேட்கிறார்கள். உண்மையில் சினிமாவை விட்டு விடுமாறு நான் ஜோதிகாவிடம் கூறவில்லை. அது அவராகவே எடுத்த முடிவு. அவர் மீது எந்த முடிவையும் நான் திணிப்பதில்லை. அவர் நடிக்க வேண்டும் என்று விரும்பினால் அதை நான் தடுக்கமாட்டேன், ஆட்சேபிக்கமாட்டேன்'' என்றார் சூர்யா. சூர்யா, ஜோதிகா திருமண வரவேற்பின்போது, சூரியாவின் தந்தை சிவகுமார் கூறுகையில், கல்யாணத்திற்குப் பிறகு ஜோதிகா மீண்டும் நடிக்க மாட்டார் என்றார். சினிமாவில் போதுமான அளவுக்கு சாதித்து விட்டார் ஜோதிகா. இனிமேல் குடும்ப நிர்வகாத்தைப் பார்த்துக் கொள்வார் என்றும் சிவகுமார் தெரிவித்தார். எனவே திருமணத்திற்குப் பின் ஜோதிகாவே விரும்பினாலும் கூட அவரால் நடிக்க முடியாது என்றுதான் பலரும் நினைக்கின்றனர். எனவே ஜோதிகா நடிப்பதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்று சூர்யா கூறினாலும் கூட சிவகுமார் சம்மதிப்பாரா என்பது கேள்விக்குறிதான். ஜோதிகா மீண்டும் நடிக்க வருவது சூர்யாவின் கையில் இல்லை.

ரிந்திருக்கும்
யில் படத்தில்
பமைப்பாளர்
வர் பட்டாம்
லயே நடிப்
டார் நடிகை
ருகிறார்
ல் பிரசன்னா
ன்மயான
கி ஒருவர்
ரத்வாஜ்.
லை சந்தி
அந்தப்
ப்பட்ட
விட்டாராம்

ாட் தீ நியா

க்க ....''

# விக்ரமுக்கு புகழாரம்



பிலிம்பேர் பத்திரிகையின் தென்னிந்தியப் பதிப்பின் 3ஆவது இதழ், நடிகர் விக்ரமின் சிறப்பைத் தாங்கி வெளிவந்துள்ளது. இந்த இதழை விக்ரம் வெளியிட்டு வைத்தார். முன்னணி இதழான பிலிம்பேர் தனது தென்னிந்தியப் பதிப்பை கடந்த மே மாதம் தொடங்கியது. முதல் இதழை திரிஷாவும் 2ஆவது இதழை இளைய தளபதி விஜய்யும் வெளியிட்டுவைத்தனர். இந்நிலையில் 3ஆவது இதழ் கடந்த வாரம் சென்னை அக்கார்ட் இன் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த இதழ் நடிகர் விக்ரமின் ஸ்பெஷலாக' உருவாக்கப்பட்டுள்ளது. இதழை வெளியிட்டபின் சீயான் பேசுகையில், '' நாட்டின் முன்னணி திரை இதழான பிலிம்பேரின் தென்னகப் பதிப்பை வெளியிடுவதில் பெருமைப்படுகிறேன். இந்த இதழில் என்னைப் பற்றி 'கவர் ஸ்ரோறி' போட்டுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு என்னைப் பற்றி பிலிம்பேரில் செய்தி வராதா? என்று ஏங்கியதுண்டு. இப்போது அது நனவாகியுள்ளது'' - என்று கூறினார்.

# கவிதைப் புனல்

தயாரிப்பு: அஸ்மினா



## என்னை தீயில் எறிந்தவள்

■ கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன்

நீ அறிய மாட்டாய்
ஒரு
பூ உதிர்ந்தால் கூடப் பொசுங்கும் மனசு இது

உனது வருத்தம் உனக்குப் பெருஞ் சுமைதான்
அவலத்தை உரைத்தாய் நீ
எனக்குள் பூத்திருந்த
ஒரு கோடிப் பூக்களிலும் தீப்பற்றிக் கருகிற்று

நோன்பு நாட் காலையொன்றில்
வந்திருந்தாய்
வெளிநாடு போயேனும் வறுமை துடைப்பதற்கு
சிறிசுகளுக்கேனும் சோறு இடும் கனவுகளை
கலங்கிக் கிடந்த கண்களில் வைத்திருந்தாய்

பாஸ்போட் உன் வயதை முப்பதெனக் காட்டிற்று
சின்ன வயதில்
நரை விழுந்து கிழடு தட்டி
பாதிப் பல் விழுந்து பரிதாபமாய் நின்றாய்

முப்பது வயதுக்குள் மூப்பான ரகசியத்தில்
சந்தேகங் கொண்ட
பெரும்பான்மைப் பெரியவரின்
பிடியில் நீயிருந்தாய்
உன் மொழியைஅவர் புரியார்

கவலை தின்று
காற்றுக் குடிக்கின்ற கலையறிவாய் நீ
அவர் அறியார்

உன்னை விசாரிக்க என்னை ஏன் பணித்தார்
சொன்னாய் நீ எல்லாம்
அந்த அதிகாலை எனக்குள் பூத்திருந்த
ஒரு கோடிக் கவிதைகளும் தீப்பற்றிக் கருகிற்று

'... ரெண்டு வரிசமாச்சி
கொள்ளி எடுக்கப் போனவர சுட்டுப் போட்டாக...
மூணு புள்ள எனக்கி
ஒரு றாத்தல் பாண் வாங்கித் தின்னச் சொல்லி
தங்கச்சிக்கிட்ட பாரங்குடுத்திட்டு வாறான் வாப்பா...'

ஒரு
பூ உதிர்ந்தால் கூடப் பொசுங்கும் மனசு இது
நீ அறிய மாட்டாய்தான்

என் கண்ணில் குளம் கண்டு உன்னை அனுமதிக்க
போனாய் பெண்ணே
என்னை ஒரு பெருந் தீயில் எறிந்து விட்டு!

---

கட்டழகை காட்டி விழி
வெட்டி என்னை வீழ்த்திவிட்டு
கட்டழுந்து போடுறாயேன் வேலி ? - உனக்கு
கட்டிடவே செய்திருக்கேன் தாலி!

எட்ட நின்று சுட்டு செல்லும்
சிட்டு உந்தன் வட்டமுகம்
திட்டமிட்டு கொல்வதுதான் ஏனோ? - நாளும்
வட்டமிட்டு வந்தி ஏல்வாம் வீணோ?

பட்டமர மாகி நானும்
பட்ட துயர் போதும் நெஞ்சில்
மொட்ட விழ்ந்து நிற்பவளே வாணி! - உடன்
இட்டமுடன் என்னருகில் வா நீ!

கன்னியுன்னை தின்று விட்டு
கன்னமிட்டு செல்லு கின்ற
எண்ணமெனக் கில்லையடி நம்பு! - அஃதே
எண்ணுபவன் மாபெரிய வம்பு!

அன்னமுன்னை எண்ணி யெண்ணி
ஆறுகட வாகிட்டேன்டி...
இன்னுமென்னைப் புரியலையா சொல்லு?! - நிதமும்
இதயமெங்கும் குத்துதடி முள்ளு!

■ பொத்துவில் அஸ்மின் உதுமாலெவ்வை

---

## மறுக்கின்றார் எனை மணக்க...

கவிஞர் நீலாவணன்

கறுப்பியென்று பாராமற் காதலித்தார்.
கற்கண்டே கனிரசமே என்றுரைத்தார்.
பிறப்பெதிலும் உனைப்பிரியேன் என்று சொன்னார்.
பிரிந்தாலும் நம்காதல் அழியாதென்றார்.
பொறுப்பற்ற சமுதாயம் புனைந்துசொன்ன
பொய்யுரையைக் கேட்டின்று புறக்கணித்தார்.
இறப்பதற்குத் துணிந்தாலும் முடியவில்லை
ஏனென்றால் அவர் நெஞ்சில் இருக்கின்றாரால்!

வெறுக்கின்ற தவருள்ளம் எனைக்காண.
வேதனையோ டெனைப் பார்த்து விம்முகின்றார்
மறுத்துநான் உண்மைசொன்னால் "பொய் பொய்" என்று
மண்டையிலே அடித்தடித்து மாழுகின்றார்.
'சறுக்கியிங்கு சமுகத்தில் வீழ்ந்தபெண்ணை
சடங்கு செய்க' எனச் சொல்வார் சங்கந்தன்னில்,
மறுக்கின்றார் எனை மணக்க, உபதேசங்கள்
மக்களுக்குத் தான்சொன்னார்; அவருக்கில்லை!

இன்றவர்க்குக் கல்யாணம் என்றுவள்ளி
என்னிடத்திற் கூறியதும் என்மூச்செல்லாம்
நின்றுவிட்ட தப்படியே! நிலத்தில் வீழ்ந்தேன்.
நீர்தெளித்து மீண்டுமெனை எழுப்பினார்கள்.
கொன்றிருப்பேன் அவரைநான், என்ன செய்வேன்
கொலைகாரி என்றுலகம் கூறாதாயின்.
நன்றாக வாழட்டும் புதுப்பெண்ணோடு.
நமக்கேது இனிவாழ்வு? நடைப்பிணந்தான்!

---

## தவிக்கும் இதயம்



பத்து மாதம் சுமந்து பெற்று
பசி தூக்கம் மறந்து
தொட்டிலில் எனைப்போட்டு
சோறூட்டித் தாலாட்டி
நித்திரை மறந்து
என் நிழலாய் இருந்தாயம்மா
ஒருநாள் பொழுதினிலே
உனை விட்டுநான் பிரிந்தேன்
ஒரு வருடமாகுதம்மா
ஓடிவருவாயா என் அருகில்
ஏங்கித் தவிக்கிறது என் இதயம்

■ பீ.கலா மல்லாவி

---

## பௌர்ணிலவு



பௌர்ணமி நிலாக்காலம்
என் வீட்டு ஜன்னலோரம்
நானிருந்து நிலவை
இரசித்துக் கொண்டிருந்தேன்!
சத்தமில்லாமல்
வந்த என்னவள்
ஜன்னலோரம் நின்றாள்!
ஒரு நிலா மறைந்தது
இன்னொரு நிலா தெரிந்தது!
சற்று விலகு - என்று
சைகை காட்டினேன்!
விலகி நின்றவள்
இப்போது
நிலாவையும் அவளையும்
மாறி மாறி பார்த்தேன்
இரண்டு நிலாக்கள்
தெரிந்தன என் வானில்!

■ புலோலியூர் இந்தி

---

## வெற்றி நிச்சயம்

துக்கம் கனத்து
துயில்கிறதா?
ஏக்கம் பொங்கி
வழிகிறதா?
எதற்காய் நீ அழுகிறாய்?
தெரியாதா உனக்கு?
பூக்களெல்லாம்
புயலோடு போராடி
முட்களோடு
முட்டி மோதி
அழகு அரசாங்கத்தை
ஆள்கிறது என்பது
தெரியாதா உனக்கு?
நேரத்தை வெறுமனே
கழித்து விடாமல்
விழித்தெழு
கடினமான கற்பாதையைக்
கடந்துதான்
வெற்றி இலக்கை
அடைய முடியும்.
உனது உள்ளத்தின்
ஆழத்தில் மட்டும் எப்போதும்
நம்பிக்கை மட்டும்
இருந்தால் போதும்
வெற்றி நிச்சயம்.

■ வெலிகம கவிக்குயில்

---

## ஈஸ்வரா!



கோணமலை தனில் வாழ்பவரே- துயர்
தாளவில்லை ஓடி வாருமையா!

தேடி வந்தோம் உமைக் காணவில்லை- கவி
பாடுகின்றோம் வரம் தாருமையா!

உம்மைக் காண வரும் பாதையிலே - பகை
நிற்குதையா நல்லாய்ப் பாருமையா!

சோதனை என்றொரு பேரினிலே- நம்மை
துவட்டி எடுக்கின்றார் போதுமையா!

இராவணன் வாழ்ந்திட்ட பூமியிலே- தமிழ்
வாழுரிமை பறி போனதையா!

மீட்டிடவே பகை ஓட்டிடவே- வெற்றி
நாட்டிடவே அருள் வேண்டுமையா!

■ [illegible]

---

## உணர்வுகள்

## அறிவிப்பு - இலக்கியத்தில் அறிவுப் 'பூ' அதனாலோ சிலர் நெஞ்சில் 'அரிப்பு'...

கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன்

மழை உதிரும் மாலைப் பொழுதொன்றில் அவர் ஞாபகம் மீண்டும் என்னுள் துளிர்விட்டது. தொலைபேசினேன். அலுவலகம் வருமாறு அழைத்தவர் நானிருக்கும் இடத்தை விசாரித்ததன் பின் வீட்டுக்கே வருமாறு அழைத்தார். அவரை சந்திக்கும் நோக்கோடு 'வெல்லம்பிட்டிய' சந்தியில் நின்று கொண்டிருந்தேன். அவரது வீட்டை அறிவது சிரமம் என்றபடியால் வான் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். ஒரு 'வெள்ளை வான்' என் முன்னே பிரேக் அடித்து நின்றது. பரபரப்போடு இலக்கத்தைப் பார்த்தேன். அவர் கூறிய இலக்கமே. அதில் ஏறிக் கொண்டேன். அப்போது பூமி வாசிக்க கவிதை எழுதும் வானம் அதை நிறுத்தி விட்டிருந்தது. சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு ஓர் ஆசிரியராகவே அவரிடத்தில் அறிமுகமானேன். அவரது 'யாத்ரா' கவிதைக்கான இதழில் ஓரிரு கவிதைகளும் எழுதியிருக்கிறேன். அவ்வளவுதான் பெரிதாக அறிமுகம் எதுவுமில்லை. ஆனால், என் பெயரையும் நான் முன்பு செய்து வந்த ஆசிரியத் தொழிலையும் அவர் இற்றைவரை ஞாபகம் வைத்திருந்ததை வைத்தே முதல் சந்திப்பிலேயே அவரின் ஞாபகத் திறனை எடைபோடக் கூடியதாக இருந்தது.

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பர். ஆனால், அதற்கு மாற்றமாக "கற்றாரைக் கற்றாரே காறி உமிழும்" இக்கால கட்டத்தில் படைப்பாளன் என்ற கர்வமோ, அறிவிப்பாளன் என்ற அகங்காரமோ, அமைச்சரின் சகோதரன் என்ற வரட்டுக் கௌரவமோ இன்றி அவர் வரவேற்றது என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

வரும்போழ்தில் 7ஆவது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் சிறப்பிதழாக வெளிவந்த 18ஆவது யாத்ரா இதழையும் வழங்கி, நான் எதிர்பாராத நிமிடத்தில் இரவுணவையும் தந்து, என்னைக் கௌரவப்படுத்தி, அவரது காரிலேயே என்னை எனது இருப்பிடத்துக்குக் கொண்டு சென்று விட்டு, அவரது விருந்தோம்பல் பண்பையும் நற்குணத்தையும் காட்டியது அவர் மேலிருந்த மதிப்பையும் மரியாதையையும் மென்மேலும் அதிகரிக்கச் செய்தன.

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடியைச் சேர்ந்த கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன் 1960-02-14 ஆம் திகதி பிறந்தவர். தந்தை சிஹாப்தீன் ஒரு 'மௌலவி' என்பதால் இஸ்லாமிய அறிவும் புலவர் அப்துல் ஸமது ஆலிமின் பேரன் என்பதால் இலக்கிய உணர்வும் உதிரத்திலே உறையப் பெற்றவர். இளம் வயதிலேயே இஸ்லாமிய ஒழுக்க நெறிகளோடு புடம் போடப்பட்ட அவர் 'ஜாமியா நளீமியா' இஸ்லாமியக் கலாபீடத்திலும் சிறிது காலம் கல்வி கற்றவர்.

பத்திரிகை ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் அவர்களின் தினபதி கவிதா மண்டலத்தில் 'ஓட்டமாவடி அஷ்ரப்' என்ற பெயரில் 1978இல் இருந்து மலர ஆரம்பித்த அவரது கவிதைகள் பின்னர், அஷ்ரப் சிஹாப்தீன் என்ற பெயரிலும் சிந்தாமணி, ஈழநாடு, தினகரன், வீரகேசரி, இந்திய சஞ்சிகைகள் போன்றவற்றிலும் பூத்து மணம் வீசத்தொடங்கின. மரபும் புதுமையும் கைகோக்கும்படி எளிய வாசகர்களும் புரிந்து கொள்ளும் வகையில் அவர் அள்ளித் தெளித்த கவிதை வெள்ளிகள் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் பல அதிர்வலைகளை எழுப்பிச் சென்றுள்ளன. அவரது கவிதைகள் பெரும் காட்டை அழிக்கின்ற அக்கினிக் குஞ்சுகளாக திகழ்கின்றன என்றால் மிகையல்ல. அவரது 'ஸெய்த்தூன்' என்ற கவிதை ஒரு காலத்தில் பல்லாயிரக் கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு, கிழக்கு மாகாணம் எங்கும் விநியோகம் செய்யப்பட்டு பல உணர் வலைகளை தோற்றுவித்ததை வைத்தே அவரது கவிதையின் சிறப்பினை நாம் அறிந்து கொள்ளலாம்.

பயிற்றப்பட்ட ஆசிரியரான கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன் 1986இல் பகுதி நேர அறிவிப்பாளராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் காலடி எடுத்து வைத்தவுடனே கவிதை எழுதுவதை சிலகாலம் நிறுத்திக் கொண்டதோடு தனது ஆளுமையை அறிவிப்புத் துறைப் பக்கம் திருப்பினார். தமிழ்ச் சேவை, முஸ்லிம் சேவை, கல்விச் சேவை ஆகியவற்றை திறம்பட நடத்திய அவர் ஒவ்வொரு ஊரையும் அறிமுகம் செய்யும் 'யாவரும் கேளீர்', 'இளைஞர் இதயம்', 'அறிவுக் களஞ்சியம்' போன்ற நிகழ்ச்சிகள் மூலம் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் இதயங்களில் அழியாத தடம் பதித்தார். முஸ்லிம் சேவைக் கவியரங்கத்திலும் வானொலி நாடக நடிப்பிலும் முத்திரை பதித்த கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீனை அறியாதோர் யாருமில்லை.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் சுமார் பத்து வருட காலமாக நிகழ்ச்சித் தொகுப்பாளராக, செய்தி வாசிப்பாளராக கடமையாற்றியுள்ளார். 'ஐ' அலை வரிசையில் நடத்திய 'கேளுங்கள் சொல்கிறோம்' நிகழ்ச்சி அவரின் அறிவாற்றலையும் அறிவிப்புத் திறனை யும் புடம் போட்டுக் காட்டுவதாக அமைந்தது. 'மீண்டும் தலைப்புச் செய்திகள்' எனும் தலைப்பில் தினகரனிலும் 'திரும்பி வரும் தெரு' எனும் தலைப்பில் தினக்குரலிலும் அவர் எழுதிய பத்தி எழுத்துக்கள் பழுத்துப்போன அவரின் இலக்கிய ஆளுமையை கட்டியம் கூறுவதாக அமைந்தன.

புத்தாயிரத்தில் முதலாவது கவிதைக்கான இதழ் எனும் சுலோகம் தாங்கி 2002இலிருந்து வெளிவந்த தரமான கவிதைகளின் தடாகமான 'யாத்ரா' வின் ஆசிரியராக இருந்து அரேபிய, உருது, ஆங்கிலேயக் கவிஞர்களையும் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்து, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு சேவையாற்றிவரும் அவர் யாத்ரா சஞ்சிகையினை இணையத் தளத்திலும் பதிவாக்கினால் அதை உலகம் பூராவுமுள்ள தமிழ் பேசும் மக்கள் படித்துச் சுவைக்க முடியும் என்பது எனது தாழ்வான அபிப்பிராயமாகும்.

2002இல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் பொதுச்செயலாளராக இருந்து அதனைத் திறம்பட நடத்திய அவர், அண்மையில் நடந்து முடிந்த 7ஆவது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் இலங்கைக்கான பிரதிநிதிகளில் ஒருவராகவும் இருந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

1999இல் 'காணாமல் போனவர்கள்' என்ற கவிதை நூலொன்றைத் தந்த கவிஞர் மிக விரைவில் புகழ்பெற்ற ஈராக்கிய கவிஞர் 'ஜமால் ஜுமா' எழுதிய கவிதையை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழி பெயர்த்து (யாத்ராவில் வெளிவந்தது.) அந்தக் கவிதையை 'புத்தகங்களின் புத்தகம்' எனும் தலைப்பில் நூலுருவாக்க இருக்கிறார்.

அமைச்சர் அமீர் அலியின் சகோதரரான கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன் 1993 இல் இருந்து குடிவரவு குடியகல்வு அதிகாரியாக கடமையாற்றியவர். இன்று அனர்த்த முகாமைத்துவ சேவைகள் அமைச்சின் இணைப்புச் செயலாளராக கடமையாற்றி வருகிறார்.

காழ்ப்புணர்வு மிக்க காகங்கள் அவரைப் பற்றி பலவாறு கத்தித் திரிந்தாலும் அதை காதில் வாங்கிக் கொள்ளாது, கணக்கில் எடுத்து நில்லாது ஈழத்து இலக்கியத்தின் வரலாற்றை நோக்கி யாத்திரை செய்யும் அவரும் அவரது யாத்ராவும் பாராட்டப்பட வேண்டியனவே.

(உணர்வுகள் தொடரும்...)

வாழ்க்கைத் துணைவர் நமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றாற்போல் இருக்கவேண்டும் என்று ஆசைப்படாத பெண்கள் மிகக் குறைவாகவே இருப்பார்கள்.

ஆனால், அப்படி ஆசைப்படும் பெரும்பான்மையான பெண்களில் எத்தனை பேருக்கு மனதுக்குப் பிடித்த வாழ்க்கைத்துணைவர் அமைந்துவிடுகிறார்? பல பெண்கள், வரன் தேடும் சமயத்தில், 'இதைவிடச் சிறப்பான மாப்பிள்ளை கிடைக்கமாட்டாரா?' என்ற எதிர்பார்ப்பில் கையில் உள்ள இடத்தையும் தொலைத்துவிடுகிறார்கள்.

உண்மையில், ஒவ்வொருவரும் ஏதாவதொரு விஷயத்தில் சமரசம் செய்துகொள்ள வேண்டி இருக்கிறது. உறவு நீடித்திருக்க இது அவசியமும் கூட. கணவன் - மனைவி பிரச்சினைகளுக்கு இதைத் தவிர சிறந்த தீர்வு இருக்கமுடியாது.

ஆனால், எந்த அளவுக்கு சமரசம் செய்துகொள்ளவேண்டும் என்பது கணவன் - மனைவியின் சொந்த விருப்பத்தை ஆதாரமாகக் கொண்டது. அப்படியிருந்தும் பல சமயங்களில் சமரசத்தைக் காற்றில் பறக்கவிட்டு, கணவனும் மனைவியும் பிரிந்துவாழவும் செய்கின்றனர். துணைவரின் பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறை தனக்கு பொருத்தமானதாக இல்லை என்பதுதான் இவர்கள் சொல்லும் காரணம். ஆனால், பிரிவு இவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்குப் பதிலாக அதிகமாக்கவே செய்கிறது.

பொதுவாக, உடலுறவில் ஆர்வமின்மை, திருமணத்துக்கு அப்பாற்பட்ட கள்ளத்தொடர்பு, ஒருவரையொருவர் பரஸ்பரம் குறைசொல்வது, பரஸ்பர உணர்வுகளை மதிப்பதில்லை, அடிக்கடி சச்சரவுகளில் ஈடுபடுவது போன்றவை தம்பதிகள் பிரிய நேருவதற்கு முக்கிய காரணங்களாகும்.

சென்னை மருத்துவர் ஒருவர் ஒரு தம்பதியை உதாரணமாகச் சொன்னார். அவரிடம் சிகிச்சை பெற வந்த பெண்ணின் பெயர் சாதனா (பெயர் மாற்றப்பட்டுள்ளது).

''கிராமத்தில் பிறந்து எளிமையான வாழ்க்கைச் சூழலில் வளர்க்கப்பட்டவர் சாதனா. நகரிலேயே பிறந்து அங்கேயே வளர்ந்து ஆளானவன் தீபக். சாதனா நல்ல நிறத்துடன் அழகிய உடலமைப்பைக் கொண்டிருந்தாள். இருந்தபோதிலும் நகர வாழ்க்கையுடன் அவளால் ஒத்துப்போக முடியவில்லை என்ற காரணத்தால் அவளைப் பிரிந்து விட்டான் தீபக்.

தீபக்கிடம் பேசியபோது, அவன் நகரத்தில் வளர்ந்த பெண்ணையே திருமணம் செய்துகொள்ள விரும்பியதாகவும் ஆனால், பெற்றோர்களின் கடுமையான வற்புறுத்தல் காரணமாகவே சாதனாவைத் திருமணம் செய்துகொண்டதாகவும் தெரிவித்தான். ஆரம்பத்தில் வாழ்க்கை சந்தோஷமாகவே உருண்டோடியது.

ஒருநாள் திடீரென்று சாதனாவிடம், 'நீ நிறைய விஷயங்களில் உன்னை மாற்றிக் கொள்ளவேண்டும்' என்றான் தீபக். அவளுக்கு எப்படித் தன்னை மாற்றிக்கொள்வது என்பது தெரியவில்லை. இதனால், தீபக் அவளை அடிக்கடி திட்ட ஆரம்பித்தான்.



# மனம்போல மாங்கல்யம்

அதிலிருந்து தப்பிக்கொள்வதற்காக அவன் முன் வருவதையே தவிர்த்தாள் சாதனா. இதனால், மனம் வெறுத்துப்போய் வீட்டிலிருந்து எங்கேயோ கிளம்பிச் சென்றுவிட்டான் தீபக். இது நடந்து 4ஆண்டுகள் ஆகிவிட்டன. தீபக் ஒருதடவை கூட அவளைத் தொடர்புகொள்ளவேயில்லை''.

இப்படி அவர் சொன்னார்.

சாதனாவின் கதை வேதனையை ஏற்படுத்துகிறது. என்றாலும் அவர் மீது கோபமும் ஏற்படவே செய்கிறது. இவ்வளவு அழகான பெண், கணவனின் விருப்பத்துக்கேற்றாற்போல் தன்னை கொஞ்சம் மாற்றிக் கொண்டிருந்தால் கணவன் வீட்டைவிட்டுப் போகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது.

இந்தச் சம்பவத்தைப் பார்க்கும் போது கணவன் - மனைவியின் பழக்கவழக்கங்கள், 'லைப் ஸ்டைல்' மற்றும் சிந்தனைப் போக்கு ஆகியவை முரண்படும்போது தாம்பத்திய உறவு சுமையாகிவிடுவது புரியவரும். இப்படி முரண்பாடுகள் இருக்கும்போது சமரசம் செய்துகொள்வது மிகவும் சிரமமானதாகத் தோன்றினால் உறவுமுறிவடையத் தொடங்குகிறது.

குணப்படுத்த முடியாத உடல்ரீதியான அல்லது மனரீதியிலான குறைபாடுகள் உள்ளவராக அல்லது மாற்றவே முடியாத குணமுள்ளவராக வாழ்க்கைத் துணைவர் இருப்பாரானால் அந்தக் கடினமான சூழ்நிலையில் அவரைக் கைவிட்டுச் செல்வதைவிட சமரசம் செய்து கொள்வதே நல்லதாகும். இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கு எடுத்துக்கொள்பவர் மட்டுமே உண்மையான வாழ்க்கைத் துணைவராக இருக்கமுடியும்.

குறைகள் மற்றும் சண்டைகள் எல்லாத் தம்பதிகளிடையேயும் இருக்கவே செய்கின்றன. மனைவியின் பழக்கவழக்கங்களால் கணவன் மன உளைச்சலுக்கு ஆளாவதும் உண்டு. இவ்விஷயம் மனைவிக்கும் பொருந்தவே செய்யும் என்ற போதிலும் இந்தக் காரணத்துக்காக பிரிந்துவிடவேண்டும் என்பதில்லை.

உண்மையில் சின்னச்சின்ன விஷயங்கள் மற்றும் சாதாரண சச்சரவுகள் கூட நிரந்தரப் பிரிவுக்கு வழிவகுத்துவிடும். சமூக மரியாதை, வாக்குறுதிகள் காற்றில் பறந்தாலும் பிரிந்துவிடுவதே நல்லது என்று நம்புகின்றனர்.

அந்தச் சென்னை மருத்துவர் மற்றொரு அனுபவத்தையும் தெரிவித்தார்.

''என்னிடம் வந்த ஒரு தம்பதிக்கு செக்ஸ் பற்றி சரிவரத் தெரிந்திருக்கவில்லை. இதனால் துணைவரிடம் இருந்து விலகுவதற்காக அவர்மீது விசித்திரமான புகார்களை கூறினார். 10 இல் 9 தம்பதிகள், முறையான பாலியல் கல்வி கிடைக்காத காரணத்தால் எழும் சச்சரவுகளால் ஒருவரையொருவர் பிரியவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறார்கள். அவர்களின் பிரச்சினைகளுக்கு முறையான செக்ஸ் ஞானம் மற்றும் புரிதல் என்ற சாதாரணத் தீர்வே போதுமானது. இதற்காக அவர்கள் பிரியவேண்டிய அவசியமில்லை'' - என்றார்.

வாழ்க்கைத் துணைவரின் பழக்கவழக்கங்களால் மனம் வெறுத்துப் பிரிந்து வாழ்வது அல்லது விவாகரத்து கோருவது பிரச்சினைக்குத் தீர்வாகமுடியாது. உண்மையில் அன்பான அணுகுமுறை மூலம் துணைவரைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றுவதில் தான் இல்வாழ்க்கையின் சுவாரசியமே அடங்கியுள்ளது.

இப்படி பரஸ்பர புரிதல் மற்றும் மென்மையான அணுகுமுறை மூலமே உங்கள் தாம்பத்திய வாழ்க்கையை சுகமானதாக, முழுமையானதாக மாற்ற

பெண்

முடியும். உங்களிடம் உள்ளதை வைத்து திருப்தியடையக் கற்றுக்கொள்ளுங்கள். வாழ்க்கைத் துணைவர், நாம் நினைப்பது போல் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்புகளை அடுக்கவேண்டாம். ஏனென்றால் 'மனம்போல் மாங்கல்யம்' எல்லோருக்கும் அமைந்துவிடுவதில்லை. அப்போதுதான் முழுமையான வாழ்க்கைத் துணைவர் என்று சொல்வதற்கு பொருத்தமாக இருப்பீர்கள்.

**கணவனுக்குப் பிடிக்காதவை!**

- எரிச்சலடையும் குணம்.
- கணவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.
- கணவனின் வீட்டுக்காரர்களை மதிப்பதில்லை.
- தனது பிறந்த வீட்டுப் பெருமையைப் பேசி புகுந்தவீட்டை மட்டம் தட்டுவது.
- கணவனின் பேச்சில் தப்புக் கண்டுபிடிப்பது, தான் சொல்வதே சரி என வாதிடுவது.
- கணவனின் ஆசைகளைப் புறக்கணிப்பது.
- கணவன் அலுவலகத்திலிருந்து களைத்துப்போய் வீடு திரும்பும்போது அவனை வீட்டுவேலைகளைச் செய்யச்சொல்லி அதிகாரம் செய்வது.
- வீட்டுப்பொருட்கள் மற்றும் கணவனின் துணிகளைச் சரியான இடத்தில் வைக்காமல் இருப்பது.

(27 ஆம் பக்கம் பார்க்க)



## மஞ்சள் பூசினால் முகம் சீக்கிரமே சுருங்கி விடுமாமே!

மஞ்சள் ஒரு சிறந்த கிருமிநாசினி. மஞ்சள் முகத்துக்கு மட்டுமில்லை, உடலுக்கும் நல்லது. உடல் துர்நாற்றம் மற்றும் பாக்டீரியாவை அகற்றும் சக்தி மஞ்சளுக்கு உண்டு. மஞ்சளில் காரத்தன்மை அதிகம் என்பதால், அதை அதிகமாகப் பயன்படுத்தும்போது சருமத்தைப் பாதித்து சுருக்கத்தை ஏற்படுத்தலாம். சிறிதளவு தேங்காய் எண்ணெயையும் பால் ஏட்டையும் கலந்து முகத்தில் தடவி, பிறகு மஞ்சளைப் பூசிக் குளிக்கலாம். இப்படிச் செய்தால் மஞ்சளின் காரத்தன்மை, சருமத்தைப் பாதிக்காது. மஞ்சள் சேர்ந்த பேஸ்பேக் அல்லது ஆண்டி பாக்டீரியல் சோப்புகளைப் பயன்படுத்தியும் குளிக்கலாம்.

## சமைப்போம் சுவைப்போம்

### கோல்ட் ரைஸ் சாலட் (இன்டோ சைனீஸ்)


**தேவையான பொருட்கள்:-**

வேகவைத்த பாசுமதி அரிசி - 2 கப்
[illegible]
ஒலிவ் ஆயில் - பெரிய தே.கரண்டி
பொடியாக நறுக்கிய வெங்காயம் - 1/2 கப்
பொடியாக நறுக்கிய கரட் - 1/2 கப்
பொடியாக நறுக்கிய பச்சை குடைமிளகாய் - 1/2 கப்
வேகவைத்த சோளம் - 1/2 கப்
சாட் மசாலா-1/2 சிறிய தே.க.
மிளகுதூள் - 1/2 சிறிய தே.க.
ரெட் சில்லி - 1/2 ப்ளேக்ஸ்
உப்பு சுவைக்கேற்ப

டிரெஸிங் செய்ய:
வினிகர் -2 பெரிய தே.க
தாயி சில்லி டிப் - 2 பெரிய தே.க.
தக்காளி சோஸ் - ஒரு பெரிய தே.க.
சோயா சோஸ் - ஒரு பெரிய தே.க.
க்ரீன் சில்லி சோஸ் - ஒரு பெரிய தே.க.

அலங்கரிக்கத் தேவையானவை:
வேகவைத்த பட்டாணி - ஒரு பெரிய தே.க.
பொடியாக நறுக்கியகொத்தமல்லி இலை - சிறிய தே.க.

**செய்முறை:**



தாச்சியில் எண்ணெயைச் சூடாக்கி, அதில் வெங்காயம் போட்டு வதக்கவும். பிறகு காரட், குடை மிளகாய் மற்றும் பீன்ஸ் சேர்த்து ஒருநிமிடம் வரை கிளறவும். இதோடு சோளத்தையும் சேர்க்கவும். கலவையை நன்கு கிளறிவிட்டு உப்பு, சாட் மசாலா, சில்லி ப்ளேக்ஸ் மற்றும் மிளகுதூள் சேர்த்து நன்கு கிளறவும். அடுப்பை அணைத்துவிட்டு கலவையை ஒரு மிக்சிங் பவுலில் போடவும். கலவையில் வேகவைத்த அரிசியை சேர்க்கவும். பிறகு மெதுவாகக் கிளறி விட்டு டிரெஸிங்கிற்கு தேவையான எல்லா சோஸையும் சேர்த்துக் கிளறவும். பரிமாறும் தட்டில் வைத்து அலங்கரிக்கவும். வேகவைத்த பட்டாணி மற்றும் கொத்தமல்லி இலைகொண்டு அலங்கரிக்கவும். பிரிட்ஜில் 20நிமிடங்கள் வரை குளிரவைத்துப் பரிமாறவும்

# சிறுவர் பக்கம்

## சிறுவர் கைவண்ணம்




சுதர்சினி,
தரம் 4ஏ
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு-15.





சமாஷ்,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு-15.

சுகானா,
தரம் 7,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு-15.




## அழகாக நிறம் தீட்டுங்கள் -9



தம்பி, தங்கைகளே!
மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மிகச்சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

# மந்திரக் கத்தரிக்கோல்



வடிவேல் என்ற மன்னன் சோழபுரத்தை ஆண்டு வந்தான். அவனிடம் ஒரு மந்திரக் கத்தரிக்கோல் இருந்தது. மன்னனிடம் வருபவர்கள் அதனுள் தன் விரலை வைத்துக்கொண்டு தங்கள் குறையை கூறுவர். அவர்கள் உண்மையைக் கூறினால் ஒரு பிரச்சினையுமில்லை. பொய் கூறினாலோ, உடனே அது விரலை வெட்டிவிடும். அதனால் மக்கள் பொய் கூறவே அஞ்சினர்.

ஒரு நாள் வேலப்பன், முனுசாமி ஆகிய இரண்டு வைர வியாபாரிகள் மன்னனிடம் வந்தனர். வேலப்பன் கூறினான், "நான் வைர வியாபாரம் செய்பவன். சில விலையுயர்ந்த இரத்தினக் கற்களை முனுசாமியிடம் கொடுத்து விட்டு வெளியூர் சென்றேன். இப்போது வந்து கேட்டால், தான் திருப்பித் தந்துவிட்டதாக கூறுகிறான்." வேலப்பன் தன் விரலை கத்தரிக்கோலின் நடுவில் வைத்துக் கொண்டே கூறினான். எதுவும் நடக்கவில்லை.

இப்போது முனுசாமி தன் கையில் இருந்த கைத்தடியை வேலப்பனிடம் கொடுத்து விட்டு, விரலை கத்திரியினுள் வைத்துக் கொண்டு கூறினான். "நான் வாங்கியது உண்மைதான், ஆனால் திருப்பிக் கொடுத்து விட்டேன்." கத்தரிக்கோல் முனுசாமியையும் ஒன்றும் செய்யவில்லை! அவன் தன் கைத்தடியைத் திரும்ப வாங்கிக் கொண்டு நின்றான்.

மன்னனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏன் அது இருவரையுமே எதுவும் செய்யவில்லை.? யார் சொல்வது உண்மை?

அப்போது அங்கு வந்த அமைச்சர் சிக்கலைத் தீர்த்து வைத்தார். முனுசாமியின் கைத்தடியை உடைத்தார். அதனுள் இரத்தினக் கற்கள் இருந்தன. "முனுசாமி பேசுவதற்கு முன் தன் கைத்தடியை வேலப்பனிடம் கொடுத்து விட்டான், மன்னா! அதனால், கைத்தடிக்குள் இருந்த இரத்தினக் கற்களை வேலப்பனிடம் திருப்பி கொடுத்து விட்டதாக ஆயிற்று. அதனால் தான் மந்திரக் கத்தரிக்கோல் முனுசாமியை எதுவும் செய்யவில்லை." என்றார் அமைச்சர். மன்னனுக்கு முனுசாமியின் தந்திரம் புரிந்தது.

இரத்தினக் கற்கள் வேலப்பனிடம் ஒப்படைக்கப்பட்டன. முனுசாமி சிறையில் அடைக்கப்பட்டான்!

## எனது புறா


புறா புறா புறா
வெள்ளை நிறப் புறா
வசந்த காலம் தோறும்
வானில் பறக்கும் புறா

சிறிய சொண்டுள்ள புறா
சோளம் உண்ணும் புறா
இறக்கை உள்ள புறா
இரவில் தூங்கும் புறா

கூட்டில் உள்ள புறா
குள்ளமான புறா
காலின் நிறம் கறுப்பு
கண்ணின் நிறம் சிவப்பு

தூதுவனைப் போலவே
தூது செல்லும் புறா
சாந்தமான புறா
சமாதான புறா

வீட்டில் வளர்க்கும் புறா
விண்ணில் திரியும் புறா
எனது செல்லப் புறா
எங்கள் வீட்டுப் புறா!



ஆக்கம்:
மொ. அப்துல்லா மொஹிதீன்.
தரம் 8 பீ
கொ/ விபுலானந்த தமிழ் வித்தியாலயம்.

## விடுகதைகள்

1) வாயில் வைத்திருப்பான்; வகையான ஆயுதம், அவன் யார்?
2) அவன் ஆடினால் நடனம்; இவன் பாடினால் பாட்டு, அவர்கள் யார்?
3) கறுப்பனுக்கு வயதானால் வெள்ளையாவான், அவன் யார்?
4) கயிற்றில் சுற்றிவிட்டால் செய்யும் வரை ஆடுவான், அவன் யார்?
5) ஏழு வண்ணங்களில் காட்சி தருவான், அவன் யார்?
6) சின்னக்கத்தி கைக்குள்ளே வளரும் கத்தி, அவன் யார்?

சிரபெக்கா,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு-15.

1) தேன் 2) மயில் - குயில் 3) தலைமுடி 4) பம்பரம் 5) வானவில் 6) நகம்

சிறுவர் பக்கம் இவ்வாரம் தவிர்க்க முடியாத காரணத்தால் வர்ணத்தில் தர முடியவில்லை. 'அழகாக நிறம் தீட்டுங்கள்' பகுதி அடுத்தவாரம் இடம் பெறும்.

## தெரிந்து கொள்வோம்

1) அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி யார்?
ஜோர்ஜ் வோஷிங்டன்
2) சிறுநீர் அருந்திய இந்தியப் பிரதமர் யார்?
மொரார்ஜி தேசாய்
3) ஐரோப்பியாவின் நோயாளி என வர்ணிக்கப்படும் நாடு எது?
துருக்கி
4) நேபாளத்தின் தலைநகரம் என்ன?
காத்மண்டு
5) வேசுகுந்தரை காட்டிக் கொடுத்த சீடனின் பெயர் என்ன?
யூதாஸ் காரியோத்து
6) மகாத்மா காந்தியை சுட்டவனின் பெயர் என்ன?
நாதுராம் கோட்ஸே

...பாலன்,
தரம் 5,
கொ/ ...உலூம் வித்தியாலயம்,
கொழும்பு.



# கிழக்கு வெளித்தது

சிறுகதை

என். ஒவியன்
யாழ். பல்கலைக்கழகம்.

**வா**னத்தில் நட்சத்திரக் கூட்டங்களின் சிணுங்கல்கள் இல்லை. வானப் பல்லக்கில் பவனிவரும் அந்த நிலவுக் குமரியையும் காணவில்லை. குளிர்காற்று மெல்ல மெல்ல வீசத் தொடங்கியது. 'மழை வரப்போகுது போல' என காவியா தனக்குள்ளாகவே நினைத்துக் கொண்டாள்.

யன்னல் கம்பிகளிடையே வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் காவியா, யன்னல் கதவுகளை சாத்திவிட்டு கட்டிலில் வந்து 'தொம்' என விழுந்தபோது நேரம் பன்னிரண்டாகி விட்டது.

'இனிக் காத்திருந்து பலனில்லை...' என எண்ணிக்கொண்டு குசினிக்குள் சென்று சாதத்துக்கு தண்ணீரை ஊற்றிவிட்டு திரும்பி வந்து படுத்துக் கொண்டாள். அவளது வயிறு பசியால் அழுதது. ஆனால், பயம் அவளை தடுத்தது. 'புருஷன் சாப்பிட முன்னர் பெண்சாதி சாப்பிடக் கூடாதாம்' என்ற அருமைக் கணவன் வசீகரனுடைய தத்துவார்த்தம் அது. அழுத வயிற்றை அடக்கிக் கொண்டு கட்டிலில் மாறி மாறி புரண்டு கொண்டிருந்தாள் காவியா.

கனவுகளுக்கும் கற்பனைகளுக்கும் கடிவாளம் இல்லையே. அந்தக் கனவுகளும் கற்பனைகளும் காவியா கன்னியாக இருந்த போது ஏராளம் இருந்திருக்கின்றன. தனக்கு வரப்போகும் கணவன் 'இப்படித்தான் இருக்க வேண்டும்' என காவியா சில கனவுகளை வைத்திருந்தாள். அவை எல்லாப் பெண்களுக்குமே இருக்கும் சராசரியான கனவுகள்தான். ஆனால், அந்தக் கனவு ஒரு சிலருக்கு நனவாகிப் போவது உண்மைதான்.

ஏழைக்குடும்பத்தில் பிறந்திருந்தாலும் காவியா எத்தனை சந்தோஷமாக இருந்திருக்கிறாள். தந்தையின் பாசம், தாயின் அரவணைப்பு, தம்பி தங்கைகளின் சின்னச் சின்னச் சண்டைகள், 'அள்ளித் தின்ன தட்டு நிறைய சோறு இல்லா விட்டாலும் எல்லாரும் ஒன்றாயிருந்து உண்ணும் [illegible]க் காலம்;' எல்லாமே முடிந்துபோன கதைகள்.

காவியா பேரழகி என்று சொல்வதற்கில்லை தான். ஆனாலும், குடும்பத்துக்கேற்ற குத்து விளக்குப்போல சுடர்விடும் முகம் அவளுக்கு. வசீகரனுக்கு ஒரு வகையில் அவள் தூரத்து உறவும்கூட. அதனால் தானோ என்னவோ வசீகரனுடைய தாயார் 'எங்களுக்கு பெண்ணை தந்தாலே போதும். நாங்கள் சீதனம் எதையும் எதிர்பார்க்கவில்லை' என்று கூறிவிட்டாள். காவியாவின் தந்தை மறுக்கவில்லை. அவருக்கும் பூரண சம்மதம்தான். தந்தையின் விருப்பத்தை காவியாவும் மறுக்கவில்லை. கழுத்தை நீட்டி தாலியை வாங்கிக் கொண்டவள், புகுந்த வீட்டுக்கு புதிய நெல்மணியாகத்தான் போனாள். ஆனால், யாரும் கவனிப்பாரற்றுக் கிடக்கும் சப்பிபோல இன்று ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறாள்.

திருமணம் முடிந்து எத்தனையோ ஆண்கள் தங்கள் மனைவியை சந்தோஷப்படுத்துவதற்காக 'தேன்நிலவு, திருவிழா' என இறக்கை கட்டிப் பறப்பார்கள். ஆனால், வசீகரன் முதலிரவில் கூட ஒரு முழுமையான மனிதனாக நடந்து கொள்ளவில்லை. கன்னிப் பெண்ணாக ஒரு தொகை கனவுகளுடன் உள்ளே சென்ற காவியா அங்கே மூக்குமுட்ட குடித்துவிட்டு வெறியில் தள்ளாடும் வசீகரன் எனும் மிருகத்தின் காலில் புழுவாக நெளிந்து கொண்டிருந்தாள். கனவுகள் அங்கே வெடித்துச் சிதறி கலைந்து போய்விட்டன.

அன்றிலிருந்து இன்றுவரை காவியா ஒரு மிருகத்துடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். வசீகரனின் தாயார் கூட மகனின் தறிகெட்ட குணத்தை அறிந்து அவனுக்கு ஒரு கால்கட்டுப் போடுவதற்காகத்தான் எதற்கும் தலையாட்டும் ஏழைப் பெண்ணான காவியாவை தேர்ந்தெடுத்திருக்கிறாள் போலும். எல்லாவற்றையும் முடித்து வைத்த அந்த புண்ணியவதி ஏனோ சுவரில் படமாக மாலையணிந்து மௌனமாகிப் போனாள்.

திருமணவாழ்க்கை காவியாவுக்கு இனிக்கவில்லை. தினம் தினம் காவியாவுக்கு கணவனின் அடியும் உதையும் காத்திருந்தன. தினமும் குடித்து விட்டு நடுராத்திரியில் தான் வருவான். ''ஏன் இவ்வளவு நேரம்...'' எனக் கேட்டால், ''என்னிடமே கேள்வி கேட்கிறாயா?''என எலும்பு முறியும் வரை அடிப்பான். நடுராத்திரியில் வந்து ''நான் வருவதற்குள் ஏனடி சாப்பிட்டாய்?''என நாலு சாத்துச் சாத்துவான். தனக்கு இஷ்டப்பட்டால் மட்டும் தள்ளாத வெறியிலும் அவளை அனுபவித்துக் கொள்வான்.

ஒவ்வொரு இரவு வரும்பொழுதும் காவியா துடிதுடித்துப் போவாள். 'இந்த உலகம் இருளாமல் இருந்தால் என்ன' என தனக்குள்ளாகவே நினைத்துக் கொள்வாள் காவியா. வாழ்க்கைப் பட்ட ஒரே காரணத்துக்காக அவள் அவனிடம் வாங்கிக் கட்டியது ஏராளம்.

பெண்மையின் உணர்வுகளையோ, கருத்துக்களையோ மதிக்கும் உயர்ந்த குணம் வசீகரனிடம் இல்லை என்பது காவியாவுக்கு முதலிரவன்றே தெரியும். இருந்தாலும் தாலிக்கும் பொட்டுக்கும் புருஷன் வேண்டும் என்ற ஓர் அபலைப் பெண்ணின் பட்டியலில் அவளும் ஒருத்தியாக இருந்து விட்டாள்.

ரணமாகிப் போன காவியாவின் மனதுக்கு அவளது பிறந்த வீட்டாரின் வருகைதான் அப்பப்போ இதமாக இருக்கும். எனினும் அந்தச் சுகம் கூட நெடுநாட்கள் நீடிக்கவில்லை. 'காவியா பிறந்த வீட்டாருக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கிறாளாம். அதனால் அவனுடைய பணம் எல்லாம் வீணாப் போகிறதாம்' என்று ஓங்கி அவளது முதுகில் நான்கு ஒப்பாரிக் குத்துக்களை வைத்துவிட்டுத்தான் அடுத்த வேலை பார்ப்பான். நாளடைவில் காவியாவே தன் குடும்பத்தாரிடம் 'இனிமேல் என்னைத் தேடி நீங்கள் இங்கே வரவேண்டாம். தேவைப்பட்டால் நானே உங்களை வந்து பார்க்கிறேன்' என கூறி விட்டாள். அன்றிலிருந்து அவர்களும் அந்தப்பக்கம் வருவதில்லை. அவளது வாழ்க்கையில் எல்லாமே இல்லாமல் போனது.

ஒரு பெண் அவளது வாழ்நாளில் அதிக சந்தோஷமடைவதென்றால் அது, தாய்மையடைந்து விட்டதாக அவள் உணரும் போதுதான். ஒரு மிருகத்தின் வெறிக் கூத்து என்றாலும் காவியாவுக்கும் தாய்மை பாக்கியம் கிட்டியது உண்மை. தாய்மை அடைந்தவுடன் எந்தப் பெண்ணுமே தனது கணவனிடமே முதலில் கூற விரும்புவாள். ஒவ்வொரு தடவையும் 'இண்டைக்கு சொல்லிவிடணும்' என காத்திருப்பாள் காவியா. ஆனால், அவன் வெறியாட்டத்தில் ஒரு சண்டைப்படமே முடிந்துவிடும். என்றாலும் ஒரு நாள் விடாப்பிடியாக முந்திக்கொண்டு தான் கர்ப்பமாக இருப்பதை கணவனிடம் கூறினாள். ஆனால் அதற்கு அவன் கேட்ட கேள்வி அதிர்ச்சியைத் தந்தது. ''இது எனக்கும்தான் உண்டானதா?'' என்ற அந்தக் கேள்வியால் அதிர்ந்து போனாள் அவள். நித்தம் விழும் அடியும் குடும் காவியாவின் கர்ப்பத்தை கலைத்து விட்டது என்பது பழைய கதை.

தூக்கமின்றி கட்டிலில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் காவியா. தன் வேதனைகளை தலையணையோடு பகிர்ந்து கொண்டிருந்தாள். அவளுக்கு சுற்றம் என்று சொல்லிக்கொள்ள தலையணையை விட வேறு என்னதான் இருக்கிறது?

காவியாவின் அலைபாயும் மனதைக் கடிவாளம் போட்டு நிறுத்தியது யாரோ கதவைத் தட்டும் ஓசை. தொடர்ந்து ...

''அடியே...கும்பக...ர்ணி... கதவை...திறவடி...'' என விக்கி விக்கி வெறியில் கத்திக்கொண்டிருந்தான் வசீகரன்.

வாசலில் குரல் வந்ததும் காவியா தன்னை சுதாகரித்துக்கொண்டு வெகுவேகமாக ஓடிச்சென்று கதவைத் திறந்தாள். அவள் எவ்வாறு வேகமாகச் சென்று கதவைத் திறந்தாலும் அவள் கன்னத்தில் ஓர் அறை 'பளார்' என விழுந்தது என்னவோ உண்மைதான்.

''என்னடி...கதவைத் திறக்...க...இவ்ளோ நே...ரமா?''என்றபடி அவளது கூந்தலைப் பிடித்து இழுத்து முதுகில் இரண்டு குத்துக்களை விட்டான். காவியா கத்தவில்லை! மூச்சை இறுக்கிப் பிடித்துக்கொண்டு நடப்பதெல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டாள்.

''என...க்கு...பசிக்..கிறது...சோறு கொண்டு வா'' என்றான். கண்களினூடே வடிந்த நீரைத் துடைத்துக்கொண்டு குசினிக்குள் ஓடிச்சென்று சோற்றைப் பிழிந்து கொண்டு அதன்மேல் குழம்பையும் ஊற்றிக்கொண்டு வந்து அவன் முன்னே நீட்டினாள் காவியா.

கோப்பையை வாங்கி ஒரு கவளம் சோற்றினை வாயில் போட்டவன் மறுகணமே கோப்பையை வீசி அவள் முகத்தில் எறிந்தான்.

''எ...ன்னடி சோறு...இது? ஒன்போது...மணிக்கு பழஞ்சோறு...கொண்டு வாறாய்?'' என்றான். அவனின் வார்த்தைகளைக் கேட்டு காவியா தனக்குள்ளாகவே சிரித்துக்கொண்டாள்.

''ஒன்பது மணியாம்...! நடுச்சாமத்தில வந்து கூத்தடிக்கிறது. வெறியில தெரியலப்போல...'' மீண்டும் சிரித்துக்கொண்டாள் அவள்.

ஒரு குடும்பத் தலைவன் குடிக்க ஆரம்பித்துவிட்டால் அந்தக் குடும்பமே பிளவுபடத் தொடங்கிவிடும். நித்தம் போடும் சண்டைகளுக்கு காரணமே தேவையில்லாமல் போய்விடும். அவ்வாறான ஒரு நிலைதான் இப்பொழுது காவியாவுக்கும்.

திடீரென வசீகரன் காவியாவின் அருகில் நெருங்கி வந்தான். தொடர்ந்து...

''வெள்ளன சொல்லிவிட்டுப் போனேனே...உங்க கொப்பன்கிட்ட மோட்டார் சைக்கிளுக்கு காசு வாங்கி வா என்று; வாங்கி வந்தியா?'' என்றான். காவியா எதுவும் பேசவில்லை. மௌனமாகவே இருந்தாள்.

''என்ன...?வாங்கவில்லையா...?'' என்றான். அப்பொழுதும் காவியாவின் பதில் மௌனம் தான். அவனுக்குள் கோபம் குமுறி இருக்கவேண்டும். கோபத்தில் எரிமலைபோல ஆகிவிட்டான்.

''ஏ..ன்டி...நான் கேட்கிறேன் பேசாமல் நிக்கிறியா?'' என்றபடி அவளது தொண்டைக் குழியை பிடித்து அழுத்தினான். காவியாவின் விழிகள் இரண்டும் மிரண்டு துடித்தன. பலம் கொண்ட மட்டும் போராடி அவனது பிடியை விடுவித்துக்கொண்டாள்.

''இல்லை...வாங்கல...நான் எப்படிப்போய் கேட்பேன்? ஓட்டைக் குடிசையில ஓரமா வாழ்ந்தவங்ககிட்ட ஒரு லட்சம் பணம் திடீர்னு வேணும்னு எப்படிக் கேட்பேன்'' என்றாள் ஆக்ரோஷமாக.

''கேக்கணும் சீதனமில்லாமல் ஓசியில வாழலாம்னு பாத்தியா...?போடி ..போய் கேள்!'' என்றான் அவன்.

''என்னால முடியாது...! கட்டிக்கும்போது சீதனமே வேண்டாம்னுதானே சொன்னீங்க...'' என்றாள் காவியா.

''அது அப்போ... நீ புதுசா அழகா இருந்தப்போ. இப்ப நான் உன்னை தினம் தினம் பாக்கிறேனே! இனி இந்த மூஞ்சி இங்கே வாழனும்னா சீதனம் வேணும். போடி...போய் வாங்கிவா'' என்றான்.

''முடியாது'' என்றாள் விடாப்பிடியாக அவள்.

''ஓ...! அப்படியா...'' என்றவன் அவளை தரதரவென இழுத்துவந்து வெளியே தள்ளிவிட்டு கதவைச் சாத்திக்கொண்டான்.

காவியாவுக்கு 'ஓ...'வென அழுதுவிடலாம் போல இருந்தது. சிரமப்பட்டு அழுகையை நிறுத்திக்கொண்டாள்.

'அப்பாவிடம் போய் காசு கேட்கலாமா?' என தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள். மறுகணமே 'எப்படிப்போய் கேட்பேன்?' சாப்பாட்டுக்கே கஷ்டப்படுகிற குடும்பத்தில ஒரு லட்சம் காசு எங்கே இருந்து வரும்? உடனடியாகத் தா! என எப்படிப் போய்க் கேட்பேன்? என விடையும் சொல்லிக் கொண்டவள் 'சரி, காசுதான் வேண்டாம் அப்பா வீட்டிற்கே போய் நிரந்தரமாக இருந்திடலாமா?' என மீண்டும் ஒரு கேள்வியை தனக்குத்தானே முன்வைத்தாள். மறுபடியும் 'சீச்சி...அது எப்படி முடியும்? அப்பாவின் வேதனையை வீணாக ஏன் அதிகரிப்பான்? அதுவுமில்லாமல் தங்கச்சிக்கும் கல்யாண வயசாச்சு. இந்த நேரத்தில நான் வாழாவெட்டியா போனா அவளுடைய வாழ்க்கையும் பாதிப்படைஞ்சிடும்' என பதிலும் சொல்லிக்கொண்டாள்.

'அப்ப என்ன பண்ணலாம்?' மீண்டும் கேள்வி. என்ன பண்ணுறது? அடியையும் உதையையும் வாங்கிக்கொண்டு இங்கேயே இருந்துவிட வேண்டியதுதான்.

மழைத்துளிகள் ஒவ்வொன்றாக பூமியை தொடத்துடித்தன. நடுமுற்றத்திலே நாதியாக யாருமற்று நின்ற காவியா வீட்டின் முன்பக்கத் தாழ்வாரத்தில் ஓடிவந்து ஒதுங்கிக்கொண்டாள்.

''ச்சே...மழைக்குக்கூட என்னைப் பிடிக்கவில்லை'' என்றபடி வீட்டுச் சுவரோடு சுவராக ஒட்டி நின்றாள்.

நிம்மதி என்பது பலருக்கு நித்திரையின்போதுதான் கிடைக்கிறது. ஆனால், காவியாவின் நித்திரைகூட வசீகரனின் மிருகக் கூத்தில் நிலைகுலைந்து போவது நிதர்சனம்.

ஒருவன் குடிகாரனாக இருப்பதால் அவனது குடும்பம் நிலைகுலைந்து போவது என்னவோ உண்மைதான். குடி இன்று பல குடும்ப உறவுகளைப் பிரித்துவைத்துள்ளது. குடிகாரனுக்கு சண்டைபோடுவதற்கு காரணமே தேவையற்றதாக இருக்கும். காவியாவின் வாழ்க்கையும் அப்படியே அமைந்துவிட்டது.

நித்தம் நடக்கும் சண்டைக்கு என்ன

(27ஆம் பக்கம் பார்க்க)

# சுவர்க்க வாழ்வும் முகாம் வாழ்வும்

## Valigamam North Paradise Life and Camp Life

### வலிகாமத்தின் இன்பதுன்பங்களைச் சொல்லும் அரிய ஆங்கில நூல்

'விரலை மண்ணுக்குள் புதைத்தால், அதில் உடனே வேர் துளிர்த்துவிடும்' என வர்ணிக்கப்படும் உன்னதமான பூமி வலிகாமம் வடக்கு. ' செழுமைமிக்கதான இந்த மண் இன்று யாழ்.குடா நாட்டின் உயர் பாது காப்பு வலயத்தினுள் புதைந்துவிட்டது. இம்மண்ணின் உன்னதங்கள், இன்றைய துர்ப்பாக்கிய நிலை, மக்கள் வாழ்க்கை என்பன வற்றை நினைந்துருகும் ஒரு நூல் வெளிவந்திருக்கிறது. Paradise life and camp life எனும் தலைப்பிலான இதனை என்.பரமேஸ்வரன் எழுதியுள்ளார். இது ஓர் ஆங்கில நூல்.

கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய புகழ்மிக்க ஸ்தலங்கள் அமைந்துள்ள இம்மண்ணின் 80 சதவீதமான மக்கள் இன்று இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். 'காம்ப்' வாழ்க்கை அவர்களுக்குச் சொந்தமாகியுள்ளது.

கீரிமலை புனித மடத்தில் மேற்சட்டை இன்றி படுத்துறங்குவதும், கீரிமலைக் குளியலும், கடற்கரையோர நடையும் நினைவிலிருந்து நீங்காதவை எனக் குறிப்பிடும் ஆசிரியர் அதன் சிறப்புகள் குறித்துநினைந்துருகும் ஒரு நினைவு மீட்டலே இந்நூல்.


யாழ்.குடாநாட்டின் 16சதவீத பாகத்தினை வலிகாமம் கொண்டுள்ளது. இதில் 165 சதுர கிலோமீற்றர் பாகம் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் முடங்கிவிடுகிறது. 85ஆயிரம் மக்கள் வீடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுவிட்டனர். குடிமனைகளில் (நலன்புரி நிலையங்களில்) மிகவும் மோசமான நிலையில் வாழ்கின்றனர். உள்நாட்டிற்குள் இடம்பெயர்ந்த மக்களின் பட்டியலிலே இவர்கள் இடம்பெறுகின்றனர். 16-06-1990

**-கே.வி-**

ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த இடப்பெயர்வின் அவலம் இன்றும் முடிவுறாதவொரு தொடர்கதையே. அன்று இடம்பெயர்ந்த, இன்றும் தமது இல்லங்களை காணாத மக்களின் துயரநிலை நெஞ்சைத் தொடுவதாகும். இளைய தலைமுறை தமது இல்லத்தை, இருப்பிடத்தை அதன் உன்னத சூழலை இன்றும் காணாத சோகம் கொடியதாகும்.

அரசின் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் புதைந்துவிட்ட கிராமங்கள் ஏராளம். பலாலி, கட்டுவன், மைலிட்டி, வயாவிளான், வளலாய், குரும்பசிட்டி, ஊறணி, காங்கேசன்துறை, கீரிமலை, மாவிட்டபுரம், கோளான்காலடி, பனனல், வீமன்காமம், விழிசிட்டி, பொட்காலன்தம்பை, சேந்தான்குளம், வழித்தூண்டல், பலாலி, கிரானை என அவற்றின் பட்டியல் தொடர்கின்றது. கனவெனக் கலைந்துவிட்ட அந்த வாழ்க்கை, அந்தக் கிராமங்கள், அந்த இல்லங்கள் மீண்டும் கிடைக்குமா என்ற ஏக்கம் நிரந்தரமாகிவிட்டது.ஏக்கமும் பெருமூச்சும் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் இதயங்களில் வதைக்கும் உணர்வுகளாகக் கிடக்கின்றன என்பதையே சுட்டிக்காட்டுவதாக மனதில் உணர்வுகள் கிளர்ந்தெழுகின்றன.


''இந்நூல் ஓர் ஆய்வோ அல்லது தகவல் வழங்கல் நூலோ அல்ல. உயர்பாதுகாப்பு வலயம் குறித்த சுருக்கமானதோர் அறிமுகம்'' என்கிறார் பரமேஸ்வரன். உயர்பாதுகாப்பு வலயம் சம்பந்தமான தகவல்களை அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு இது பெரிதும் துணையாகக்கூடியதொரு கையடக்கமான ஆவணமே.




ஆசிரியர் பிறந்தநாள் முதல் இடம்பெயர்ந்த நாள் வரையிலான 28வருட கால அனுபவங்களின் சேகரிப்பே இதுவாகும்.

கீரிமலை விழாக்கள் ஆடி அமாவாசை, சிவராத்திரி, மாசிமகம், வேள்வி, கப்பல் தேர்விழா, பூங்காவனம், காத்தவராயர் விழா, ருத்ரதாண்டவம், பொங்கல், பிக்ஷாநாதனார், குளிர்த்தி, நாகபூஜை, காவடி, பொம்மலாட்டம், பஞ்சாமிர்தம், ஜெர்மன் சுவாமி, தியானம், விவசாயம், கூவில், மீன்பிடி, பழவகை, சீமேந்து தொழிற்சாலை, பலாலி விமானத்தளம் காங்கேசன் துறைமுகம், கே.கே.எஸ். புகையிரத நிலையம், மகாஜன கல்லூரி, பழக்கங்கள், மாட்டுவண்டிப் பந்தயம், ஆயுர்வேத டிஸ்பென்சரி, சனசமூக நிலையம், அரசியல், சினிமா தியேட்டர், சைவ உணவுக்காரர், மரணச் சடங்குகள், சுனாமி எனும் தலைப்புக்களில் தகவல்கள் உள்ளடங்கியுள்ளன. இவை அனைத்தும் ஆசிரியரின் நினைவுமீட்டல்களே. கண்கள் முன்னாலிருந்து இவை மறைந்து போய்விட்டாலும் நினைவுகளின் ஆர்ப்பரிப்போடு இதயத்தில் ஆழமாக வேரோடிவிட்ட உணர்வுகளின் அசைவோட்டமாகவே அவை இருப்பதை வாசகர் உணரமுடியும்.

ஆங்கில நூலான இது சாதாரண மொழியறிவுடையோரும் வாசிக்கக்கூடிய எளிமையான நடையில் எழுதப்பட்டுள்ளது. ஒரே மூச்சில் வலிகாமம் வடக்கையும், அதன் கிராமங்களையும், சிறப்புகளையும் அம்மக்களின் இன்றைய பரிதாபகர நிலையையும் கண்முன் நிறுத்துகின்றது. ஒரு சமூகத்தின் சுவர்க்க வாழ்வும், அகதிவாழ்வும் கண்முன்னே நிழலாடுகின்ற காட்சிகளாகின்றன. ஒரு சிறிய நூலில் ஒரு பிரதேசமே கண்முன் விரிகின்றது. எஸ்.சிறிகுமரனின் அட்டைப்படம் நெஞ்சில் பதிகின்றது.







## ஒருநாயகனை அம்போன்னு கைவிட்டுட்டேலே!

இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை 'முற்போக்கு இலக்கியச் செம்மல்கள்' என்ற நூலை வெளியிட்டிருக்கிறது. தம்பு சிவா இதை எழுதியிருக்கிறார். இந்த நூலை விமர்சித்த தெ.மதுசூதனன் அதை ஒரு பிடிபிடித்தார்.

''வங்கத்துல சரத்சந்திரர், மலையாளத்திலே தகழிசிவசங்கரன் பிள்ளை, இந்தி மொழியில் கிஷன் சந்தர், ஆந்திராவிலே மக்தூம், தமிழ்நாட்டுலே வல்லிக்கண்ணன், கவிஞர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம், நம்ம நாட்டுலே கைலாசபதி, கவிஞர் பசுபதி, செ.கணேசலிங்கன், நீர்வை பொன்னையன், முகம்மது சமீம், கவிஞர் சுபத்திரன் வரை முற்போக்கு கலை இலக்கியப் படைப்பாளிகள் என்று அடித்துச் சொல்லீங்கள்.அது எப்படியும் போகட்டும். வல்லிக்கண்ணன் எப்படி இந்த அடைமொழிக்குள் வந்தார். ப.ஜீவானந்தம் எங்கே போனார்?''.

இப்படித்தான் மதுசூதனனின் கேள்வி இருந்தது.

''அப்படி கேட்கலாமோ?''

''ஏன் கேட்கப்படாது?''

''வல்லிக்கண்ணன் பெரிய படைப்பாளி ஆயிச்சே! ஒரு துணுக்கைக்கூட விடமாட்டாராமே!. அப்படிப்பட்ட வாசிப்புக்காரரை இந்த முற்போக்காளர் லிஸ்டுலேயிருந்து எடுக்கச் சொல்றேலா?''

''கண்டதை கற்றால் பண்டிதர் ஆகலாம். முற்போக்காளர் ஆகலாமோ? அதுக்கு வரையறை வேறு இருக்கோ இல்லியோ, அதைத்தான் மது சொல்றார். முற்போக்கு இலக்கியச் செம்மல்கள் நூலிலே யார் யாரை எல்லாம் சொல்லியிருக்கேளே நம்ம தமிழ்நாட்டு முற்போக்கு ஜாம்பவான் ப.ஜீவானந்தத்தை கைவிட்டுட்டேலே'ன்னுதான் மது சாடுரார்''.

''அட போங்கண்ணா! நீங்க வொண்ணு. முற்போக்காளர்ன்னு சொல்றவா எல்லாம் முற்போக்காளர் ஆயிடுவாரோ? அவாளுக்குள்ளே பல ரகம். அதுல எழுதுனவர் என்ன ரகமோ அதான் ஜீவானந்தத்தை அம்போன்னு கைகழுவுனாரோ என்னவோ''

''ஈஸ்வரா!''

## சங்கம் வைத்து தமிழ்வளர்க்க சூளுரை

''அம்மான் என்ன உற்சாகத்தோடு இருக்கிறியள்''.

''எங்களிண்ட கல்விமான் சபா ஜெயராசா தாய்மொழியில் கல்வி பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றினவர். அதைக் கேட்டுக்கொண்டிருந்த எங்களிண்ட குஞ்சுகளிண்ட ஆர்வத்தைக் கண்டுதான் குதூகலிக்கிறன்''.

''அப்படி என்ன புதினம் கண்டியள்?''

''எங்களிண்ட, சங்கம் வைத்து தமிழ்வளர்த்த உணர்ச்சி இன்னும் வற்றிப்போகவில்லை என்பதைக் கண்டனான்''.

''என்ட தம்புரானே! மெய்யாகச் சொல்லுரியலோ?''

''மோனே! நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்ட, தாய்மொழியில் கல்வித்திட்டம் பற்றித்தான் அவர் பேசினவர். அதுண்ட வரலாற்றையும் நன்மைதீமைகளையும் எடுத்துச்சொன்னவர். அதோட தமிழ்மொழி கல்வியால் தமிழர் கண்ட வளர்ச்சி பற்றியும் சொன்னவர்''.

''அடிசக்கை''

''ஆனால், எங்களிண்ட குஞ்சுகள் அவர் ஏதோ தனித்தமிழ்ப் போராட்டத்துக்கு விதை தூவுரார் என்று நினைச்சுப் போட்டினம். உடனே ஒரு தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று தயாராகிட்டாங்கள். ஒருத்தர் ஆரம்பக் கட்டணமாக ஒருதொகையைத் தருவதாகச் சொன்னார். இன்னொருத்தர் காப்புறுதி செய்வதுபோல் தோள்கொடுக்கமுன்வந்தார்''.

''அடிசக்கை! சங்கம் வைத்துத் தமிழ்வளர்க்கும் எங்களிண்ட உணர்ச்சியே உணர்ச்சி''.

''கேளுடா மோனே! என்ட பக்கத்து ஆசனக்காரர் என்ட தொடையிலே சுரண்டி ஐயா! ஒரு குட் ஐடியா என்று காதுலே கிசுகிசுத்தார்''.

''என்னவாம்?''

''பேராசிரியர் சபாவை சங்கத்துக்கு தலைவராகப் போடுவதுதான் அவர் ஐடியா''.

''அம்மான் என்ன சொன்னனீங்கள்?''

''அவரைத் தலைவராகப் போட்டால் அவர் இனிமேல் இந்த மாதுரி சொற்பொழிவுகளைச் செய்வதை கைகழுவிப்போட்டு அடுத்த வரியமும் தலைவராகும் முஸ்தீபுகளில் முனைந்து நிற்பார் என்றனான். மனுஷன் 'கிழிஞ்சுது போ' என்று குமுறிக்கொண்டு தொடையைப் பிடுங்கி எடுத்தார்''.

''அடக்கடவுளே''!



# பிறகென்ன... ஜாலி சவாரிதான்!

உதட்டில் மட்டும் சிரிப்பை வைத்திருக்கும் வஞ்சக மனிதர்கள் போல, பெயரில் மட்டும் இனிப்பை வைத்தி ருக்கும் ஆபத்தான நோய் 'சர்க்கரை நோய்'(நீரிழிவு). இது ஏற்படுத்தும் பாதிப்புக்கள் பல... அவற்றில் முக்கியமானது 'அந்த' விஷயத்தில் ஆர்வம் குறைவது! ஆம்... மன்மதனின் காம அம்புகளையே முறித்துவிடும் வல்லமை கொண்டது இந்த நோய்.

ஆனாலும் அதிகம் பயப்படத் தேவையில்லை...

கொட்டடியில் கட் டப்பட்ட குதிரையாக, இந்த நோயைக் கட்டுக்குள் வைத்திருக்க தற்போது ஏராளமான வழிகள் இருக்கின்றன.

அதற்கு முன் சர்க் கரை நோய் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளலாம். இது ஒரு வியாதி அல்ல... 'என்ன 'விசு' த்தனமாக இருக்கிறதே?' என்று யோசிக்கிறீர்களா?

அதாவது ... உடல் உறுப்பு ஒன்றின் செயல் குறைபாடு என்று தான் சொல்ல வேண்டும்.

எமது வயிற்றினுள் உள்ள ஜீரண மண்டலம், உணவி லுள்ள ஸ்டார்ச் பொருளான கார்போஹைரேட் என்ற பொருளை, குளுக்கோஸ் என்ற சர்க்கரை பொருளாக மாற்றுகின் றது. இந்த குளுக்கோஸ், நரம்பு மண்டலத்தின் இரத்த ஓட்டம் மூலம் உடலிலுள்ள அத்தனை அணுக்களுக்கும் செல்கிறது.

அணுக்கள் வளர்வதற்கும் வேலை செய்வதற்கும் இன்சுலின் தேவைப்படுகின்றது. கணையத்தில் சுரக்கும் இறந்த இன்சுலின் எல்லா செல்களுக்கும் சரியாக சர்க்கரை கிடைக்குமாறு பார்த்துக் கொள்கிறது.

கணையம், அதிரடிப்படை மாதிரி எப்போதும் அலேர்ட்டாக இருக்கும். வயிற்றில் உணவு வந்து விழுந்ததும் அதிகமாக சுரக்க ஆரம்பிக்கும். இரத்தம் மூலமாக செல்களுக்கு குளுக்கோஸ் செல்லும் அளவும் அதிகரிக்கும். செல்களுக்கு குளுக்கோஸ் முழுமையாக கிடைத்ததும் பழையபடி இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு குறைந்துவிடும்.

கணையத்திலிருந்து சுரக்கும் இன்சுலின் குறைபாடு தான் சர்க்கரை வியாதி(நீரிழிவு).

'பெண்களில் நாலுவகை' என்பார்களே...அது போல இந்த நோயையும் நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவற்றை விளக்கினால் இடம் போதாது. ஆகவே இந்த நோயினால் ஏற்படும் பாதிப்புக்களை மட்டும் பார்ப்போம். கண் பார்வை மங்குதல், அதீத சோர்வு, சருமம் மற்றும் பிறப்புறுப்பில் நோய்த் தொற்று, ஈறு தேய்தல், பல் விழுதல்... இப்படி பல்வேறு உபாதைகள் ஏற்படும். அதோடு ஆண்மைக் குறைவும் ஏற்படும்.

இந்த நோயை கண்டு கொள்ள சில அறிகுறிகளும் உண்டு. நிறைய சாப்பிடுவார்கள் ஆனால் இந்திய கிரிக்கெட் டீம் போல சோப்ளாங்கியாக சோர்ந்து போய்க் கிடப்பார்கள். அதிகமாக தண்ணீர் குடித்து அதிகமாக வெளியேற்றுவார்கள்.

பிரச்சினை என்னவென்றால், இந்த அறிகுறிகள் எல்லாம் நோய் வந்த ஆரம்பத்தில் தெரியவே தெரியாது. சமயம் பார்த்து 'பொதுக்குழு' கூட்டும் அதிருப்தி அரசியல்வாதி போல, திடுமென்று தன் குணத்தைக் காட்டும். ஆமாம்.. நோய் முற்றிய நிலையில் தான் இன்சுலின் சுரப்பியின் 'அதிருப்தியை' உணர முடியும்.

இன்சுலின் சுரப்பி, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்கிறதா என்பதை நாம் தான் அவ்வப்போது 'செக்' செய்து கொள்ள வேண்டும்.

'சர்க்கரை' எப்படி ஆண்மையைக் பாதிக்கிறது என்பதைப் பார்ப்போம்.

இந்த நோயால், ஆணுறுப்புக்கு செல்லும் இரத்த நாளங்கள் அடைபட்டு சுருங்கும். இதனால் விறைப்புத்தன்மை ஏற்படாமல் போகும்.

இப்படி பிரச்சினை இருக்கிறது என்று உணர்ந்தால் உடனடியாக மருத்துவரைப் பாருங்கள். முதன் முறையாக மருத்துவரைப் பார்க்கும் போது, உங்கள் ஆணுறுப்பு, விதைப்பை, புராஸ்டேட் சுரப்பி- தேவையானால் உங்கள் டெஸ்டோஸ்டீரான் அளவு ஆகியவை பரிசோதிக்கப்படும். நீங்கள் உறங்கும் போது விறைப்புத்தன்மை ஏற்படுகின்றதா என்பதை அறிந்து கொள்வதற்குக் கூட பரிசோதனைகள் உண்டு. உறங்கும் போது ஆணுறுப்பில் அணிந்து கொள்வதற்காக ஒரு மெல்லிய நாடாவை மருத்துவர் கொடுத்து அனுப்பு வார். உறங்கி எழுந்து பார்த்ததும் நாடா கிழிந்து போயிருந்தால் உறக்கத்தில் விறைப்புத்தன்மை இருந்திருக்கிறது என்று மருத் துவர் தெரிந்து கொள்வார்.

முக்கியமான விஷயம் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். விறைப்புத் தன்மை பாதிப்பு இருந்தால், மருத்துவரை நாட தயங்கவே கூடாது. அதோடு அவர் கேட்கும் கேள்விகளுக்கு தெளிவான பதில்களைச் சொல்ல வேண்டும்.

அப்போதுதான் உங்களுக்கு முழு தீர்வு கிடைக்கும்.

அதே போல விலக்கப்பட்ட கனி மாதிரி சிலவற்றை கண்களாலேயே பார்க்கக் கூடாது. இனிப்பு, அரிசி மற்றும் மாவுப் பொருட்கள், கிழங்கு, பழ வகைகள், சர்க்கரைப் பொருட் களை பக்கத்திலேயே சேர்க்க வேண்டாம்.

காய்கறிகள், கீரை, குறைந்த கலோரி அளவுள்ள பொருட்கள், சாம்பல் பூசணி, முட்டைக் கோஸ், காலி பிளவர், வாழைத் தண்டு, கத்தரி, புடலங்காய்,பீன்ஸ், முருங்கை, வாழைக்காய், வெண்டை, பாகற்காய் ஆகியவற்றை உற்ற நண்பர்களாக்கி கொள்ளுங்கள். அதே போல மருத்துவர் கொடுக்கும் மருந்துகளை சரியான வேளையில், சரியான அளவு சாப்பிட வேண்டும். அவர் சொல்லும் 'டயட்' பிரகாரம் சாப்பிட வேண்டும்.

உடற் பயிற்சியும் அவசியம். இவற்றையெல்லாம் சரிவரச் செய்தால் 'சர்க்கரை குதிரை' யை உங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடலாம். பிறகென்ன... ஜாலி சவாரி தான்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 269

***சொற்சிலம்பம் 269 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஜூலை 07 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 21 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.267 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.***


***தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.***

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு--14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 267

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ப | ரி | 3 மி | 4 த | ம் | ■ | 5 ஆ |
| 6 க | டை | ■ | 7 து | வி | ■ | 8 த | ர |
| ம் | ■ | 9 பு | ன | ர் | 10 பூ | ச | ம் |
| 11 பா | 12 ச | ன | ம் | ■ | 13 த | ம் | பி |
| 14 வ | கி | ர் | ■ | 15 யா | ம் | ■ | த் |
| ம் | ■ | 16 வா | 17 ச | னை | ■ | 18 வி | த |
| ■ | 19 ஏ | ழ் | மை | ■ | 20 ஈ | த | ல் |
| 21 உ | ற | வு | ■ | 22 கு | டு | வை | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல. 269



## சொற்சிலம்பம் போட்டி இல.269

**இடமிருந்து வலம்**

1. தந்தையின் சகோதரி.
3. முதலிடம்.
6. ஓவியம்.
8. மூலப்பொருள்/எலும்பு மற்றும் இரத்தத்தில் உள்ள மூலகங்கள்.
10. தைரியம்/ வலி/ வீரம்.
11. பாரம்/ மதிப்பிற்குரியது.
12. மாலை.
13. தலையில் முடிவது.
14. பல என்பதைக் குறிக்கும்.
15. ஓடம்.
16. முத்தமிழில் ஒன்று.
17. மயிலின் இறகு.
18. ஓர் இராசி.
20. கீழ் அல்ல.
21. வீட்டின் முன்புறம் அமைவது.
22. உற்சவ நாள்/ கொண்டாட்ட தினம்.

**மேலிருந்து கீழ்**

1. தமிழ் மாதம் ஒன்று.
2. நண்பன்/ சினேகிதன்.
3. ஒரு மீன் வகை.
4. தங்களது.
5. திடல்/ களம்/ விளையாடும் இடம்.
7. மேன்மையானது/ உசத்தியானது.
9. யானைக்குச் சிறப்பான அங்கம்.
11. இது சிறியது. ஆனால் காரம் பெரியது.
12. காந்திஜியின் ஆசிரமம்.
13. சமிபாட்டுத் தொகுதியின் உறுப்பு.
15. பீதி/ அச்சம்/ திகில்.
16. இரட்டை.
17. வெற்றியின் முதல் படி.
19. விழி.
20. மலை.

## சொற்சிலம்பம் போட்டி இல. 267

1. திருமதி.கே.ஆர். நிஸாபேகம், இல.16/7,மீத்தட்டமுல்ல லேன், வெல்லம்பிட்டிய.
2. க.சமித்ரா வாணி, தரம் 9, சிலா/ வடிவாம்பிகா தமிழ் மகா வித்தியாலயம்,முன்னேஸ்வரம், சிலாபம்.
3. த.லாவண்யா, வேல்முருகு வீதி, திருக்கோவில்-02.

### பாராட்டுப் பெறுவோர்

1. கு. தரணியன், 36 4/4, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு- 13.
2. எப். பர்வின், இல. 31, ஸ்டேடியம் கம, கொழும்பு- 14.
3. பி. அஞ்சலிக்கா, 138/ 11, குசைப்பிள்ளையார் குளம், வவுனியா.
4. எச்.எம்.இஸ்ஸதீன் இல.18/என்- நவகம்புர தே.வீதி, ஸ்டேஸ் ரோட்- சிரான் பாஸ், கொழும்பு- 14.
5. ஏ.ஆர்.எம். இறுபாத், 26/1 ஏ, சுமனாராம வீதி, கல்கிசை.
6. சி.உமாபதி சிவம், இல. 333/3 எப், அந்தனிஸ் மாவத்தை, கொலப்பிட்டிய, ஹொறந்தலை, வத்தளை.
7. முஹம்மத் ஸாஜித், 9/34, புதிய தெரு, கோனுகமுவ, வெலிகம.
8. தர்மிக்கா தர்மதாஸ், புனித செபஸ்தியார் வீதி, மன்னார்.
9. எம்.என்.எம்.நபீல், 'ஹலீமா மன்ஸில்' இல. 35, கொடப்பிட்டிய, அகுரஸ்ஸ.
10. திருமதி.ப. இராசையா, 'ராஜமகால்' முல்லைத்தீவு.

# பல்சுவைக் கதம்பம்

ஆக்கம்: ஜூலியட்



ஆணாக இருந்து பெண்ணாக மாறியவர்களுக்கான சர்வதேச அழகிப்போட்டி ஸ்பெயின் தலைநகரில் நடந்தது. அழகிப் பட்டம் வென்ற பிரேசில் அழகி (முன்னாள் அழகன்) மகிழ்ச்சியுடன் கையசைக்கின்றார்.



சீனாவில் பீஜிங் நகரில் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்ட இப்படம், புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட பறவை போன்ற அமைப்புடைய டைனோசர் எலும்புகளின் உதவியுடன் வரையப்பட்டது. இதன்மூலம் பறவைகளின் பரிணாம வளர்ச்சி குறித்த ஆராய்ச்சியில் பல புதிய தகவல்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





ஜப்பானின் டோக்கியோ நகரில் பெரி[illegible]ற நிறுவனம் ஆடை அலங்காரப் பொருள்ளைத் தயாரிக்க விலங்குகளின் தோல்களை உபயோகிக்கிறது. இதனை எதிர்த்து அரை நிர்வாணமாகப் போராட்டம் நடத்திய விலங்குகள் நல ஆர்வலர்கள்.



பச்சை குத்திக்கொண்டால் அதை அழிக்கவே முடியாது என்ற நிலை மாறிவிட்டது.எல் சல்வடோர் நாட்டின் சான் சல்வடோர் நகரில் உள்ள மருத்துவமனையில் லேசர் சிகிச்சையின் மூலம் பச்சை குத்தியதை ஒருவர் அழிக்கின்றார்.




தென்கொரியாவின் சியோலில் மாடல் அழகிகள் அறிமுகம்செய்த நேவிகேசன் சிஸ்டம்.



ஜப்பானின் ஹனயாமா நிறுவனம் தயாரித்துள்ள பொம்மையைக் காட்டுகிறார் அதன் ஊழியர் ஒருவர். டோக்கியோவில் நடந்த வருடாந்த பொம்மைக் கண்காட்சியில் இது இடம்பெற்றிருந்தது. இதில் என்ன விசேடம் என்கிறீர்களா? புதிர் விளையாட்டுக்காரர்களுக்கு இந்த பொம்மை ரொம்பப் பிடிக்கும். இதில் மண்டையோடு, மூளைப் பகுதி என்பவை 39துண்டுகளாக தரப்படும். அவற்றை சரியாக ஒன்றுடன் ஒன்று பொருத்தி மூளையாகவும் மண்டையோடாகவும் உருவாக்க வேண்டும்.மனித உடலியல் என இந்தப் பொம்மைக்கு பெயர் வைத்திருக்கின்றனர்.



இந்தியாவின் டெல்லியில் பெய்த கனமழையின்போது, 'அடாது மழை பெய்தாலும் விடாது காதல் செய்வோம்' என்று காதல் மழையில் மூழ்கி உள்ள ஒருஜோடி.

# பித்தன் பதில்கள்



எம்.எச்.அன்வர்சாதாத்,
தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

**கே: பித்தா! முஸ்லிம்களுக்கு எதிராக அரசு திட்டங்கள் கொண்டு வரும் போது முஸ்லிம் அமைச்சர்கள் ஏன் மௌனம் காக்கின்றனர்?**

ப: வாய் திறந்தால் பதவி பறி போய் விடுமே!

மா.பாலசிங்கம்,
மன்னார்.

**கே: பித்தண்ணா! சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் வேறுபாடு என்ன?**



ப: சொர்க்கத்துக்கும் நரகத்துக்குமான வேறுபாட்டை அறிஞர் பெர்னாட்ஷா இவ்வாறு கூறினார். ஒருவனுக்கு இந்திய மனைவியும், அமெரிக்க சம்பளமும், சீன உணவும், பிரிட்டிஷ் வீடும், கிடைத்தால் அதுவே சொர்க்கம்! மாறாக, இந்திய சம்பளமும், அமெரிக்க மனைவியும், சீன வீடும், பிரிட்டிஷ் உணவும் இருந்தால் அதுவே நரகம்!

எம்.எம்.சஹ்பான்,
நிகக்கொல்ல.

**கே: பித்தண்ணா பணத்தை தானும் அனுபவியாது இல்லாதவர்களுக்கும் கொடுக்காது இருக்கும் கருமிகளுக்கு நீர் என்ன சொல்கிறீர்?**

ப: நான் என்ன சொல்வது? நம்ம ஔவையாரே சொல்லி விட்டாரே

பாடுபட்டு தேடி பணத்தை புதைத்து வைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் கூடுவிட்
டிங்கு ஆவிதான் போன பின்பு யாரோ அனு
பவிப்பர் பாவிகாள் அந்தப் பணம் என்று.

ஹாஜரா ஷெராப்தீன்,
அம்பலாந்தோட்டை.

**கே: பித்தண்ணா! கூடவே இருந்து குழி பறிப்பவர்களை என்ன செய்யலாம்?**

ப: ஒன்றும் செய்யத் தேவையில்லை.
''மண்வெட்டி கையிலெடுப்பார்
மற்றவருக்கு குழி பறிப்பார்.
அதுதன் பக்கம் பார்த்திருக்கும்
அதைத் தானறிய மறந்திருப்பர்''

ஆர்.சிவானந்தன்,
கிளிநொச்சி.

**கே: பித்தண்ணை! வைரமுத்து பாடலாசிரியர்; சிறந்த கவிஞர் இல்லை என்ற சிலர் சொல்கிறார்களே! அது உண்மையா?**

ப: எந்தக் கிறுக்கன் சொன்னது? ஒரு முறை கவிஞர் வைரமுத்து தனது நண்பர்களோடு ஹோட்டல் ஒன்றுக்கு போயிருந்தார். அவ்வேளையில் நண்பரில் ஒருவர் உடனே வெண்பா ஒன்று சொல் என்றார். வைரமுத்து அவ்வேளையில் வந்த வெயிட்டரிடம்



''ஏன்டா இதற்குப் போய் இவ்வளவு நேரம் 'போன்டா' எடுத்து வா போ!'' என்றார்.

எம்.எம்.முஜீப்,
தெமட்டகொடை.

**கே: பித்தா! காதல் என்றால் என்ன?**



ப: காதல் 'ஹார்மோன்களின்' மோதல். பருவ காலக் கூதல்.

எம்.ஏ.தாஜஹான்,
பொத்துவில்.

**கே: பித்தா! தத்துவம் ஒன்று சொல்லுங்கள்!**

ப: ஓட்டப் போட்டியில் கால் எவ்வளவு தான் ஓடினாலும் பரிசு கைகளுக்குத்தான் கிடைக்கிறது!

ஏ.பி.கலீஜ்,
பத்தரமுல்ல.

**கே: பித்தா நீங்கள் அடிக்கடி முணுமுணுக்கும் சினிமாப் பாடலை சொல்வீரா?**

ப: ஆடாதடா! ஆடாதடா! மனிதா - ரொம்ப
ஆட்டம் போட்டா அடங்கிடுவ மனிதா!
ஆண்டவன் தான் சாவி கொடுத்து
ஆட்டி வைக்கிறான்- ரொம்ப
ஆட்டம் போட்ட
வாழ்க்கையைத்தான் பூட்டி வைக்கிறான்
போதுமா கலீஜ்...?

பாத்திமா சாமிலா,
பட்டியடிப்பிட்டி, அக்கரைப்பற்று.

**கே: பித்தண்ணா எப்போதும் எதிலும் குறைகாண விழைபவர்கள் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?**

ப: உணவிருக்க ஊத்தை உண்ணும் பன்றிகள். சைத்தான்களை நேசிக்கும் 'சைக்கோக்கள்'. அறிஞர் ஆஸ்கார் ஒயில்ட் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒருவன் எழுந்து கிண்டலாக ''உங்கள் தாத்தா ஒரு கழுதை வண்டியை ஓட்டியவர் என்பது ஞாபகம் இருக்கிறதா?'' என்று கேட்டான். ''என் தாத்தாவின் வண்டி தொலைந்து விட்டது. கழுதை மட்டும் உயிரோடு இருப்பதை இப்பொழுதுதான் கண்டு கொண்டேன்'' என்று பதில் சொன்னார் அறிஞர் ஆஸ்கார்.

க.சாந்தரூபன்,
பண்டாரவளை.

**கே: அன்பு பித்தா! அஹிம்சாவாதியான மஹாத்மா காந்தி பற்றி விமர்சனங்கள் இருக்கின்றனவா?**



ப: காந்தி -இர்வின் ஒப்பந்தம் காங்கிரஸ் மகாசபையில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு 'பகவத்சிங்' மீதான லாகூர் சதி வழக்கும் அதன் தீர்ப்பும் தடையாகிவிடும் நிலைமை இருந்தது. அப்போது, ''அந்தப் பையன்களை தூக்கிலிட வேண்டுமென்றால் காங்கிரஸ் கூடுவதற்கு முன்னே தூக்கிலிடுவது நல்லது'' என்று பிரிட்டிஷாரிடம் காந்தி சொன்னதாக, காந்தியின்வலதுகரமாக விளங்கிய பட்டாபி சீத்தாராமையா எழுதிய ''காங்கிரஸ் மகா சபை'' சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கார்த்திக்,மஸ்கெலியா.

**கே: பித்தா 'தாதா சாகேப் பால்கே' என்பவர் யார்?**

ப: இந்திய சினிமாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர். 'தாதா சாகேப் பால்கே' இந்தியாவுக்கு சினிமாவை முதலில் அறிமுகப் படுத்தியவர். தொடக்கத்தில் வந்த படங்கள் எதுவும் வண்ணப் படங்கள் அல்ல, ஒலியும் இல்லாமல் ஊமைப்படங்களாகத்தான் இருந்தன. பால்கே தனது தீவிர முயற்சியனால் ஒரு சினிமாவை எழுதி இயக்கினார். படத்தின் பெயர் 'அரிச்சந்திரன்'. நடிகர்களை எப்படித் தான் தேர்வு செய்வது என்று அவர் யோசிக்கவே இல்லை. தனது குடும்பத்தில் இருந்த மொத்தம் 18 பேர்களையும் நடிகர்களாக ஆக்கி விட்டார்.

ம.பிரதீபன்,
கொழும்பு- 13.

**கே: பித்தா! நான் பெரிய எழுத்தாளனாக ஆசைப்படுகிறேன். அதற்கு உங்கள் அட்வைஸ்?**

ப: வாசி; வாசிக்கப்படுவாய்.!
எழுது; எழுதப்படுவாய்.!

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6.00 | காலைநேரச் செய்திகள் | காலை நேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | 6.00 | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச் செய்திகள் | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச் செய்திகள் |
| 6.30 | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | 6.30 | சங்கீத மேடை | சங்கீத மேடை |
| 7.00 | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | 7.00 | ராசிபலன் | கார்ட்டுன் |
| 7.30 | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | 7.30 | சிறுவர் உலகம் | கிட்ஸ் |
| 8.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொண்டாட்டம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | கொமடி ரைம் | 8.00 | | அரட்டை அரங்கம் |
| 9.00 | உங்கள் சொய்ஸ் | புத்தம் புது பாடல் | நீங்கள் கேட்டபாடல் | சுப்பர் 10 | உங்கள் சொய்ஸ் | 8.30 | | சின்னச் சின்ன ஆசைகள் |
| 9.30 | நேற்று இன்று நாளை | நினைவுகள் | நட்சத்திரம் | இயக்குநர் பார்வை | நேற்று இன்று நாளை | 9.00 | திரை விமர்சனம் | |
| 10.00 | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | 9.30 | ராஜ ராஜேஸ்வரி | அல்லி ராஜ்யம் |
| 10.30 | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | 10.00 | அது மட்டும் ரகசியம் | வேப்பிலைக் காரி |
| 11.00 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | 10.30 | இளமை புதுமை | சண்டே சமையல் |
| 11.30 | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | 11.00 | | சுப்பர் சீன்ஸ் |
| 12.00 | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | 11.30 | சினி சொய்ஸ் | இளைய கானம் |
| 12.30 | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கை | 12.00 | அன்புடன் | அசத்தப்போவது யாரு? |
| 01.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதியசெய்திகள் | 12.30 | | |
| 01.15 | சக்தி மூவி | சக்தி மூவி | சக்தி மூவி | சக்தி மூவி | சக்தி மூவி | 1.00 | சக்தி மூவி | சக்தி மூவி |
| 04.00 | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | 4.00 | ஜொலிவுட் எக்ஸ்பிரஸ் | ஸ்ராருடன் பேசலாம் |
| 4.30 | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | 4.30 | குஷி ரைம் | ரிலாக்ஸ் ரைம் |
| 5.00 | கார்ட்டுன் | கார்ட்டுன் | கார்ட்டுன் | கார்ட்டுன் | கார்ட்டுன் | 5.00 | நலந்தானா | ரொப் 10 மூவிஸ் |
| 5.30 | அட்வென்சர் மேன் | கிட்ஸ் ராமா | கிட்ஸ் ராமா | கிட்ஸ் ராமா | கிட்ஸ் ராமா | 5.30 | ஊரும் உலகும் | புதிய ராகங்கள் |
| 6.00 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | 6.00 | அறிவு | மின்னல் |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | 6.30 | திமிதகதா | |
| 7.00 | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | 7.00 | சக்தி சுப்பர் ஸ்டார் | |
| 7.30 | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | 7.30 | | |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | 8.00 | செய்திகள் | செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | 8.30 | வா வாத்தியாரே வா | வா வாத்தியாரே வா |
| 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் |
| 9.30 | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | 9.30 | நிஜத்தின் நிழல் | சிதம்பர ரகசியம் |
| 10.00 | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | 10.00 | களம் | விளையாட்டு அரங்கம் |
| 10.30 | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நைற் மூவி | 10.30 | நைற் மூவி | இசை சாரை |
| 11.30 | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | | 11.00 | | திரை மசாலா |
| 12.00 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | 11.30 | | புத்தம் புதுசு |
| | | | | | | | நிகழ்ச்சி நிறைவு | |

மணித்தியாலச் செய்திகள் 10.25, 11.25, 14.25, 15.25, 16.25, 17.25

குறுங்கதை

# அவசர திருமணத்தால் அழிந்து போன வாழ்க்கை!



என் கணவர் ஒரு ஆட்டோ ஓட்டுநர். வசதி குறைவாக இருந்தாலும் எங்கள் மூன்று மகள்களையும் செல்லமாக வளர்த்து வந்தோம். என் மூத்த மகள் லதா மிகவும் அழகாக துருதுரு என்று இருப்பாள். நன்றாக படிக்கவும் செய்வாள். அவளை பெரிய படிப்பு படிக்க வைக்க வேண்டும் என்ற கனவில் நாங்கள் அவளை கல்லூரியில் சேர்த்தோம். ஆனால் லதாவோ முதல் வருட ஆரம்பத்திலேயே தன்னுடன் படிக்கும் 'பீட்டர்' என்ற மாணவனை காதலிக்க ஆரம் பித்து விட்டாள். லதா அந்தப் பையனுடன் நெருக்கமாக நின்று சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதை நேரில் பார்த்ததும் நான் கொதித்துப் போனேன். நான் பார்த்து விட்டதை என் மகள் கவனிக்கவில்லை.

நானும் லதாவை அழைத்து இதைப்பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் பருவ வயதில் ஏற்படும் ஒரு பக்குவமற்ற ஈர்ப்பு. ஒரு இனககவர்ச்சிதான் இந்தக் காதல். இந்த பருவத்தில் படிப்புத்தான் முக்கியம் என்ற உண்மையை புரிய வைக்காமல், லதாவுக்கு சிந் திக்கின்ற வாய்ப்பையே உருவாக்கி கொடு க்காமல் அவசர அவசரமாக ஒரு மாப்பிள்ளையை பார்த்து வெகு ரகசியமாக திருமண ஏற் பாடுகள் செய் தோம். என் மகளை 'நேர்த்திக் கடன்' என்று கோவிலுக்கு அழைத்துச் சென்று கட்டாயமாக அவளுக்கு நாங்கள் பார்த்து வைத்திருந்த மாப்பிள்ளையை திருமணம் செய்து வைத்துவிட்டோம். கழுத்தில் தாலி விழுந்து அன்றே முதலிரவும் முடிந்த பின் எதுவும் பேச முடியாமல், கணவருடன் என் மகள் குடித்தனம் பண்ண ஆரம்பித்தாள்.

நான்கு வருடத்தில் இரண்டு குழந்தைகளுக்கு தாயானாள். திடீரென்று என் மாப்பிள்ளைக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது. மருத்துவரிடம் காண்பித்தபோது அவருக்கு முற்றிய நிலையில் புற்றுநோய் இருப்பதாக கூறினார்கள். இதில் ஒரு பேரதிர்ச்சி என்னவென்றால், இந்த நோய் தனக்கிருப்பது ஏற்கனவே என் மாப்பிள்ளைக்கும் தெரியும். அதை மறைத்து வைத்துத்தான் என் மகளை திருமணம் செய்து கொண்டிருக்கிறார். முடிவில் எந்த வித மருத்துவ சிகிச்சையும் பலன் அளிக்காமல் என் மாப்பிள்ளை இறந்தே போனார்.

இரண்டு குழந்தைகளுக்கு தாயாக விதவையாக என் மகள் தவிப்பதைப் பார்க்கும் போதெல்லாம் நாங்கள் மிகுந்த குற்ற உணர்வுக்கு ஆளாகி தவிக்கிறோம். என் மகள் காதலித்ததால் தானே அவசர அவசரமாக தீர விசாரிக்காமல் ஒரு நோயாளியை திருமணம் செய்து வைக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. அதனால் தானே இந்த சிறு வயதிலேயே என் மகள் விதவையாகி விட்டாள். நாங்கள் தானே இதற்கெல்லாம் காரணம் என நினைக் கும் போது மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகுகிறோம்.

எங்கள் மகள் ஒரு பையனை காதலிப்பதை கேள்விப் பட்ட உடனேயே நாங்கள் கொந்தளித்துப் போகாமல், நிதானமாக யோசித்து அவளுடைய வாழ்க்கையை செம்மையாக கொண்டு செல்வதற்கு எத்தனையோ வாய்ப்புக்கள் இருந்த பின்பும், அதில் முயற்சியை கூட செய்யாமல், அவசர திருமணம் என்கிற மிக தவறான வழியை பின்பற்றி மாப்பிள்ளை தேடியதால் தானே என் மகள் இன்று கண்ணீரும் கம்பலையுமாக தன் வாழ்க்கையை ஓட்டுகிறாள்.

பெற்ற மகளுக்கு மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்து விட்டால் 'கடமை' முடிந்தது என்று கருதும் என் போன்ற பெற்றோர்கள் தங்கள் மகளின் கண்ணீருக்கு என்ன விடை தான் கொடுக்க முடியும்?

---

# மனிதனைக் கொல்லும் மூடத்தனம்



இந்தியாவில் அடுத்தவர்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் போக்கிரிக் கும்பல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. மதம், மந்திர, தந்திரம் என்ற பெயரில் இவர்களின் மோசடி வேலைகள் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதித்து வருகின்றன.

வட இந்தியாவில் விரோஹி கிராமத்தில் இந்தக் கபடதாரிகளின் பேச்சில் மயங்கி, ஏமாந்து போகாத குடும்பத்தினரே இல்லை எனலாம்.

மத்திய பிரதேசத்தின் சீதி மாவட்டம், பகாவர் கிராமத்தைச் சேர்ந்த ஜீவாலுதீன் மற்றும் அலாவுதீன் குடும்பத்தினர் மாந்திரீகர்களின் பேச்சை நம்பி, 10குழந்தைகளை பலி கொடுத்துள்ளனர்!

உண்மையில் இந்த மத வியாபாரிகள், சாஸ்திரங்களை மேற்கோள் காட்டி, தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர். அரசியலில் செல்வாக்கை வளர்த்துக் கொள்வதால், குற்றங்கள் செய்தாலும் இவர்களால் எளிதில் தப்பித்து விட முடிகிறது. இந்தியா முழுவதும் 1.5 கோடி காவியுடை சாதுக்கள் இருக்கிறார்கள். இதே எண்ணிக்கையில் பிச்சைக் காரர்களும் இருக்கிறார்கள். இந்த இரு பிரிவுகளிலும் உள்ள இலட்சக்கணக்கானோர் மத வியாபாரத்தின் மூலம் மக்களை முட்டாள்களாக்கி தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

இதில் 30 சதவிகிதம் பேர் தமிழ் நாட்டில் மட்டும் இருக்கிறார்கள். அதற்கடுத்து உத்தரப் பிரதேசத்தில் அதிகமாக உள்ளனர். இதில் மாந்திரீகன், பூசாரி, புரோகிதர், மதகுரு, பண்டிதர், முல்லா, மவுலவி, பாதிரியார் போன்றவர்கள் அடக்கம். இவர்கள் பல நூற்றாண்டுகளாக மதப் பாடங்களை போதிப்பதன் மூலம் சமுதாயத்தைத் தங்கள் பிடியில் வைத்துக் கொண்டு, அவர்களின் வாழ்க்கையை நாசம் செய்து வருகின்றனர். இலஞ்ச ஊழல், பழைமைவாதம் மற்றும் சுரண்டலுக்கு எதிராக நூற்றுக் கணக்கான சமூக சேவை அமைப்புக்கள் இயங்கிவரும் இதே நாட்டில் தான், மதகுருக்களின் செல்வாக்கும் கொடி கட்டிப் பறக்கிறது.

மாந்திரீகர்கள், பண்டிதர்கள், பூசாரிகள் ஆகியோரின் கபட வலையில் சிக்கி, ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சம் குடும்பங்கள் எந்த வகையிலாவது சீரழிந்து கொண்டே இருக்கின்றன என்கிறது, ஓர் ஆய்வறிக்கை.

மக்கள் ஒவ்வொரு ஆண்டும் நோய், குடும்பப் பிரச்சினை, வறுமை ஆகியவற்றைப் போக்கவும் எதிரிகளைப் பழி தீர்க்கவும் 1000 கோடி ரூபாய்க்கும்(இந்திய ரூபா) கூடுதலாக இந்த கபடதாரிகளிடம் கொண்டு போய் கொட்டுகின்றனர்.

அரசாங்கத் தடை இல்லாத காரணத்தால் மதத்தின் பெயரால் நாள் தோறும் நூற்றுக்கணக்கில் புதிதாக கபடதாரிகள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று கம்பியூட்டரின் பயன்பாடு அனைத்துத் துறைகளிலும் அதிகரித்து வருகிறது. எனவே அதன் பயனை இந்தக் கபடதாரிகளும் எல்லா விதங்களிலும் அனுபவித்து வருகின்றனர். மந்திர தந்திரங்கள், ஜாதகம் உட்பட அனைத்துக்கும் தற்போது கம்பியூட்டரையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் மூடப்பழக்கங்கள் இல்லாதவர்களும் கம்பியூட்டர் பயன்பாட்டின் காரணமாக ஈர்க்கப்பட்டு விடுகிறார்கள்.

கிராமங்கள் மற்றும் கோலனிகளில், 'அருள் வாக்கு' சொல்கிறேன் என்ற பெயரில் மோசடி செய்யும் பூசாரிகளுக்குப் பஞ்சமே இல்லை.

மனநலம் பாதித்தவர்களுக்கு 'பேய் பிடித்திருக்கிறது', 'காத்து - கருப்பு தீண்டியிருக்கிறது' என்றெல்லாம் 'ரீல்' சுற்றி வேப்பிலை அடிக்கும் இவர்களால் சம்பந்தப்பட்டவரின் நோய் அதிகமாகுமே தவிர, குறைய வாய்ப்பில்லை.

ஆக, இந்த மத கபடதாரிகளுக்கு எதிராக சமூக விழிப்புணர்வு ஏற்படாத வரையில் இவர்கள், சமூகத்தின் அனைத்துப் பிரிவினர்களையும் சுரண்டிக் கொண்டுதான் இருப்பார்கள்.

பக்திக்கும் மூட நம்பிக்கைக்கும் உள்ள வித்தியாசத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மூட நம்பிக்கைகளுக்கு சரியான விஞ்ஞான பூர்வமான விளக்கத்தை மக்களுக்குத் தர வேண்டிய நேரமிது.

தோஷம், பரிகாரம், மாந்திரீகம், பில்லி, சூனியம் என்றெல்லாம் சொல்லி பணம் பறிக்கும் மோசடிக் கும்பல் தென்பட்டால் மக்களே அவர்களை சட்டத்தின் முன் கொண்டு வந்து நிறுத்த வேண்டும்.

இது தவிர, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமூக சேவகர்கள் மற்றும் விஞ்ஞானிகள் ஒருங்கிணைந்து, மதகுருக்களின் போலித்தனங்களை வேருடன் அழிக்கப் போரிடுவது நல்ல விளைவுகளைத் தரும்.

இந்த முயற்சிகளால் சமூகத்தில் விஞ்ஞான விழிப்புணர்ச்சி அதிகரிப்புடன், இது போன்ற கபடதாரிகளிடமிருந்தும், மத குருக்களிடமிருந்தும் சமூகத்துக்கு விடுதலை கிடைக்கும்.

# சொக்லெட் எதிர்காலத்தின் உணவா?



சொகலேட மட்டும் இனிப்பானது அல்ல. சமீபத்தில் அதைப் பற்றிய ஆய்வுகளும் படுசுவையாகவும், கேட்பதற்கு இனிமையாகவும் வந்து கொண்டு இருக்கின்றன. காதலின் பகுதியாகவும், ஒரு பரிசுப் பொருளாகவும் பயன்படுத்தப்பட்ட சொக்லேட் பற்றிய சமீப ஆய்வுகள் அது காய்கறிகள், பழங்கள் போல நம் வாழ்வில் அத்தியாவசியமான உணவுப்பொருளா? என்ற கேள்வியை எழுப்பி இருக்கின்றன.

தேவை இல்லாமல் எடையை கூட்டிவிடும், எதற்கு அதிகமான இனிப்பு என்றெல்லாம் ஒதுக்கப்பட்ட சொக்லேட்கள் உண்மையில் அபாரமான மருத்துவ குணங்களை வெளிப்படுத்தி, ஆய்வாளர்களை சந்தோஷத்தில் திக்குமுக்காட வைத்துள்ளன.

சொக்லேட் என்பது என்ன? அது எதிலிருந்து வருகிறது? எப்போது கண்டுபிடிக்கப்பட்டது? என்ன என்ன மருத்துவ குணங்கள் அதற்கு இருக்கின்றன? உலகின் சுவை மிகுந்த சொக்லேட்டுகள் எங்கு தயாராகின்றன? என்பன போன்ற பல கேள்விகளுக்கான ரிப்போர்ட் இது.

**சொக்லேட்டில் என்ன இருக்கிறது?**

ஒவ்வொரு சொக்லேட் தயாரிப்பாளர்களும் சில அடிப்படைப் பொருட்களிலிருந்து சொக்லேட் தயாரித்தாலும், தங்கள் விருப்பப்படி அதற்குள் தங்களை தனிப்படுத்தி, வேறுபடுத்திக் காட்ட வெவ்வேறு பொருட்களைச் சேர்க்கிறார்கள். இதுவே ஒவ்வொரு கம்பெனி சொக்லேட்டும் வேறு வேறு சுவையில் இருக்கக் காரணம்.

**புரோட்டீன்.**

இது செல்களின் அடிப்படை ஆதாரம், வளர்ச்சி, புதுப்பித்தல் என செல்லின் ஒவ்வொரு செயலுக்கும் தேவைப்படுகிறது.

**கொழுப்பு.**

30 சதவிகிதத்திலிருந்து இருக்கும் இதில் பாதிக்குப்பாதி சாச்சுரேடட் வகை கொழுப்புகள்.

**வைட்டமின் ஈ.**

செல்லின் மெம்ப்ரைன் என்கிற தோல் பகுதிக்கு இது தேவையானது.

**கல்சியம், பொஸ்பரஸ், மக்னீசியம்.**

பற்கள், எலும்புகளுக்கு உதவக்கூடியது.

**இரும்புச் சத்து.**

இது இரத்த உற்பத்திக்கு உதவுகிறது.

**காபின், தியோபுரோமைன்**

இது நரம்புகளைத் தூண்டிவிடுகிறது.

**கொப்பர்.**

மெலனின் உருவாக, உடலில் இரும்புச்சத்தின் மெட்டபொலிஸத்திற்கு இது உதவுகிறது.

**சர்க்கரை.**

ஐம்பது சதவிகிதம் வரை இருக்கலாம்.

**ஆன்டி ஒக்ஸிடென்ட்**

இது கொக்கோ விதைகளிலிருந்து கிடைக்கிறது. இதில் 600 இற்கும் அதிகமான தாவர வேதிப்பொருட்கள் இருக்கின்றன.

## சொக்லேட் ; சில தவறு / சரி.

*1. சொக்லேட் சாப்பிட்டால் பற்சிதைவு ஏற்படும்.*

இது தவறானது. பற்களை சரியாகப் பாதுகாக்காவிட்டால் நாம் சாப்பிடுகிற எந்த உணவும் பற்சிதைவை உருவாக்கும். உண்மையில் சொக்லேட்டில் இருக்கிற பொருட்கள் பற்சிதைவைத் தடுக்கின்றன.

*2. சொக்லேட்டில் அதிக 'காபின்' இருக்கிறது.*

நீங்கள் குடிக்கிற ஒரு கப் காப்பியில் இருக்கிற காபினை விட, நீங்கள் கடிக்கிற ஒரு சொக்லேட்டில் இருக்கிற காபின் குறைவானது.

*3. சொக்லேட்டில் அதிக கொழுப்பு இருக்கிறது. இது எடையைக் கூட்டி பருமனை உருவாக்கும்.*

சொக்லேட் உண்மையில், உணவில் குறைந்த கொழுப்பு இருப்பவர்களுக்கு உதவும் என்பது பலருக்குத் தெரிவதில்லை.

*4. சொக்லேட் கொலஸ்டிராலைக் கூட்டுகிறது.*

இதுவும் சரியாகப் புரிந்து கொள்ளப்படாததன் விளைவே. சொக்லேட்டில் இருக்கிற கொழுப்பில் பெரும்பகுதி 'ஸ்டீயரிக் அஸிட்' என்கிற வகை கொழுப்புகள். இது எந்த விதத்திலும் கொலஸ்ரோல் அளவைக் கூட்டுவதில்லை என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. தினசரி எமக்குத் தேவையான கொலஸ்டிரால் அளவு 300 மில்லி கிராம். ஒரு சொக்லேட் பாரில் 12 மில்லி கிராம் தான் கொலஸ்ரோல் இருக்கிறது.

*5. சொக்லேட்டில் சோடியம் இருக்கிறதா?*

இருக்கிறது. தினசரி நம் உடலுக்குத் தேவையான சோடியத்தின் அளவு 1100-3300 மில்லி கிராம். ஒரு சொக்லேட் பாரில் 41 மில்லி கிராம் சோடியம் இருக்கிறது. இதுவே 'டாக் சொக்லேட்டில்' வெறும் 5மில்லி கிராம்.

## சொக்லேட் கலோரி.

சொக்லேட் மூலம் கிடைக்கிற கலோரிகள் ஒவ்வொரு சொக்லேட்டிற்கும் சேர்க்கப்படுகிற விஷயங்களைப் பொறுத்து மாறுபடும். பெரிய அளவு என்பது கூட முக்கிய விஷயம். அளவு பெரிதாக பெரிதாக சொக்லேட்டின் அடர்த்தி, அதில் சேர்க்கப்படுகிற இனிப்புத்தன்மை மற்றும் கொழும்புகளால் அதிக கலோரிகள் உருவாகின்றன. இந்தக் கொழுப்புகள் தாவர எண்ணெய்களாகச் சேர்க்கப்படுகின்றன. இதுதான் சொக்லேட்டைக் கெட்டியாவும் உருகாமலும் வைத்திருக்க உதவுகிறது. எமது உடல் இந்தக் கொழுப்புகளை அப்படியே சேமிக்கக் கூடியது. சொக்லேட் மூலம் கிடைக்கிற கலோரி, குறைந்த அளவிலிருந்து அதிகபட்சமாக 300 வரை இருக்கிறது. ஆக, கலோரி குறைந்த உணவு என்கிற இடத்தில் நீங்கள் நிற்கிறீர்கள் என்றால் சொக்லேட் பக்கம் நாக்கை நீட்டாதீர்கள்.

உலகம் முழுக்க சொக்லேட்டுகள் தயாரிக்கப்பட்டாலும் பெருமை எல்லாம் சுவிட்சர்லாந்து, இத்தாலி, ஹோலந்து, லண்டன் மற்றும் அமெரிக்க சொக்லேட்டுகளுக்குத் தான் கிடைக்கின்றன. இதில் பெல்ஜியமும் பிரான்சும் சொக்லேட் எதிரிகள் என்றுகூடச் சொல்லலாம். ஒரு பிரெஞ்சுக்காரரிடம் பெல்ஜியம் சொக்லேட்டுகள்தான் சுவையானவை என்று சொன்னால் அடுத்த உலகப்போரே வந்துவிடும் என்று கிண்டலடிப்பார்கள்.

தற்சமயம் வெளியிடப்பட்டிருக்கிற சொக்லேட் ஆய்வுகளின்படி டார்க் சொக்லேட் (Dark Chocolate)என்கிற வகை சொக்லேட்கள் மனிதர்களுக்கு பலவகையிலும் நன்மைகள் செய்கின்றன. அது என்ன டார்க் சொக்லேட்? சொக்லேட் தயாரிக்க உதவுகிற அடிப்படைத் தாதுப்பொருளான கொக்கோ அளவு அதிகமாக இருக்கிற சொக்லேட்டுக்களைத் தான் டார்க்சொக்லேட் என்கிறார்கள். சொக்லேட்டுகளில் பெரும்பாலானவை மில்க்சொக்லேட்டுகள். இதில் மருத்துவப்பயன்கள் மிகக் குறைவு.

எதிர்காலத்தில் சொக்லேட் நம் சந்ததிகளின் முக்கிய உணவாக மாறிவிடலாம் என்கிறனர் விஞ்ஞானிகள்.

டார்க் சொக்லேட் சாப்பிடுகிறவர்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் அவர்களுடைய இரத்த அழுத்தம் குறைவதை, குறைந்து மெல்ல மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்புவதை ஜேர்மன் ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர் என ஜேர்னல் ஆஃப் அமெரிக்கன் மெடிக்கல் அஸோஷியேஷன் தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதற்குக் காரணம் டார்க் சொக்லேட்டில் இருக்கிற சில புரோசையன்டின்ஸ் நைட்ரிக் ஒக்ஸைட் உற்பத்தியை அதிகரிக்கச் செய்கிறது. இது இரத்தக் குழாய்களை இளகச் செய்வதால் இரத்த அழுத்தம் குறைய ஆரம்பிக்கிறது.

**புகைப்பிடிப்பவர்களுக்கு உதவுகிறது.**

புகைப் பிடிப்பதால் மெல்ல மெல்ல இரத்தக் குழாய்களில் ஒரு இறுக்கம் தோன்ற ஆரம்பிக்கிறது. இது கடைசி நிலையில் இருக்கிற இரத்தக் குழாய்களில் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கும். சொக்லேட்டில் இருக்கிற ப்ளேவினாய்ட்கள், இரத்தக் குழாய்களில் ஏற்படுகிற இந்த இறுக்கங்களைத் தடுக்கின்றன. இதில் முக்கிய பங்கு வகிப்பது எபிகேட்சின்.

இது தொடர்ந்த இருமலைக் கட்டுபடுத்த உதவுகின்றது. சொக்லேட்டில் இருக்கிற தியோபுரோமைன் நீண்ட நாட்களாக இருக்கிற இருமலைக் கட்டுப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது என்கிற தகவலை லண்டன் ஆய்வாளர்கள் FASEB ஜேர்னலில் வெளியிட்டு இருக்கிறார்கள். இந்த ஆய்வால் இனி இருமல் மருந்துகளின் உள்ளடக்கம் மாறப்போகிறது.

**சொக்லேட் உடல்சோர்வை அகற்றுகிறது.**

அமெரிக்காவின் போர் வீரர்கள் சமீபத்தில் ஈராக் யுத்தத்தில் ஈடுபட்ட போது ஏறக்குறைய 3000 பேர் உடல் சோர்வால் திரும்பி வந்தார்கள். அதில்40 சதவிகிதம் பேருக்கு post traumatic stress இருப்பதாக மருத்துவர்கள் முடிவு செய்தார்கள். உணவில் சொக்லேட் சேர்க்கப்பட்டதும் மிகக் குறைவான காலத்தில் அவர்கள் பழைய உற்சாகத்தை அடைந்தார்கள். காரணம் சொக்லேட்டின் ஆன்டி ஒக்ஸிடென்ட்.

**மூளைக்கு நல்லது.**

சொக்லேட் சாப்பிட்டால் செயல்படும் தன்மை, கிரகிக்கும் திறன் அதிகரிப்பதாக wheeling jesuit பல்கலைக்கழக ஆய்வுகள் உறுதி செய்கின்றன. சொக்லேட்டில் இருக்கிற காபின், தியோபுரோமைன் உட்பட சில தாவர வேதிப்பொருட்கள் மூளையின் இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துவதே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

பலநூறு வருடங்களாக தோல் நோய் மருத்துவ நிபுணர்கள் முகப்பருக்களுக்கும் உணவிற்கும் குறிப்பாக சொக்லேட் போன்ற உணவுக்கும் தொடர்புஇருப்பதாக நம்பினார்கள். மிசூரி பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வும் பென்சில்வேனியா பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வும் சொகலேட சாப்பிடுவதால் முகப்பருக்கள் வருவதோ அல்லது அதிகரிப்பதோ இல்லை என்றுமிகத் துல்லியமாக உறுதி செய்திருக்கின்றன.

எல்லா உணவுப் பொருட்களையும் போலவே சொக்லேட்டும் சிலருக்கு அலர்ஜியை ஏற்படுத்தலாம்.



# வர்த்தமானியூடாகவும்....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ அரசின் சிங்களப் -பௌத்த பேரினவாதச் செயல்கள் விசுவரூபம் எடுத்துப் பூதாகாரமாக வளர்ந்து வருகின்ற தையும்நாம் அவதானிக்கின்றோம். உதயன் - சுடர் ஒளி பத்திரிகைகளின் ஆசிரியர் வித்தியாதரன் அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் என்பதானது உண்மை நிலையை வெளிக்கொண்டு வருகின்ற ஊடக சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் என்றுதான் நாம் கருதுகின்றோம். மிக ஆபத்தான களத்தில் இருந்துகொண்டு திரு.வித்தியாதரன் மிகத் துணிச்சலான தெளிவான கருத்துகளைத் தெரிவித்து வருகின்றார். 'ஒரு போராளியின் துப்பாக்கி சரிகின்றபோது அதனை மீண்டும் தூக்குவதற்கு ஒரு புதிய போராளி வருவதைப்போல் உரிமைக்காகக் குரல்கொடுக்கின்ற எங்களுடைய தமிழ்ஊடகவியலாளர்களின் பேனாக்கள் சரிகின்ற போது அடுத்தவர்கள் வந்தகொண்டிருப்பார்கள்' என்று திரு.வித்தியாதரன் தெரிவித்திருப்பதானது நேர்மையான, கடமையுணர்ச்சிமிக்க ஊடகவியலாளர்களின் உளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளது.

இன்று தமிழர் தாயகப் பகுதிகளை அபகரிக்கின்ற சிங்கள நாசிப் பேரினவாதம், தம்மை அம்பலப்படுத்துகின்ற தமிழ் ஊடகவியலாளர்களை நெருக்குவாரப்படுத்தி வருகின்றது. வர்த்தமானி அறிக்கைகள் ஊடாகத் தமிழ்மக்களின் மீது வன்முறையைப் பிரயோகிக்கின்ற மஹிந்தவின் அரசு, அவற்றை வெளிப்படுத்துகின்ற தமிழ்ஊடகவியலாளர்கள் மீதும் வன்முறையை மேற்கொள்கின்றது. தமிழருக்கான தாயகம் வலிமையோடு விடுதலை பெறுகின்றபோதுதான் தமிழர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியும்.

சிங்களப் பேரினவாதத்திற்கு மிகுந்த ஆதரவாகவும் நீதிக்கும் நேர்மைக்கும் எதிராகவும் செயற்பட்ட மேற்குலக நாடுகளின் செய்கைகள் தமிழீழம் விரைவில் உதயமாகவேண்டும் என்பதைத்தான் ஒருவகையில் வலியுறுத்தி வருகின்றன.

கடற்கரையில் கிளிஞ்சல் கோபுரத்தைக் கட்டி மஹிந்த ராஜபக்ஷ விளையாடிக் கொண்டிருக்கின்றார். எமக்கோ 'அலைகளின் ஓசை' கேட்கத் தொடங்குகின்றது.

நன்றி: தமிழ்நாதம்

# பாகற்காய்

ஒருகாட்டில் முனிவர் ஒருவர் வசித்தார். ஒருநாள் அந்தக் காட்டின் வழியே நாலுபேர் போனார்கள்.தண்ணீர் குடிக்க நால்வரும் முனிவரின் குடிலுக்கு வந்தார்கள்.



"எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" என்று முனிவர் கேட்டார்.

"புனித ஆறுகளில் நீராடப்போகிறோம்" என்று ஒருவன் சொன்னான்.

"கங்கையில் குளித்து எங்கள் பாவங்களைப் போக்கி புனிதர் ஆகப்போகிறோம்" என்று இன்னொருவன் கூறினான்.

"மகிழ்ச்சி. போய் வாருங்கள்!" என்று முனிவர் சொன்னார்.

குடிசைக்குப் பக்கத்தில் ஒரு பந்தலில் பாகற்காய் காய்த்துத் தொங்கியது. ஒரு காயைப் பறித்து ஒருவனிடம் முனிவர் கொடுத்தார். "நீங்கள் மூழ்கும் ஆறுகளில் இந்தப் பாகற்காயையும் முழுகவைத்து எடுத்து வாருங்கள்" என்று முனிவர் சொன்னார்.

"சரி" என்று பாகற்காயை வாங்கிக்கொண்டு நால்வரும் புறப்பட்டார்கள். சிலநாள் கழித்து நால்வரும் திரும்பிவந்தார்கள். முனிவரிடம் பாகற்காயைத் திருப்பிக் கொடுத்தார்கள்.

"நாங்கள் குளித்த எல்லா ஆறுகளிலும் பாகற்காயையும் குளிப்பாட்டினோம்" என்று சொன்னார்கள்.

"நன்றி" என்ற முனிவர் பாகற்காயை வாங்கி, நாலு துண்டாக வெட்டினார். நால்வருக்கும் ஆளுக்கு ஒரு துண்டாகக் கொடுத்தார். "சாப்பிடுங்கள்" என்றார்.

நால்வரும் பாகற்காய் துண்டை வாயில் போட்டுக்கொண்டார்கள். "கசக்கிறது" என்று கீழே துப்பினார்கள்.

முனிவர் சொன்னார் - "கங்கையில் குளிப்பதால் யாரும் புனிதர் ஆவது இல்லை. அதற்கு மனம் சுத்தமாக வேண்டும். பெரியவர்களிடம் அறிவுரை கேட்டால் மனம் சுத்தமாகும்".

நிமிடக்கதை

நாலுபேரும் அப்போதே முனிவரிடம் மாணவர்களாகச் சேர்ந்தார்கள்.

# பழைய திரைப்படங்களுக்கு புதிய வடிவம் கொடுப்பது ஆரோக்கியமானதா?



தென்னகத் தமிழ்த் திரையுலகம் உண்மையிலேயே விசித்திரங்கள் நிறைந்த ஓர் உலகமாகும். அவ்வப்போது வித்தியாசமான படங்கள் வந்து, அவை மக்களின் ஆதரவினைப் பெற்று வெற்றி பெறும்போது, அதேமாதிரி அதிகமான படங்கள் வந்து மண் கவ்வி விடுகின்றன. பின்னர் வேறொரு வகையில் இன்னொரு படம் எப்படியோ வெற்றி பெற்றுவிடும் போது, ஆட்டு மந்தைகளைப் போல அதே பாதையில் பயணம் செய்து மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள். ஆனால் மக்களின் ரசனையை நன்றாக நாடிபிடித்து பார்த்த சிலர் மட்டுமே இந்தப் பந்தயத்தில் தொடர்ந்து வெற்றி பெறுகின்றனர்.

தற்போதைய நிலை என்ன தெரியுமா? ஏற்கனவே நன்றாக ஓடி வெற்றிபெற்ற திரைப்படங்களை மறுபடியும் இன்றைய நடிகர்களை வைத்து தயாரிப்பது..அந்த வகையில் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் மறைந்த காதல் மன்னன் ஜெமினி கணேஷன் நடித்து கே.பாலசந்தர் இயக்கிய 'நான் அவனில்லை' திரைப்படத்தை மறுபடியும் இன்றைய காலத்துக்கேற்றபடி மாற்றி 'திருட்டுப்பயலே' மூலமாக கதாநாயகனாக உயர்த்திப் பேசப்பட்ட ஜீவனை கதாநாயகனாக்கி தயாரித்து வெளியிட்ட போது படம் பிய்...த்துக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் ஜெமினி கணேஷன் நடித்த 'நான் அவனில்லை' சுமாராகவே ஓடியது. ஆனால் ஜீவனின் நடிப்பில் செல்வா இயக்கிய அதே படம் மிகப் பெரிய வெற்றியைத் தொட்டுள்ளது.இதில் நாம் இன்னொரு விடயத்தினை சற்று ஊன்றிப் பார்க்க வேண்டும். முப்பது வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தை இன்றைய 25 வயது வாலிபர்கள் பார்த்திருக்க வாய்ப்பில்லை. தற்போது இந்த வயதினர்கள் மட்டும் தான் தியேட்டர்களில் அதிகமாக படம் பார்க்கிறார்கள். எனவே அவர்களைப் பொறுத்த வரையில் ஜீவன் நடித்த இந்தப்படம் புத்தம் புதிய படமாகவே அறியக் கிடக்கிறது.

அதிகளவு கவர்ச்சி, வித்தியாசமான கதையமைப்பு என்ற ரீதியில் ஜெமினி கணேஷன் நடித்த ஒரிஜினல் படத்தைப் பார்க்காதவர்களுக்கு இது புத்தம் புதிய படம் மட்டுமல்ல புது அனுபவமும் கூட. அதே சமயம் 40 மற்றும் 50 வயதுக்காரர்களும் இப்படத்தை விரும்பிப் பார்ப்பதற்குக் காரணம் ஜெமினியின் நடிப்புடன் ஜீவனின் நடிப்பையும் காட்சியமைப்பையும் ஒப்பிட்டு பார்ப்பதற்காகத்தானென்பது திரையுலக ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது. ஒரு திரைப்படம் வெற்றி பெற்றால் உடனே அதே மாதிரியான திரைப்படங்களைத் தயாரிக்க தொடங்கிவிடுவார்கள் என ஏற்கனவே கூறினேன் அல்லவா. இதோ இப்போது அது நிஜமாகிவிட்டது.

'ரஜனிகாந்த்' நடிக்க அன்று பெரிதும் பேசப்பட்ட 'பில்லா', 'ஜானி' கே.பாலச்சந்தரின் 'மன்மதலீலை' போன்றவற்றை இப்போது மறுபடியும் தயாரிப்பதற்கான வேலைகள் தொடங்கி விட்டன. இவற்றில் 'ரஜனிகாந்த்' நடிக்க கே. பாலாஜீ தனது 'சுஜாதா சினி ஆர்ட்ஸ்' க்காக தயாரித்து பிரமாண்டமாக வெற்றி பெற்ற 'பில்லா' இப்போது 'அஜீத்' நடிக்க மலேஷியாவில் வேகமாக வளர்ந்து வருகின்றது. இப்படத்தை 'அறிந்தும் அறியாமலும்', 'பட்டியல்' போன்ற திரைப்படங்களை இயக்கி வெற்றி கண்ட விஷ்ணுவர்தன் இயக்கி வருகிறார். அதே போல அன்று கமலஹாசனுக்கு 'காதல் இளவரசன்' என்ற பட்டத்தை பெற்றுத் தந்த கே.பாலசந்தரின் 'மன்மதலீலை' படத்தை மறுபடியும் கே.பாலச்சந்தரே தயாரித்து இயக்க நினைத்தபோது முதலில் கதாநாயகனாக பேசப்பட்டவர் தனுஷ். ஆனால் அவர் பின்வாங்கவே சிம்பு ஒப்பந்தமாகி உள்ளார். இதே வேளை நடிகை ராதிகா தனது ரேடன் நிறுவனத்துக்காக சரத்குமார் கதாநாயகனாக நடிக்க தயாரிக்கவுள்ள திரைப்படம் என்ன தெரியுமா? அன்று நாகிரெட்டியின் தயாரிப்பில் வெளிவந்து வசூலில் சக்கைப் போடு போட்ட மக்கள் திலகம் எம்.ஜி. ஆரின் 'நம்நாடு' தான்.

இப்போதெல்லாம் பழைய பாடல்களை புதிய வடிவில் 'ரீமிக்ஸ்' என்ற பெயரில் சத்திரசிகிச்சைக்குள்ளாக்கி விடுகிறார்கள். இதனால் பழைய பாடல்களின் பெருமைக்கு களங்கம் ஏற்படுகின்றது. அன்றைய அமைதியான தரமான இசையில் அமைதியுடன் கேட்டு பழகிய பாடல்களை இன்றைய நவீன கருவிகளின் உதவியுடன் சிதைத்து சின்னாபின்னமாக்குவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பழைய பாடல்களும் படங்களும் மறுபடியும் அதே மெட்டில் அதே பெயரில் ரீமேக் செய்யப்படுவதால் தயாரிப்பாளர்களுக்கு வேண்டுமானால் நல்ல வசூலைத்தரலாம். ஆனால் பழையதை பழைய உருவில் பழைய சுவையுடன் பார்க்க விரும்புபவர்களுக்கு இந்த புதுமுறை நிச்சயமாக ஏமாற்றத்தைத்தான் தரும்.

'நான் அவனில்லை' படத்தின் ரீமேக் வெற்றியானது, அன்று பேசப்பட்ட பல நல்ல பழைய படங்களை மறுபடியும் தூசி தட்டி புதிய வடிவத்தில் தருவதற்கு புதிய தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் வேண்டுமானால் தயாராக இருக்கலாம். அதைப் பார்ப்பதற்கு இன்றை ரசிகர்களும் ஆவலுடன் காத்திருக்கலாம். ஆனால் என்றுமே Old is Gold தான். அன்று மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் 'எங்க வீட்டுப் பிள்ளை' யில் சவுக்கை கையிலெடுத்து 'நான் ஆணையிட்டால்...' எனப் பாடிய போது உடம்பு புல்லரித்துப் போனது. அதையே இன்று 'விக்ரம்' செய்தால் நல்லதாகவா இருக்கும்? ஆக, பழையதை

பாலா சங்குபிள்ளை

புதிய பாணியில் சொல்வதென்பது ரசிகர்களின் ரசனைக்குட்பட்டதாக அவர்களின் ஆதரவைப் பெறுவதாக இருந்தாலும் கூட அது நிச்சயமாக பழைய படங்களின் சிறப்பை அதன் தனித்தன்மையை பாதிக்கும் என்பது மட்டும் சத்தியமான உண்மை. மற்றபடி ஜுன் 15 இல் பரபரப்புடன் வெளியாகிய சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்தின் 'சிவாஜி' யைப் பார்த்துவிட்டு அதன் குறை நிறைகளைப் பற்றி விவாதிக்கலாம்.

# கிழக்கு வெளித்தது...

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரணம் என்பது காவியாவுக்கே புரியாத புதிர்தான். ஆனால், ஒவ்வொரு நாளும் சண்டை நடக்கும் என்பது அவருக்குத் தெரிந்த ஒன்று.

நேரம் வேகமாக ஓடிவிட்டதுபோல உணர்ந்தாள் காவியா. மெல்ல மெல்லமேகம் தனது மழைத்தூறல்களை சுருட்டித் தனக்குள் ஒளித்து வைத்துக்கொண்டது. சற்று ஆறுதலுக்காக சுவரோடு சாய்ந்து கண்ணயர்ந்தாள் காவியா. திடீரென்று ஒரு முனகல் குரல் சத்தம் அவளை உலுப்பியது. சுதாகரித்துக்கொண்டு எழுந்துநின்று காதை நன்றாகத் தீட்டிக்கொண்டாள்.

ஆமாம், சந்தேகமில்லை. வசீகரனின் அவலக்குரல்தான் அது. மேலும் மேலும் அவனது முனகல் அதிகரிக்கத் தொடங்கியது. காவியா சற்றும் தாமதிக்கவில்லை. கூச்சல்போட்டு அயலவர்களை அழைத்துக்கொண்டு கதவினை உடைத்து உள்ளே சென்றாள்.

வசீகரன் வலியால் வயிற்றைப் பொத்திக்கொண்டு துடித்துக்கொண்டிருந்தான். அவசர அவசரமாக அவனை வாரியணைத்துக்கொண்டு அந்த அரச மருத்துவமனையை நோக்கிப் பறந்தாள் காவியா.

அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வசீகரனின் உயிரைக் காப்பாற்ற பல மணித்தியாலங்களாக வைத்தியர்கள் போராடிக்கொண்டிருந்தார்கள். வசீகரன் தன் நினைவு இழந்து கிடந்தான். அவனுக்கு இரண்டு சிறுநீரகங்களுமே பழுதாம். எனவே, அவனது உயிரைக் காப்பாற்ற ஒரு சிறுநீரகமாவது தேவை. மருத்துவமனையில் சிறுநீரகம் கையிருப்பு இல்லை என வைத்தியர்கள் கைவிரித்துவிட்டனர். தனது கணவனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக காவியாவே தனது ஒரு சிறுநீரகத்தை கொடுக்கச் சம்மதித்தாள்.

பல மணித்தியாலங்கள் போராடி வைத்தியர்கள் ஒருவாறு வெற்றிபெற்றுவிட்டார்கள். நேரம் செல்லச் செல்ல வசீகரன் மெல்லக் கண் விழித்தான். அவனுக்கு முன்னே டாக்டர் நின்றுகொண்டிருந்தார். தனது உயிர் காப்பாற்றப்பட்டதை உணர்ந்த வசீகரன் டாக்டருக்கு நன்றி சொன்னான். டாக்டரும் பணிவாகவே "இதப்பாருங்க வசீகரன்...ஏதோ நாங்கள் எங்களால் முடிந்ததைச் செய்தோம். ஆனால், உங்கட மனைவி தன் உயிரையே பணயம் வைத்து உங்களுக்கு ஒரு சிறுநீரகம் தந்து உங்களைக் காப்பாற்றியிருக்கா. உண்மையிலேயே உங்க மனைவிக்குத்தான் நீங்க நன்றி சொல்லனும். எத்தனை பேருக்கு இப்படி ஒரு மனைவி வாய்க்கும்? மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பது சரிதான் போலும். நீங்க உங்கட மனைவிக்கே நன்றியைச் சொல்லிக்குங்க" என டாக்டர் கூறினார்.

உண்மையிலேயே வசீகரன் அதிர்ச்சியில் உறைந்துபோய்விட்டான். 'எவ்வளவு பெரிய தியாகம் செய்திருக்கிறாள். ச்சீ...தினமும் குடித்துவிட்டு வந்து எப்படியெல்லாம் அவளைக் கொடுமைப்படுத்தி இருக்கிறேன்' என்று வருந்தினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் காவியா அங்கே பிரசன்னமாகி இருந்தாள். அவளைக் கண்டதும் வசீகரன் கட்டிலை விட்டு எழும்ப முற்பட்டான். ஓடிவந்து அவனை பிடித்துப் படுக்கவைத்தாள் காவியா. மெல்ல அவளது ஒரு கையை தன்கைக்குள் சிறைப்படுத்திக்கொண்ட வசீகரன் "ரொம்ப நன்றி காவியா" என்றான். காவியா எதுவும் பேசவில்லை.

"காவியா... நீ என் கூடப் பேச மாட்டாய் என்று எனக்குத் தெரியும். நான் தான் உனக்கு ஒரு நல்ல புருஷனாகவே நடக்கலையே. நான் உன்னை வெறுத்ததுக்கும் என் அறியாமைதான் காரணம். நான் உன்னை மணம் செய்வதற்கு முன் தறிகெட்டு, ஊர் சுற்றித் திரிந்தேன். என் வாழ்வு கெட்டுப் போய்விடுமோ என்ற பயந்து தான், எனக்குக் கால்கட்டுப் போடுவதாக நினைத்து உன்னை கட்டி வைச்சாங்க. அப்ப எனக்கு அது பிடிக்கல. என் சுதந்திரத்தை கெடுத்தது நீ தான்னு உன்மேல எனக்கு வெறுப்பே வந்திருச்சு. அதுதான் ஒவ்வொருநாளும் உன்னை ரொம்பவும் சித்திரவதை பண்ணிட்டேன். காவியா இந்த மிருகத்தை மன்னிச்சிடு..." எனக் கெஞ்சினான்.

வசீகரன் மீண்டும் காவியாவின் கைகளைப் பிடித்து உலுக்கினான்.

"காவியா... உன் நல்ல மனசை புரிஞ்சுக்காமல் உன்னை இவ்வளவு நாளும் கொடுமை படுத்திட்டேன். காவியா என்னை விட்டு எங்கேயும் போயிடமாட்டாயல்லவா?...!" அவன் மீண்டும் கெஞ்சினான்.

காவியாவுக்கு தன் கணவன் திருந்தி விட்டதில் மிகவும் சந்தோஷம் தான். ஆனால், அவன் திருந்துவதற்கு விலையாக தனது சிறுநீரகத்தை அல்லவா கொடுத்திருக்கிறாள். ஒரு மிருகத்துடன் இவ்வளவு நாளும் வாழ்ந்திருக்கிறோம் இப்பொழுது அவன் திருந்தி விட்டேன் எனும் போது ஏன் அவனை விட்டு பிரிந்து செல்ல வேண்டும்? இனி அவளுக்கும் ஒரு நல்ல வாழ்க்கை பிறக்கும் தானே! இனி அவளுக்கும் கிழக்கு வெளுக்கும் தானே! சந்தோஷத்தில் காவியாவின் இருவிழிகளும் அழுதன.

அவளது அழுகையை பார்த்த வசீகரன் தன்கைகளை உயரத்தூக்கி அவளது தலையில் வைத்து "காவியா சத்தியமா சொல்லுறன். இனிமேல் நான் குடிக்க மாட்டேன்... உன்னை கொடுமைப்படுத்த மாட்டேன். ஒரு நல்ல புருஷனாய் இருப்பேன்." என்றான். அவளது கண்கள் வடிக்கும் கண்ணீரை கண்டு அவனது கண்களும் அழுதன.

ஓ...! இனி அவள் அழுதால் அவனும் அழுவான்!

## மனம்போல் மாங்கல்யம்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

* வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதில்லை. * சரீத் தூய்மையிலும் கவனம் செலுத்துவதில்லை
* அழகாக அலங்கரித்துக்கொள்வதிலும் ஆர்வமின்றி இருத்தல்.
* ஒவ்வொரு விஷயத்திலும் கணவனை மட்டம் தட்டிப்பேசுவது.
* வெளிநபர்களிடம் கணவனின் குறைபாடுகளைவிமர்சிப்பது.
* உடலுறவில் ஆர்வமில்லாமல் இருப்பது.
* சின்னச்சின்ன விஷயத்துக்குக் கூட கோபித்துக்கொண்டு முகத்தைத் திருப்பிக்கொள்வது.
* எப்போதும் மாமியார் பற்றி குறைசொல்லிக்கொண்டே இருப்பது.
* கணவன் வாங்கிவரும் பொருட்களில் குற்றம் -குறை காண்பது.
* சக பெண் பணியாளர்களை கணவனோடு இணைத்து சந்தேகப்படுவது.
* கணவன் -மனைவி பிரச்சினையில்தேவையில்லாமல் தனது பெற்றோர்களைச் சம்பந்தப்படுத்துவது.
* அடிக்கடி, உடல்நலமில்லை என்று சொல்லி வேலைசெய்யாமல் இருப்பது.
* சின்னவிஷயத்தை பெரிதாக்கிச் சண்டை போடுவது.
* சம்பளப் பணத்துக்கு கணக்குக் கேட்பது.
* கணவனின் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும்உரிய மரியாதை தராமலிருப்பது.
* அம்மா வீட்டில் உள்ளவர்களுடன் மணிக்கணக்கில்தொலைபேசியில் அரட்டையடிப்பது.
* கணவனின் பலவீனங்களைக் கிண்டலடிப்பது.

**மனைவிக்குப் பிடிக்காதவை!**

* விடுமுறை நாட்களில் குளிக்காமல், பல் துலக்காமல் இருத்தல். * காரணமில்லாமல் சத்தம்போடுதல்.
* மனைவிக்கு சிகரெட் புகை அலர்ஜியை ஏற்படுத்தும் என்று தெரிந்தும், படுக்கையறையில் சிகரெட் பிடிப்பது.
* சாதாரண விஷயங்களுக்குக் கூட மனைவியை சார்ந்திருப்பது.
* உடைகளைக் கழற்றி அவற்றை கட்டில் மீது வீசியெறிதல்.
* சாப்பிடும்போது 'காக் மொரக்' என சத்தம் எழுப்பிச் சாப்பிடுவது.
* தூங்கும்போது காதைப் பிளக்கும்படி குறட்டைவிடுவது. * தூக்கத்தில் பேசுவது.
* உடல் தூய்மையில் அக்கறையின்மை. * முகத்தில் வழியுமளவிற்கு தலையில் எண்ணெய் தேய்ப்பது.
* சிறு தவறுகளுக்கும் அநாகரிகமாகத் திட்டுதல்.
* சமையல் ருசியாக இல்லாத பட்சத்தில் பாத்திரங்களை வீசி எறிவது.
* போனில் உரத்த குரலில் பேசுவது.
* தேவையில்லாமல் மனைவியின் பெற்றோர் மற்றும் உறவினரைத் தரக் குறைவாகப் பேசுவது.
* கோடைகாலத்தில் குளிக்காமல் வியர்வை நாற்றத்துடன் மனைவியை முத்தமிடுவது.
* மனைவி சொல்வதற்கு நேரெதிராகவே செயல்படுவது.
* எதற்கெடுத்தாலும் மனைவியைச் சந்தேகப்படுவது. * உடை நாகரிகத்தை அலட்சியப்படுத்துவது.
* குழந்தைகளை எதற்கெடுத்தாலும் அடித்து அழவைப்பது.
* மது அருந்திவிட்டு தரக்குறைவாகப் பேசுவது.
* மனைவியின் தோழிகளிடம் ஜொள்ளு விடுவது. * தவறான நபர்களிடம் நட்புக்கொண்டிருத்தல்.
* உடலுறவு முடிந்ததும் மனைவியை ஒரு பொருட்டாக மதிக்காமல் முதுகுகாட்டிப் படுப்பது.
* சுபதினங்கள், பண்டிகை நாட்களின் போதும் சண்டைபோடுதல்.
* வீட்டுவிவகாரங்களில் மனைவியைப் பேசவிடாமல் அடக்கிவைத்திருப்பது.
* வெளியில் கிளம்பும்போது தனக்குப் பிடித்த புடைவையைத்தான் கட்டிக்கொள்ளவேண்டும் என்று மனைவியை வற்புறுத்துவது.
* மனைவியுடன் பணியாற்றும் ஆண்பணியாளர்களின் பெயரைக் கேட்டாலே முகம் சுளிப்பது.

# ராசி பலன்

02-07-2007 முதல் 08-07-2007

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்

அச்சுவினி, பரணி,கார்த்திகை 1

காரியத்தடையுண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவி செய்வர். தாய் நலம். தந்தை நலமில்லை. வீட்டில் ஓரளவு அமைதி இருக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்.

### துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர் பெற்றோர் நலம். வீட்டில் அமைதி ஓரளவு இருக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### ரிஷபம்

கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம்1, 2

காரிய சித்தியுண்டு. சிறுபிரயாணம் அமையலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் உதவுவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

### விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர்நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### மிதுனம்

மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1, 2, 3

காரியத்தடை விலகும். பிரயாணவாய்ப்பு உண்டு. பணம் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. வீட்டில் ஓரளவு அமைதி இருக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத் தடை விலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### கடகம்

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியதடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். வீட்டில் அமைதி இருக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### மகரம்

உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்1,2

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும்.

### சிங்கம்

மகம், பூரம், உத்தராடம் 1

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி குறையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### கும்பம்

அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரிய சித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2


காரியத்தடை விலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

### மீனம்

பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ள கூடும். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

மாநகராட்சி மன்றம்



இந்தியாவிலே மண்ணில் சிற்பம் வடிக்கும் சிற்பக் கலைஞர் ஒருவர் அதைப் பார்த்து ரசிக்கின்றார்.





அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் டைம்ஸ் சதுக்கத்தில் 'நம்பினால் நம்புங்கள்' என்ற விசித்திர நிகழ்ச்சியில் பங்கேற்ற 'பல்லி மனிதன்' எரிக்ஸ்பிரக்யூ தனது மூக்கில் கத்தரிக்கோலை நுழைத்தபடி பிளவுபட்ட நாக்குடன் தோன்றினார். ஜலிசா என்ற பெண் கண்களை பெரிதாக்கிக் காட்டி பார்வையாளர்களை மிரளச் செய்தார்.




சீன தலைநகர் பெய்ஜிங்கில் 2008 இல் நடக்க இருக்கும் ஒலிம்பிக்கின் ஆரம்பவிழா கலை நிகழ்ச்சிக்காக, இப்போதே நடக்கும் நடனப் பயிற்சியில் கலந்துகொள்ளவந்த பெண்கள்



சீனாவில் பாரம்பரிய மருத்துவமுறையில் மருத்துவம் பெறும் பயனாளி. பாரம்பரிய முறைப்படி வால்நட்டுகளையும் மூலிகை இலைகளையும் எரித்து முகவாத நோய்க்கு மருத்துவம் பார்க்கப்படுகிறது.






HOTEL WESTEERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P: +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax: +94 11 4518481 E-mail: info@hotelwesteern.com
Website: www.hotelwesteern.com


## இணையத்தில் ஹரிபொட்டர் படம்; அமெரிக்காவில் பரபரப்பு!

ஜூலை 11 ஆம் திகதி வெளியாகும் ஹரிபொட்டர் படத்தைப் பார்க்க ரசிகர்கள் ஆவலுடன் இருக்கிறார்கள். அந்தத் திரைப்படத்தின் விமர்சனம் முன்கூட்டியே இணையத்தில் வெளியானது அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தியது. இங்கிலாந்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஜே.கே.ரவுலிங் உருவாக்கிய கற்பனைக் கதாபாத்திரம் ஹரி பொட்டர். சிறுவனான ஹரிபொட்டர் மந்திர தந்திர சக்தியால் சவால்களை எதிர்கொள்வதுதான் ரவுலிங் எழுதிய நாவல்களின் மையக்கரு. சிறுவர்களுக்காக எழுதப்பட்ட இந்த நாவல்கள் வயதுமுதிர்ந்தவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் பெற்றுள்ளன.

இதைத் தொடர்ந்து அந்த நாவல்கள் திரைப்படங்களாக எடுக்கப்பட்டன. அதற்கும் அதிக வரவேற்புக் கிடைத்தது. 'ஹரி பொட்டர் அண்ட் தி ஆர்டர் ஒவ் தி பினிக்ஸ்' என்ற திரைப்படம் புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஹரி பொட்டர் வரிசையில் 5ஆவது படம். இந்தப் படம் ஜூலை 11 ஆம் திகதி அமெரிக்காவில் வெளியிடப்படுகின்றது. மறுநாள் இங்கிலாந்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. ரசிகர்களின் ஆவலைத்தை மேலும் அதிகரிக்க திட்டமிட்ட அதன் தயாரிப்பாளர்கள் படத்தைப் பற்றிய விபரங்களை ரகசியமாக வைத்தனர். இந்தப் படம் அண்மையில் விமர்சகர்களுக்காகத் திரையிடப்பட்டது. ஆனால் விமர்சனங்களை ஜூலை 5 ஆம் திகதிதான் வெளியிட வேண்டும் என்று தயாரிப்பாளர்கள் நிபந்தனை விதித்தனர். இந்நிலையில் இப்படத்தைப் பற்றிய விமர்சனம் இணையத்தில் வெளியாகியுள்ளது. அதில், மற்ற ஹரிபொட்டர் படங்களை விட இதில் சுவாரஸ்யம் குறைவு என்று விமர்சகர் கருத்துத் தெரிவித்துள்ளார். அந்த இணையத்தளத்தை ரசிகர்கள் முற்றுகையிட்டு விமர்சனத்தைப் படித்து வருகின்றனர்.

முன்கூட்டியே விமர்சனத்தை வெளியிட்டது யாரென்று படத் தயாரிப்பாளர்கள் விசாரித்து வருகின்றனர்.


GOOD VALUE Eswaran

SOWBAGHYA Hotel Equipments




GOOD VALUE ESWARAN (PVT) LTD.

V.T.V Courts Apartment Complex, Shop No: B1, 426/33
K Cyril C Perera Mw. (Bloemendhal Road) Colombo- 13
Tel No: 2437775, 2435842 Fax: 2448720
email: goodvalue@eswaran.com